# சிறைப் பறவைகள்



து. வைத்திலிங்கம்

Ek/174
SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

# சிறைப்பறவைகள்

து. வைத்திலிங்கம்

# சிறைப்பறவைகள்

து. வைத்திலிங்கம்

முதற் பதிப்பு: மார்கழி: 1986
பதிப்புரிமை ஆசிரியருக்கே.

விலை: ரூபா 10.00

அச்சிட்டோர்:
த நியூ உதயன் பப்ளிக்கேசன்
பிறைவேற் லிட்,
15, இரண்டாம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

# முகவுரை

கல்வி, கடமையுணர்ச்சி, விடாமுயற்சி, சமயப்பற்று முதலியவற்றிலே முன்னணியில் நிற்பவர்கள் எனப் பெயர் பெற்ற யாழ்ப்பாணத் தமிழ் மக்களிடையே நிலவும் குறைபாடுகளாகச் சீதன வழக்கம், சாதித் தடிப்பு, ஒற்றுமையின்மை, அரச உத்தியோக மோகம், சுயநலப்போக்கு ஆகியவை அடிக்கடி சுட்டிக் காட்டப்படுவதுண்டு. இவையும் இவற்றுடன் தொடர்புடைய பொருளாதார, சமுதாயப் பிரச்சனைகளும் நாவல்களையும் சிறுகதைகளையும் கவிதைகளையும் உருவாக்குவதற்குப் பல எழுத்தாளர்களைத் தூண்டி வந்துள்ளன. சமூக சேவையாளர்களும் சீர்திருத்தவாதிகளும் இக்குறைபாடுகளை நீக்குவதற்கு ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளனர். எனினும் இவை மறைந்துவரும் வேகத்தை ஆமை வேகத்திற்குத்தான் ஒப்பிடலாம்.

ஆனால் 1983ஆம் ஆண்டில் நம்நாட்டில் இடம்பெற்ற இனக் கலவரமும் அதையடுத்துத் தமிழ் இளைஞர்கள் எடுத்துவரும் தீவிர நடவடிக்கைகளும் இப்பிரதேச மக்களின் மனப்பான்மையிற் பெரும் மாற்றங்களை விளைவித்துள்ளன. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமை, சுயமுயற்சி முதலியவற்றில் நம் மக்கள் விருப்பும் நம்பிக்கையும் வைத்துள்ளதுடன் இவற்றைச் சாத்தியமாக்கும் செயற்பாடுகளில் ஆர்வமுடன் ஈடுபட்டும் வருகின்றனர்.

பழைய அசமந்தப் போக்கிலிருந்து விடுபட்டுப் புதிய நன் மாற்றங்களை ஆவலுடன் வரவேற்றுக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்திற்குரிய குறுநாவலாக வெளிவருகின்றது "சிறைப் பறவைகள்". சமுதாய மேம்பாட்டிற்குத் தடையாக இருக்கும் பிரச்னைகளைக் கலை நுணுக்கத்துடன் கையாண்டு, அவை நீக்கப்படவேண்டும் என்ற கருத்து வாசகர் மனதில் உருவாகும் வண்ணம் பல சிறுகதைகளை ஆக்கியுள்ள து. வைத்திலிங்கம் இக்குறுநாவலை அழகாக எழுதியுள்ளார். சுயநலமும் பணப்பித்தும் கொண்ட கனகசபை அவருடன் ஒத்துப் போகவும் முடியாமல், அவரை மீறவும் துணிவில்லாமல் தவிக்கும் மனைவி பூரணம், தந்தைக்குக் கீழ்ப்படிவதே தனது கடமை என நினைத்துத் தனது விருப்பு வெறுப்புகளைக் கூடியவரை அடக்கிவாழும் மகள் திலகம், பள்ளிப் பருவத்திற் திலகத்தின்மேல் வைத்த அன்பைக் கண்ணியமாகக் கட்டிக் காத்து, காலங்கடந்த பின்னரும் அவளை மணம் செய்ய முன்வரும் சிவனேசன், பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவேற்ற விரும்பாத தந்தை கனகசபையை வெளிப்படையாகவே எதிர்த்துத் தனக்கென ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும்

புதுமைப்பெண் சரசு, ஆரம்பத்திற் பொறுப்புணர்ச்சியற்ற விளையாட்டுப் பிள்ளையாக இருந்து பின்னர் இனவிடுதலை என்ற இலட்சியத்திற்குத் தன்னை அர்ப்பணிக்கும் சந்திரன் ஆகியோரைச் சுற்றி இந்நாவல் படர்கின்றது.

இப்பிரதேச மக்களிடையே காணப்படும் குறைபாடுகளின் மொத்த உருவமாகத் தெரியும் கனகசபையைச் சிறை அதிகாரி எனக் கொண்டால், நல்ல அம்சங்களை ஒவ்வொரு வகையிற் பிரதிபலிக்கும் திலகம், சரசு, சந்திரன் ஆகியோரைச் சிறைக் கைதிகள் – சிறைப் பறவைகள் எனலாம்.

வீட்டிலே எல்லா லைற்றுக்களும் எரிந்தால் 'கரண்டு'க் காசு ஆயிரக் கணக்கில் வந்துவிடும் எனச் சொல்லி அவற்றை அணைக்கும்படி அடிக்கடி சத்தம்போடும் கனகசபையின் வடிகட்டிய கஞ்சத்தனம்—

பிள்ளைகளுக்குக் கலியாணம் செய்து வைக்க வேண்டுமானால் இலட்சக் கணக்கிற் சீதனம் கொடுக்க வேண்டி ஏற்படுமே என்பதற்காக, பொருந்திவரும் கல்யாணங்களையும் ஏதாவது சாக்குச் சொல்லிக் குழப்பிவிடும் அயோக்கியத்தனம்—

'என்னட்டைக் காசு இருக்குது. ஆர் என்ன செய்யமுடியும்?' என்ற பணத் திமிர்—

'இந்தத் தில்லையற்றை கனகசபை கண்டநிண்ட இடத்திலை கை நனையான். திலகம் குமராய் இருந்து செத்தாலும் பரவாயில்லை, ஆனால் கோயிலடி வாத்தியாரின்ரை பெடியனுக்குச் செய்யமாட்டன்' என்ற சாதித் தடிப்பு—ஆகிய சிறைக் கம்பிகளுக்குள்ளே அகப்பட்டு இச்சிறைப் பறவைகள் அல்லற்படுகின்றன.

கம்பிகளை உடைத்துக் கொண்டு சரசுவும், சந்திரனும் வெளியேறிய பின்னரும், 'கதவு திறக்காதா?' என ஏக்கத்துடன் காத்திருக்கின்றாள் திலகம்.

கதையின் ஆரம்பத்திலேயே அறிமுகமாகும் திலகம் தன் பண்பாலும் பணியாலும் கனிவான மொழியாலும் வாசகர்களின் அன்பிற்கும் அபிமானத்துக்கும் பாத்திரமாகின்றாள். இறுதியில் வாசகர்களின் கண்ணீர்த் துளிகளில் மிதப்பவளும் அவளே. நல்லவளாக இருந்தால் மட்டும் போதாது, வல்லவளாகவும் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தத்தான் ஆசிரியர் இத்தகைய ஒரு முடிவை ஏற்படுத்தினாரோ?

திகிலூட்டும் சம்பவங்கள், விரஸமான உரையாடல்கள் உள்ளத்தைக் கிளுகிளுக்கச் செய்யும் வர்ணனைகள் முதலிய எதுவுமின்றி மிகவும் சுவையாகக் கதையைச் சொல்கின்றார் ஆசிரியர். திலகத்துக்கும் சிவநேசனுக்குமிடையே நிலவும் அன்புப் பிணைப்பை ஆசிரியர் சொல்லும் பாங்கு அதற்கொரு புனிதத்துவத்தை அளிக்கின்றது. புதுமைப்பெண் சரசு, தந்தையை மீறுகின்றாள்; ஆனால் தமிழ் மரபை மீறவில்லை. இனவிடுதலை என்ற இலட்சியத்துடன், எதையும் தாங்கும் இதயத்துடன் துரிதமாகச் செயற்படும் இளைஞர்களைப் பற்றிக் குறிப்பிடும் ஆசிரியர், வெளிநாட்டுப் பணம் கொண்டு வந்து குவித்துள்ள அநாவசிய, ஆடம்பரப் பொருட்களின் மாயக் கவர்ச்சிக்கு அடிமையாகித் தம் வாழ்க்கையை வெறுமையாக்கும் இளைஞர்கள் இருப்பதையும் மறைக்கவில்லை.

'வீட்டிலும் சிறை, நாட்டிலும் சிறை, வென்றிடுவோம் இதை' எனச் சந்திரன் தன் நாட்குறிப்பில் எழுதியதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இந்த நாவலின் தொனிப் பொருளும் இதுதான்.

நல்ல நாவலாசிரியராகத் திரு வைத்திலிங்கம் பரிணமிப்பார் என்ற நம்பிக்கையை இக்குறுநாவல் ஏற்படுத்துகின்றது. அவருக்கு என் பாராட்டுக்கள்.

சிற்பி.

திரு சி. சிவசரவணபவன்,
அதிபர்,
வைத்தீஸ்வரா வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

# சிறப்புரை

அதிகமாக ஒன்றும் எழுதாமலே சிலர் எழுத்துலகில் பிரபலமாகி விடுகின்றனர். ஆனால் ஒரு சிறந்த எழுத்தாளர்; பல சிறுகதைகளும், குறுநாவல்களும் எழுதியவர் அவருடைய திறமைக்கு ஏற்ற அளவில் கூட எழுத்தாளர் வட்டாரத்தில் பெயர் பெறவில்லை. இது ஏனென்று தெரியவில்லை. அளவுக்கு அதிகமான அவரது அடக்கமே காரணமாக இருக்கலாம்.

திரு. து. வைத்திலிங்கம் என்ற எழுத்தாளரைப்பற்றி முன்னர் எதுவும் கேள்விப்படாத நிலையில் நானும் தற்செயலாக 'சிறைப் பறவைகள்' என்ற குறுநாவலை ஒரு நாள் 'சஞ்சீவியில்' வாசித்தேன். பின்பு அதனால் கவரப்பட்டு, தொடர்ந்து 'முற்றும்' வருகிறவரையில் படித்தேன்.

கதை நன்றாக ஆரம்பித்து, நல்லவிதமாக வளர்ந்து சிறப்பாக முற்றிற்று. நான் படித்த மிக நல்ல கதைகளுள் ஒன்றாக இது என் மனத்தில் உறைந்தது.

யாழ்ப்பாணத்தின் பழைய பண்பாட்டில் ஊறிய தமிழ்ப் பெண்ணுக்குக்கே உரிய அடக்கம், நாணம். பொறுப்புணர்ச்சி முதலியன நிறைந்த திலகம், அவருக்குப் பல விதங்களிலும் மாறுபட்ட அவள் தங்கையான புதுமைப்பெண் சரசு, நாங்கள் அடிக்கடி சந்திக்கிற பணம், பொருள், சாதி கதைக்கிற அடைவுகடைக் கனகசபை, அவர் மனைவி பூரணம், பண்பே உருவான சிவனேசன் எல்லாக் கதாபாத்திரங்களுமே மிக இயல்பாகக் கதையில் வந்து எமது உள்ளங்களில் உலவுகிறார்கள். முக்கியமாகக் கதையைக் கொண்டு செல்லும் மொழியும் நடையும் வாசிப்பதற்குத் தட்டுத் தடங்கல் இல்லாமல் ஒரு சுகம் தருகிறது.

பாத்திரங்களின் உரையாடல்களை நூற்றுக்கு நூறு வீதம் பேச்சுத் தமிழில் தருகிறோமென்று இன்று பல எழுத்தாளர்கள், தாங்களும் தடுமாறி வாசிப்பையும் முறித்தடிக்கிறார்கள். இவர்களுக்கு து. வைத்திலிங்கம் அவர்களின் நடை ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது. தேவையான அளவுக்கு மட்டும் (இவரும் ஒரு சிறிதளவு அதிகமாகவே உபயோகித்துள்ள போதிலும்) பேச்சு மொழியை உபயோகித்து கதாபாத்திரங்களை இவர் மிக நன்றாக உருவாக்கியிருக்கிறார். மண் வாசனையும் குறையவில்லை. 'கம கம' க்கிறது.

கதையைப் படித்து முடித்ததும் ஒரு நல்ல கதையைப் படித்தோமென்று மனம் நிரம்புகிறது. எல்லாவித விமர்சனங்களுக்கும் மேலாக ஒரு நல்ல வாசகனின் இந்த மனத்திருப்தியே முக்கியமானது.

யாழ்ப்பாணம்.

-வரதர்.

# உங்களுடன் ஓரிரு வார்த்தைகள்---

1965 ம் ஆண்டு நான் எழுதிய முதற் சிறுகதை 'சுதந்திரன்' இதழில் பிரசுரமான பொழுது எப்படியான மனோநிலையில் இருந்தேனோ, அதே நிலையில் தான் இன்றும் இருக்கிறேன்.

எத்தனையோ சிறுகதைகள், இரண்டு நாவல்கள் , இரண்டு குறுநாவல்கள் என்று எழுதி, காலத்துக்குக் காலம் அவை யாவும் இலங்கையின் பல்வேறு பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. நான் எழுதிப் பிரசுரமான சிறுகதைகளைத் தொகுத்து ஒரு வெளியீடாகக் கொண்டு வரவேண்டும் என்ற எனது நினைப்பு, முயற்சி பல காலமாகவே நிலை கொண்டுள்ளது. ஆனால்,

நான் 'சஞ்சீவி' வார இதழில் எழுதிய குறுநாவலான சிறைப்பறவைகள் எதிர்பாராத விதமாக எனது முதல் வெளியீடாக வந்துள்ளது.

நூலைப்பற்றி சில வார்த்தைகள்:-

எனது அன்றாட வாழ்க்கையிலும், உத்தியோக ரீதியிலும் நான் சந்திக்கும் மனிதர்கள், அறியும் சம்பவங்கள், இவற்றால் என் மனதில் ஏற்பட்ட உணர்வுகளின் பிரதிபலிப்பே இக் குறுநாவல்.

இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி எடுத்துவைக்க எம்மைத் தயார் படுத்திக் கொண்டிருக்கும் கால கட்டம் இது! தொடர்ச்சியான இன்னல்களை தினம் தினம் அனுபவித்தும் அர்த்தமற்ற பத்தாம் பசலித்தனமான கருத்துக்களைத் தலையில் வைத்துக் கூத்தாடும் குடும்பங்கள்; 'இளம் குருத்துக்களை' வாழ விடாது தடுக்கும் ஆரோக்கியமற்ற சமுதாயச் சிக்கல்கள்; படித்தும் அதற்குரிய பலனைக் காணாது விரக்தியின் எல்லைக் கோட்டுக்குத் தள்ளப் படும் இளைஞர்கள்;

அவர்களின் மனக்குமுறல்கள்!

இன்றைய சமுதாய வீதியில் நாம் தினமும் சந்திக்கும் அவலங்கள் ---

கேட்கும் ஓலங்கள் ---

அர்த்தமற்ற மரணங்கள் ---

இவை எல்லாம் எனது மனதில் குமைந்து கொண்டே இருக்கின்றன. கொடுமைகளைச் சாட வேண்டும் என்று என்னுள் எழுந்த சத்தியவேட்கை.

எனது இனத்துக்கு ஏதோ ஒரு விதத்தில் என் பங்களிப்பு இருக்க வேண்டும் என்ற எனது துடிப்பு, இக் குறுநாவலை எழுதத் தூண்டியது.

ஒரு துளி மை ஆயிரம் பேர்களைச் சிந்திக்க வைக்கும் ஆற்றல் உள்ளது என்ற நம்பிக்கை என்னுள் என்றுமே உள்ளது.

'சஞ்சீவியில்' இக் குறுநாவல் வெளிவந்த காலத்தில் இக் கதை பற்றிப் பலர் அபிப்பிராயங்களைத் தெரிவித்துள்ளார்கள். பழம் பெரும் எழுத்தாளர் 'வரதர்' இக் குறுநாவலைப் பாராட்டி நண்பர் 'புத்தொளி' மூலம் சொல்லி அனுப்பினார். என்னுள் ஒரு சிலிர்ப்பு. ஒரு புதிய உத்வேகம்!

இக் குறுநாவலின் நோக்கம் நிறைவேறிவிட்ட திருப்தி எனக்கு ஏற்பட்டது. திரு. வரதர் ஈழத்து இலக்கிய உலகில் பிரபல்யமானவர். சிறந்த படைப்பாளியும், வெற்றிகரமான ஒரு பிரசுர கர்த்தாவுமாவார்.

சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, கட்டுரை போன்ற பல்துறை கைவந்தவரும், ஒரு எழுத்தாளர்கள் பரம்பரையையே உருவாக்கியவருமான திரு. சி.சிவசரவணபவன் - சிற்பி - தந்த முகவுரை அந்தத் திருப்தியை மேலும் உறுதிப்படுத்துகின்றது. இக் குறுநாவல் உங்களிடம் சில எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் எழச் செய்யுமானால், இந்நாவலைப் பிரசுரித்த சஞ்சீவி ஆசிரியர் திரு. ம. வ.கானமயில்நாதன், முகவுரை எழுதிய சிற்பி, சிறப்புரை நல்கிய வரதர் ஆகியோருக்கு உங்கள் நன்றிகளைத் தெரிவியுங்கள்.

இந் நேரத்தில் நான் கல்வி கற்ற யாழ். இந்துக்கல்லூரியையும், எனக்குத் தமிழ் கற்பித்த ஆசிரியர்களையும் என் மனதில் மானசீகமாக வணங்குகின்றேன். இலக்கியத்தில் ஓர் தனியாத ஆர்வத்தை எங்கள் மனதில் தோற்றுவித்த ஆசிரியர் திரு. வை. ஏரம்பமூர்த்தி அவர்களுக்கு என்றும் எனது நன்றிகள்.

காலத்துக்குக் காலம் எனது எழுதுக்களை உவந்தேத்திப் பிரசுரித்தவர்களுக்கும், எழுது எழுது என சதா என்னை எழுதத் தூண்டிய என் இனிய நண்பன் செங்கையாழியான், முகப்பு ஓவியம் வரைந்து உதவிய திரு. வீ. கே (கனலிங்கம்), இந்நூல் வெளிவர வேண்டும் என்று செயற்பட்ட எனது கொக்குவில் நண்பர்கள் எஸ். என். பரராஜசிங்கம்' (துரை) எஸ். செல்வராசா (நாதன்), மா. சின்னத்தம்பி பி. ஏ ஆசிரியர் இவர்கள் யாவரும் என் நெஞ்சில் நிறைந்துள்ளனர். எனது உளமார்ந்த நன்றிகள் அனைவருக்கும் உரித்தாகுக.

**து . வைத்திலிங்கம்**

உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
சங்கானை.

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

# 1

அந்தவிடியற்கால வேளையில் முருகன் கோயில் மணி ஓசை கிராமத்துக்கே பள்ளி எழுச்சி பாடியது. சொல்லி வைத்தாற்போல் காளி கோயில், வராகி அம்மன் கோயில், சந்தி வைரவர் கோயில் என்று மணிகள் எல்லாம் ஒருமுறை அடித்து ஓய்ந்தன. அன்றைய வாழ்வு இரவுப் போர்வையை உதறி எறிந்துவிட்டு எழுந்து கொண்டது.

வழக்கம்போல் முதல் மணி ஓசையிலேயே திலகம் விழித்துக்கொண்டாள். இரவு முழுவதும் எரிந்த படுக்கை அறை லைட் அவளைப் பார்த்து புன்முறுவல் செய்தது. அதை அணைத்தாள். பெரிய பல்பை எரிய வைத்தாள். அறை எங்கும் ஒளி பரவியது. முதலில் தன் வலது உள்ளங் கையைப் பார்த்துக்கொண்டாள். 'தினமும் எழுந்ததும் உள்ளங் கையையும் பார்த்து பின் கண்ணாடியையும் பார்'. — அவளின் பெரிய தாயார் என்றோ ஒருநாள் பேச்சு வாக்கில் கூறி வைத்தாள். திலகம் அன்று தொடக்கம் அந்த வழக்கத்தைப் பின்பற்றி வருகிறாள்.

ஆனால்

இதனால் வந்த நன்மைகள் என்ன....?

திலகத்தின் உள்ளத்தில் விடை கிடைக்காத பெரிய கேள்விக் குறியாக இது அனேக நாட்களாக நிற்கிறது.

அனேக நாட்களா....

இல்லை இல்லை!....

அனேக வருடங்களாக!

கண்ணாடி அவளின் இயற்கையான தோற்றத்தைக் காட்டியது. சீப்பை எடுத்து முன் நெற்றியை மறைத்த கூந்தலை ஒதுக்கி விட்டாள்.

இரண்டொரு வெள்ளிக் கம்பிகள் தலைகாட்டி மறைந்தன.

அவளுள் ஒரு குறுகுறுப்பு.

இது தினமும் நடக்கின்ற சங்கதிதான்.

காலையில் தலை ஒதுக்கிச் சீர்செய்யும் சமயம் 'இதோ நாங்களும் இருக்கின்றோம்' என்று கூறாமல் கூறும் நரை மயிர்களைக் கண்டதும் அவளுக்கு இனம் புரியாத வேதனை, கோபம், ஆற்றாமை எல்லாம் சேர்ந்தே வரும்.

தான் ஏதோ வஞ்சிக்கப்பட்டு விட்டதாக இந்த உலகத்தின் மீதே தாங்கமுடியாத ஆத்திரம் தோன்றும்.

ஆனால் அந்தக் கோப உணர்வுகள் வந்த சுவட்டிலேயே மறைந்துவிடும். பழையபடி அவள் சாந்தமாகி விடுவாள்.

அறையைவிட்டு மெதுவாக வெளியே எழுந்து வந்தாள். எல்லா விளக்குகளையும் எரியவிட்டால் மற்றவர்களின் நித்திரை கலைந்துவிடும் என்பதற்காக நடு அறை லைற்றை மட்டும் எரியவிட்டு அதன் வெளிச்சத்தில் பின்பக்கம் சென்றாள். எல்லா லைற்றுகள் எரிந்தாலும் வீட்டில் பெரிய ரகளை வந்துவிடும். திலகத்தின் தந்தை கனகசபை காலையில் எழுந்து வரும்போது லைற்றுகளைக் கண்டால் கத்துவார்.

'கரண்டுக் காசு ஆயிரக் கணக்கிலை வரப்போகுது. அணையுங்கோ லைற்றுகளை!'

உலகமே அழிந்தது போலக் கத்துவார். அந்தக் கத்தலுக்குப் பயந்து யாரும் அந்த வீட்டில் தேவையில்லாமல் லைற் எரியவிடுவதில்லை.

காலைக் கடன்களை முடித்துக் கொண்ட திலகம் கேற்றிலைக் கழுவி அடுப்பை மூட்டினாள். பின்னர் பெரிய எவர்சில்வர் வாளியைத் தூக்கிக் கொண்டு மாட்டுக் கொட்டிலை நோக்கிச் சென்றாள். லைற் வெளிச்சத்தில் வெள்ளை ஜெர்சிப் பசு கனத்த மடியுடன் எழுந்தது. கன்றுக்குட்டி அவளைக் கண்டதும் ஒருமுறை குரல் கொடுத்தது. அதன் கழுத்தை ஆசையோடு தடவிவிட்டாள். அவளின் கைபட்டதும் கன்றுக் குட்டியின் கழுத்து ஒருமுறை சிலிர்த்தது. திலகம் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

பொங்கும் நுரையுடன் பாலை அடுக்களையில் கொண்டுவந்த



திலகம் மேடையில் அடுக்கி வைத்திருந்த வெள்ளைப் போத்தல்களை நன்றாகக் கழுவினாள். பின் ஒவ்வொரு போத்தலாய் முகர்ந்து பார்த்தாள். அவளுக்குத் திருப்தி வரவில்லை. மறுபடியும் கழுவினாள். மூன்று அரைப் போத்தல், இரண்டு முழுப் போத்தல் என்று பாலை நிரப்பி மேடையில் ஒழுங்காக வைத்தாள். தேயிலையை எடுத்து சாயம் வடித்து வைத்தாள். காலைத் தேநீருக்கான பாலைச் சட்டியில் ஊற்றி அடுப்பில் வைத்தாள்.

இயந்திரம்போல் செயல்கள் நடந்தன.

இதற்குள் ஒவ்வொருவராக எழுந்து தங்கள் அலுவல்களைக் கவனிக்க ஆரம்பித்தனர்.

முதலில் அடுக்களைக்கு வந்த ஆள் பூரணம்.

'திலகம் பால் கறந்திட்டியே?'

'ஓமம்மா!'

தினமும் பூரணம் தன் மகளைப் பார்த்துக் கேட்கும் கேள்வி இது. அவளுக்கு நன்றாகத் தெரியும் திலகம் எல்லாம் ஒழுங்காய் மணிக் கணக்குப் பிரகாரம் ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பாள் என்று. ஆனாலும் அவள் திலகத்தை கேட்கத்தான் செய்வாள்.

அம்மாவின் போக்கு திலகத்துக்கு அத்துப்படி.

அவளும் சலிக்காமல் விடை கூறுவாள்.

'போத்தல் எல்லாம் வடிவாய் கழுவினனியே?'

'எல்லாம் வடிவாய்த்தான் கழுவினனான்'

பூரணம் தேநீரைக் கலந்தாள். திலகம் தனக்கு அளவாய் ஒரு கப்பில் தேநீரை விட்டு மெதுவாகப் பருகினாள்.

'அம்மா ரீ!'

சரசு அட்டகாசமாய் நுழைந்தாள்.

'உன்னுடைய கிளாசை எடுத்துவிட்டுக் குடி!'

'எடுத்து விட்டுத் தாருங்கோ அம்மா!'

'குழந்தைப்பிள்ளை மாதிரி நிற்கிறாய், மேடையிலை கிளாஸ் கிடக்கு விட்டுக் குடி சரசு'

'என்னம்மா... எடுத்து விட்டுத் தாருங்கோ! பஞ்சியாய்க் கிடக்கு!' அவள் கீழே அப்படியே உட்கார்ந்தாள்.

'உனக்கு நெடுகலும் ஒரு பஞ்சி!'

திலகம் மௌனமாக எழுந்து ஒரு கிளாசை எடுத்து தேநீரை விட்டு அதை அப்படியே சரசுவிடம் நீட்டினாள்.

சரசு சிநேக பூர்வமாக ஒரு சிரிப்பைத் தன் முகத்தில் பரவ விட்டபடியே தன் தமக்கையை நோக்கினாள்.

'அப்பாவின்ரை கோப்பையைக் கழுவு திலகம்!'

பூரணம் திலகத்தைப் பார்த்துக் கூறினாள். திலகம் ஒரு பெரிய பச்சை நிறக் கோப்பையை எடுத்து நன்றாகக் கழுவி தாயிடம் நீட்டினாள்.

பூரணம் கோப்பை நிறைய தேநீரை நிரப்பி எடுத்துக் கொண்டு முன் விறாந்தைக்குச் சென்றாள்.

கனகசபைக்கு காலையில் தன் மனைவி பூரணத்தின் கையால் தான் தேநீர் வேண்டிக் குடிக்க வேண்டும். தற்செயலாய் திலகம் கொண்டுபோய்க் கொடுத்தால் அவர் முகம் மாறிவிடும்.

'எங்கை கொம்மா?'

'அவ அங்கை அலுவலாய் இருக்கிறா!'

'அவளுக்கு எப்பவும் அலுவல்தானே. நீங்கள் இரண்டு பேர் இருக்கிறியள். மாறிக்கீறிச் செய்து கொடுத்தால் என்ன?'

அப்படியான கத்தல்கள் எல்லாம் திலகத்துக்கும் சரி சரசுவுக்கும் சரி பழகிவிட்டது.

தாயார் தேநீர் கொண்டு போவதையே பார்த்துக் கொண்டிருந்த சரசு 'களுக்' கென்று சிரித்தாள்.

'என்ன சரசு சிரிக்கிறாய்?'

திலகம் புரியாமல் கேட்டாள்.

'இல்லை, புதுமாப்பிள்ளைக்குக் கொண்டு போவதுபோல அம்மா போகிற வடிவைப் பார்...'

குறும்பு தவழ சரசு முன் வாசலைப் பார்த்தபடியே கூறினாள்.

திலகத்துக்கு முகம் கறுத்தது.

'ஏன் கொண்டு போனால் என்ன? அப்பாவுக்குத்தானே அம்மா கொண்டு போறா'.

'நீ ஒரு மக்கு! இப்பவும் அப்பா புது மாப்பிள்ளைக்கு நடிக்கிறார். நாங்கள் இரண்டு குமர் வீட்டிலை இருக்கிறம்......'

சரசு வார்த்தையை முடிக்காமல் முகத்தை நெளித்தாள்.

'சரசு நீ எழும்பு! போய் சந்திரனை எழுப்பு. பால் கொடுக்க நேரமாச்சு'.

திலகம் சரசுவை வெளியே அனுப்ப எத்தனித்தாள்.

சரசு சொல்லுவதும் உண்மைதான்.

கனகசபை வீட்டில் நடந்து கொள்ளும் முறைகள் சரசுவை அவ்வாறு பேச வைத்துள்ளன.

ஆனாலும் திலகம் பேச்சிலோ செயலிலோ அவைகளை எதிர்க்கவோ, அவை பற்றி விமர்சிக்கவோ ஒரு நாளும் முனையவில்லை.

'இவர் பெரிய மைலோட் மகாராசா. நித்திரையாலை எழும்



பிற நேரத்தைப் பார்!'

கனகசபையின் குரல் வீடெங்கும் ஒலித்தது.

'நேரத்துக்கு எழும்பி நான் நடு வீட்டிலை நிண்டு கூத்தாடவே!'

தன்பாட்டிலை நின்று புறுபுறுத்துக் கொண்டு கிணற்றடியை நோக்கிச் சென்றான் சந்திரன்.

'என்னடா புறுபுறுக்கிறாய்?'

தான் சாய்ந்து படுத்திருந்த ஈசிச் செயரைவிட்டு ஒரு அரை அடி எழும்பினார்.

'அவன் இப்பதான் படுக்கையாலை எழும்பி வாறான். நீங்கள் பேசாமல் கொஞ்சம் இருங்கோ!'

மகனுக்குப் பரிந்து வந்தாள் பூரணம்

'ஓ நீ அவனுக்கு புறக்கிறாசி வேலை பார்! மாடு மாதிரி வளர்ந்திருக்கிறான். ஒரு உருப்படியான வேலை பார்க்கத் தெரியாது.'

தன்பாட்டில் ஏதேதோ சொல்லிக் கொண்டே முன் அறைக்குச் சென்றார் கனகசபை.

சந்திரன் முகம் கழுவிவிட்டு உள்ளே வந்தான்.

'சந்திரன், ரீயைக் குடி! குடிச்சுப் போட்டு பாலைக் கொண்டு போய்க் கொடு!'

திலகம் கூறினாள்.

'இது எனக்கு ஒரு கண்டறியாத உத்தியோகம்!'

சலித்துக் கொண்டே தேநீரை உறிஞ்சினான்.

'அவை அவைக்கு விருப்பமெண்டால் பாலை இஞ்சை வந்து வாங்கினால் என்ன? விடியக்காத்தாலை நான் வீடு வீடாய் திரிய வேணும்'

பத்து வயது முதல் அவன் இந்த வேலையைச் செய்து வருகிறான். உண்மையில் அவனுக்கே அது அலுத்துவிட்டது.

'மனுசன் எண்டால் ஏதாவது வேலைக்குப் போகவேணும். சனியன் பிடிச்ச காலம் ஒண்டும் சரிவருகுது இல்லை.'

தேநீர்க் கோப்பையைக் கீழே வைத்தான்.

'அந்த வங்கி உத்தியோகம் சரிவராது என்ன?'

திலகம் அவனை நோக்கினாள்.

'வங்கியோ... இருக்கிற வங்கியும் மூடிக் கிடக்கிறது. இனி இருபதினாயிரம் முப்பதினாயிரம் எண்டுதானே கேக்கினம்! இந்த மனிசன் ஐந்து சதம் தராது.'

சந்திரனின் பார்வை முன்பக்கம் சென்றது.

'சரி சரி நீ எழும்பு! போத்தல்களை கவனமாக எடுத்துக் கொண்டு போ!'

திலகம் அவசரப்படுத்தினுள்.

அவளுக்கு வீட்டில் ரகளை ஒன்றும் ஏற்படக் கூடாது என்ற கவலை.

இருந்தாற்போல் மேளச் சத்தம் கேட்டது.

'என்ன விஷேசம் கோயில்லை? காலேமை மேளம் கேட்குது.'

பூரணம் கேட்டபடி உள்ளுக்குள் வந்தாள்.

'அது கடைக்கார குமாரசாமியின்ர மகளுக்குக் கல்யாணம். அவை கோயிலிலைதான் வைச்சுச் செய்யினம்!' சரசு விடை கூறினுள்.

'உனக்கென்னண்டு தெரியும்?'

'நேற்று நான் கந்தோராலை வாறபொழுது மணவறை கட்டிக் கொண்டு நிண்டினம்.'

'குமாரசாமியுன்ரை மூத்தமகள் எண்டால்... திலகத்தோடை படிச்ச பெட்டையோ?'

பூரணம் கேட்டுக் கொண்டே முன்னுக்குச் சென்ருள்.

'ஊர் உலகமெல்லாம் கலியாணம் நடக்கட்டும். நீங்கள் இரண்டு பேரும் பார்த்துக் கொண்டு இருங்கோ!'

சரசு மெதுவாகக் கூறினுலும் திலகத்துக்கு அது கேட்டு விட்டது.

'சரசு, நீ போய் குளித்துவிட்டு வாவன். நேரமாகுது.'

சரசு குழ்கொட்டிக் கொண்டே கிணற்றடிக்குச் சென்ருள்.

கனகசபை பெரிய பணக்காரர். பன்னிரண்டு பரப்பு வளவில் பெரிய வீடாகக் கட்டி, பின்பக்கம் நெல்லு வைக்கவென்று இரண்டு அறைகள் கொண்ட கூடமொன்றும் பெரிய மாட்டுக் கொட்டிலுமாய் அந்தக் கிராமத்திலேயே பணக்காரக் கனகசபை என்ற பெயருடன் இருக்கின்ருர். மறவன் புலோவிலும் பரந்தனிலும் பத்து பத்து ஏக்கர் வயல்கள் உண்டு இதைவிட அடைவு பிடிக்கும் தொழிலும் நடக்கின்றது. வட்டிக்கு வட்டி வேண்டி ஊராருடைய வயிற்றெரிச்சலை தாராளமாக கட்டிக் கொண்டவர்.

ஆனுல் சலசலப்புக்கு அஞ்சாத பனங்காட்டு நரியைச் சேர்ந்த சென்மம்.

என்னட்டைக் காசு இருக்கிறது! ஆர் என்ன செய்யமுடியும்! இந்த ரீதியில் கதை போகும்.



# 2

''பழி பாவத்துக்குப் பயப்படாமல் வட்டி வேண்டிக் குவிக்கிருன்! அதுதான் இரண்டு குமரையும் வீட்டில் வைத்துக் கொண்டு இருக்கிருன்!''

கோயிலடியில் பெண்கள் கதைக்கும் வம்பு சமாச்சாரம் கனகசபையின் காதுகளுக்கும் எட்டும்!

ஆனுல் மனுசன் அசையமாட்டான் பாவி!

'அதுசரி, அந்த சேவையர் மாப்பிள்ளையின்ரை சாதகம் திலகத்துக்கு நல்ல பொருத்தம்தானே! ஒருக்கா போய் அவன் தர்கரைக் காணுங்கோவன்!'

பூரணம் குரலைச் செருமிக் கொண்டே கணவனைப் பார்த்துச் சொன்னுள்.

ஏதோ வட்டிக் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்த கனகசபை நிமிர்ந்தார்.

'என்ன சொன்னனுன்?...... பொருத்தம்தான்! அவன் ஒரு லட்சமும் கையிலை தரட்டாம்!'

'கையிலை கொடுக்க முடியாது! வட்டிக் கடையிலை போடுவன். மாதா மாதம் வட்டிக் காசும் வரும்! முதலும் முதலாய் இருக்கும் என்று சொன்னன்! அதுக்கு மாட்டினமாம்! பேந்தென்ன கலியாணம்?'

'உங்களுக்கென்ன விசரே? ஊர் உலகத்திலை இல்லாத வேலை பார்க்கிறியள்! உங்கடை எண்ணத்துக்கு யார் வருவினம்! அவள் இப்படியே சீவியம் முடியுமட்டும் இருக்க வேண்டியதுதான்!'

பூரணத்துக்கு அழுகை முந்திக் கொண்டு வந்தது.

பின்னே இருக்காதா என்ன?

'என்னுடைய அலுவல் எனக்குத்தெரியும் நீ போடி அங்காலை......!'

'ஓ! உங்களுக்கு இதுதான் தெரியும்! காசை வைச்சுக் கும்பிடுங்கோ! அவளவை வயது முத்திச் சாகட்டும்......!'

பூரணத்தின் குரல் வெடித்தது.

'ஓ! சாகட்டும்! நீ போடி! எல்லாம் எனக்குத் தெரியும்!'

ருத்திரமூர்த்தியானுர் கனகசபை.

'அம்மா இஞ்சை வாங்கோ......'

திலகம் அவசரமாய் தாயை அழைத்தாள்

மூக்கைச் சிந்தியபடியே உள்ளே சென்ருள் பூரணம்.

அவளுக்குத் திலகத்தைப் பார்க்க பாவமாய் இருந்தது.

ஊர் உலகத்தில் எல்லாம் கல்யாணம் கார்த்திகை என்று சிறப்பான காரியங்கள் நடக்கும்போது, பணத்தின்மீது பூதம் காக்குமாப்போல தன் கணவன் கனகசபை, தன் பெண்களுடைய வயதையோ, அல்லது அவர்களது உள்ள உணர்வுகளையோ இலட்சியம் செய்யாது கல்லுளிமங்கனாக இருக்கும் தன்மை அவளை வாட்டி எடுத்தது. அவள் யாரிடம் தன் மனப் பாரத்தைச் சொல்லி அழ முடியும்?

தன்னுள் கிடந்து மறுகினாள்.

திலகம் அட்வான்ஸ் லெவல் சித்தியடைந்ததும் அவள் பல்கலைக் கழகத்துக்கு எடுபட முடியவில்லை. அவளின் படிப்பு அத்துடன் முற்றுப் பெற்றது. வீட்டுப் பொறுப்புகள் யாவற்றையும் தனதாக்கிக் கொண்டாள். எல்லாம் கச்சிதமாய் இருக்கும் அவளது காரியங்கள்.

பார்த்தவர்கள் மீண்டும் அவளைத் திரும்பிப் பார்க்கும் தன்மையான அழகு.

"அவள் தாயைப்போல நல்ல வடிவு!"

பொதுவாக கிராமத்தில் பரவியிருந்த அபிப்பிராயம்.

ஏன் பூரணத்தின் அழகை விரும்பியே கனகசபை கல்யாணம் செய்து கொண்டவராயிற்றே! அது வேறு சங்கதி!

எதிலும் ஒரு அடக்கம், நிதானம் திலகத்தினுடையது!

'சரசு பெரிசாய் கத்தாதை! அடக்கமாய் இரு' தங்கையைத் திருத்துவாள்.

'சந்திரன் எழும்பு! நித்திரை கொண்டது போதும்! எழும்பிப் படி!'

இப்படித் தன் இளசுகளை அவள் அன்பால் அடக்கி வீடு பரிமளிக்கச் செய்வாள்.

'திலகத்துக்கு என்ன? பெரிய வீடு வளவு! பரந்தன் வயல்! கை கொள்ளாக் காசு! ஏராளமான நகை நட்டு! சும்மா கொத்திக் கொண்டு போவார்கள்!'

இப்படி ஊரார் கதைத்தாலும் அவர்கள் 'நினைத்தபடியோ திலகம் எதிர் பார்த்தபடியோ அப்படி ஒருவரும் வரவில்லை அவளைக் கொத்திக் கொண்டு போவதற்கு.

கொத்திக் கொண்டுபோக கனகசபை விட்டால்தானே!

தரகர்கள் பலர் கனகசபையின் வீட்டில் வந்து போயினர். சாதகங்கள் கைமாறப்பட்டன. ஆனாலும் ஒன்றுமே பயனில்லாமல் இருந்தன.

ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நொட்டை சொட்டை சொல்லி



வந்த தரகரை அந்த வீட்டை மறுபடி நினைத்துப் பார்க்க முடியாமல் செய்தார் கனகசபை.

அவர் விதித்த நிபந்தனைகள் வேடிக்கையாக இருந்தன. பூரணத்துக்கும் மகள் திலகத்துக்கும் அவை வேதனையாக அமைந்தன.

சீதனம் குடுக்கலாம்! காசாக மாப்பிள்ளையின் கையில் தரமாட்டன்! என்னுடைய அடைவு கடையில் காசு இருக்கும். வருட முடிவில் கணக்கைப் பார்த்து வட்டியை அவை எடுக்கலாம்!

இது அவரின் நிபந்தனைகளில் ஒன்று.

இவருக்கு தான் சளைத்தவன் இல்லை என நினைத்து ஒருவர் தனது மகனுக்கு திலகத்தைக் கேட்டு வந்தார்.

கனகசபையின் நிபந்தனையை அவர் ஏற்றுக் கொண்டார்.

'அதற்கென்ன? காசு நீங்கள் கையிலை தரவேண்டாம்! வருட முடிவிலை வட்டியை எடுத்துக் கொள்ளலாம். அது நல்ல ஏற்பாடு!

கனகசபை விழித்துக் கொண்டார்.

"பெடியன்ரை உத்தியோகம் சரியில்லை"

அவர் இலகுவில் வந்த கல்யாணத்தைத் தட்டிக் கழித்தார்.

கடந்த ஐந்து வருடங்களாக இதே கதைதான்.

திலகத்துக்கு வீட்டில் நடக்கின்ற சங்கதிகள் யாவும் இப்பொழுது மன வருத்தத்தைத் தருவதில்லை.

ஆரம்பத்தில் மற்ற இளம் பெண்களைப்போல் தனக்கு நல்ல ஒரு கணவன் வரவேண்டும், தன் வாழ்வு வசந்தமாக இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டது என்னவோ உண்மைதான்......

ஆனால் இப்பொழுதோ...

அவளுக்கு எல்லா உணர்வுகளுமே மரத்துவிட்டது மாதிரி இருக்கிறது.

"அப்பா பணத்தைச் சேர்த்து வைச்சு அதுக்கு மேலை படுக்கட்டும்! ஏங்களுக்குக் கலியாணமும் இல்லை கருமாதியும் இல்லை! சாகும்பொழுது அவருடைய வாய்க்குள் பணத்தைக் கரைச்சு ஊத்துவம்!"

சரசு ஒருநாள் ஆவேசமாகக் கூறினாள்.

முதல் நாள்தான் ஓர் அருமையான கல்யாணம் குழம்பிவிட்டிருந்தது.

அவளோடு வேலை பார்த்த சாந்தியின் தமையன் தொலைபேசிப் பரிசோதகராய் வேலை பார்த்தவன். பின் வெளிநாடு ஒன்றுக்குச் சென்று கை நிறையச் சம்பாதித்தவன், ஊருக்குத் திரும்பி வந்த பொழுது கல்யாண ஏற்பாடுகள் நடந்தன. சரசு சாந்தியிடம் அவனுடைய சாதகத்தை வேண்டி பூரணத்திடம்

கொடுத்தாள். சாதகம் நல்ல பொருத்தம். இரு பகுதியினரும் ஒருவரை ஒருவர் அறிந்தவர்கள். கல்யாணம் முடிந்ததும் மனைவியைத் தன்னோடு அழைத்துக் கொண்டு போவதற்கான ஏற்பாடுகளுடன் அவன் வந்திருந்தான்.

சிறிது பிணக்கும் இல்லாமல் எல்லாவற்றுக்கும் தலையாட்டிய கனகசபை கடைசியில் பெரிய குண்டு ஒன்றைத் தூக்கிப் போட்டார்.

''பொடியன் சரியான கறுப்பு! திலகத்துக்குப் பொருத்தமில்லையப்பா... இதை கை விடுங்கோ!''

அவ்வளவுதான்...

வழமைபோல் வீடு மௌனமாகியது. இதில் சரசுவுக்குத் தான் கடும் கோபம்!

சரசு இப்படிக் கத்தியதும், திலகம் ஓடி வந்தாள்.

'என்னடி சரசு மரியாதை இல்லாமல் கதைக்கிறாய்!'

'நீ ஒரு விசரி அக்கா... உனக்குத் தைரியம் இல்லை அவ்வளவு தான்!'

'சரசு சொல்லுறதிலை என்ன பிழை? இந்தக் காசைச் சேர்த்து வைத்து என்ன செய்யப் போகிறார்? ஒரு நாளைக்குப் பார் என்ன செய்வன் என்று...!' சந்திரன் கத்தினான்.

'அங்கை என்ன சத்தம்...'

கனகசபை உள்ளே வர அவரவர் தமது அலுவல்களைப் பார்க்கச் சென்றனர்.

**வா**ழ்க்கை வாழ்வதற்கே என்ற தத்துவத்தில் அசையாத நம்பிக்கை கொண்டவள் சரசு. இளமை கொப்பளிக்கும் பருவ காலம் அவளுடையது. காலில் சக்கரம் பூட்டியதுபோல பரபரவென்று எந்த நேரமும் இனம் தெரியாத ஒரு சுறுசுறுப்பு.

'குமர்ப்பிள்ளை அடக்கமாய் இருக்கவேணும் சரசு. சும்மா பல்லை இளிச்சுக் கொண்டு திரியாதை...!'

பூரணம் எந்த நேரமும் தன் இளைய மகளைக் கரிச்சுக் கொட்டியபடிதான்.

ஆனால் சரசுவோ,

எல்லாம் தன் இஷ்டப்படிதான்.

படிக்கும்போதும் அப்படித்தான். ஜீ. சீ. ஈ அட்வான்ஸ் லெவல் பரீட்சை சித்தியடைந்ததும் அவள் அடைந்த மகிழ்ச்சி!

தாய் கத்தக்கத்த, தன் தோழியர் மூவரோடு படம், அது இதுவென்று முன்னூறு ரூபாவரை செலவு வைத்துவிட்டாள்.

அதற்குக் கணக்குக் கேட்டு கனகசபை கிளப்பிய புயலும், அதனால் ஏற்பட்ட ரகளையும் ஓய இரண்டு வாரங்கள் சென்றன.



வீடு ஓரே நரக வேதனைதான்.

கனகசபையின் பிள்ளைகள் மூவரும் படுசுட்டிகள்தான்.

சொல்லி வைத்தாற்போல் திலகம், சரசு, சந்திரன் மூன்று பேரும் அட்வான்ஸ் லெவல் வகுப்பு சித்தியடைந்திருந்தாலும் பல்கலைக்கழக அனுமதி கிட்டவே இல்லை. தரம் பிரிக்கும் யந்திரத்தின் நெஞ்சு கல்லாக இருந்தபடியால் இம் மூவரைப்போல் இன்னும் எத்தனை பேரோ...?

பொது வேலை நிறுத்தம் ஒன்று ஏற்பட்டு மாதக் கணக்கில் இழுபட்டது.

'கச்சேரியில் ஆட்களை வேலைக்கு எடுக்கினமாம். நான் அப்ளை பண்ணப் போறன்'

சரசு இப்படிச் சொல்லிக் கொண்டு வந்தாள் ஒருநாள்.

'உனக்கு ஏன் இப்ப வேலை? அவன் சந்திரனுக்குக் கிடைச்சாலும் பறவாயில்லை.'

பூரணம் கூறினாள்.

'எனக்கேன் வேலையோ...! படிச்சுப் போட்டு அக்கா மாதிரி அடுப்படிக்குள் இருக்க எனக்கென்ன தலை எழுத்தோ?'

சிலிர்த்தெழுந்தாள் சரசு.

'சரசு நீயும் அப்பிளிக்கேசன் போடு, சந்திரனையும் போடச் சொல்லு' திலகம் இடையில் குறுக்கிட்டாள்.

சரசுவும் சந்திரனும் வேலைக்கு விண்ணப்பம் அனுப்பினார்கள். நேர்முகப் பரீட்சைக்கு இருவருக்கும் அழைப்பு வந்தது. இருவரும் சென்றனர். முதலில் அழைக்கப்பட்டது சரசு. நேர்முகப் பரீட்சை மேசையில் மூவர் இருந்தனர். இருவர் வயதானவர்கள். ஒருவர் இளைஞர்.

வயதான இருவரும் நயன பாஷையில் ஏதோ பேசிக் கொண்டனர்.

சம்பந்தமில்லாத கேள்விகள் பல கேட்டனர்.

எல்லாவற்றுக்கும் சிரித்தபடியே சரசு பதிலிறுத்தாள்.

சந்திரனின் முறை வந்தது. அவன் சென்றான்.

'அவர் வாற வரத்தைப் பார்' வயதானது ஒன்று முணுமுணுத்தது. மற்றது அதை ஆமோதித்தது.

சில கேள்விகள்.

ஏனோ தானோவென்று அச்சடங்கு முடிந்தது.

ஒரு வாரத்தில் சரசுவை வேலைக்கு வரச்சொல்லிக் கடிதம் வந்தது. சந்திரனின் முகம் தொங்கி விட்டது. சந்திரனுக்குக் கடைசிவரை கடிதம் வரவே இல்லை.

அவனுக்கு மட்டுமல்ல அவனைப்போல் எத்தனையோ இளைஞர்கள்

அந்தமுறை கஞ்சிக்கு பயறு போட்டாற்போல் பெயருக்கு சில இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் நூற்றுக்குத் தொண்ணூறு விகிதம் பெண்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரசு சந்தோசத்தில் பூரித்துப் போனாள். கனகசபையிடம் சென்று நியமனக் கடிதத்தைக் காட்டினாள்.

'உதுக்கு எவ்வளவு சம்பளம் கிடைக்கும்?'

அவரின் நோக்குமெல்லாம் பணத்தில்தான் இருந்தது

'சம்பளம் கிடைத்தபின்தான் தெரியும்!'

துடுக்காகப் பதில் கூறிவிட்டு சரசு நகர்ந்தாள்.

'அறுந்த மனுசனுக்கு எந்த நேரம் பார்த்தாலும் பணத்தின் நினைப்புத்தான்!'

பூரணம் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

சரசு மாதாமாதம் சம்பளம் எடுக்கும் நாட்களில் தனக்கு ஏராளமான பொருள்களை வேண்டி வருவாள். சேலை, சட்டைத் துணி, பவுடர் என்று விதம் விதமாகக் கொள்வனவு செய்வாள். திலகத்துக்கும் கொடுப்பாள்.

'சரசு எனக்கெதற்கு இந்தத் துணி? வீணாகச் செலவு செய்கிறாய்? அப்பா கண்டால் கத்துவார்'

திலகம் அலுத்துக் கொள்வாள்–

'அக்கா, இப்படி அசடுமாதிரிக் கதைக்காதை! உனக்குத் தேவையானதைக்கூட வேண்டாமென்று மறுக்கிறாயே! உலகத்திலே உன்னை மாதிரி பத்துப்பேர் இருந்தால் அப்பா மாதிரி ஆயிரம் பேர் உருவாகுவார்கள்.'

'சரசக்கா எனக்கு நூறு ரூபாய் தந்துவிட வேண்டும்!'

தம்பி சந்திரன் சிரித்தபடியே கூறி விடுவான். வீட்டில் அவன் கடைசிப்பிள்ளை என்றபடியால் அவனுக்குச் செல்லம்கூட.

ஆனால் கனகசபைக்கு இச் செல்ல விளையாட்டு கண்ணில் காட்டக்கூடாது.

'செல்லமென்ன செல்லம்! தடிமாடு மாதிரி வளர்ந்திருக்கிறான்!'

அவரின் வாழ்த்துக்கள் சந்திரனுக்கு அத்துப்படியாகி விட்டன.

'நீர் கத்திக் கொண்டிரும் நான்வாறன்!' –என்ற ரீதி.

சரசு காசை இப்படித் தண்ணீர் இறைத்த மாதிரிச் செலவழிப்பது கனகசபைக்குப் பிடிக்காது.

'காசுக் கணக்கெல்லாம் என்னமாதிரி? வீட்டுச் செலவுக்குப் நீ தரவேணும்! இப்ப உழைக்கிறாய்தானே!'



'நான் அம்மாவிடம் கொடுக்கிறனான்தானே!' சரசு வாதாடினாள்.

'பூரணம் அவளின்ரை சம்பளம் எவ்வளவு? வீணாய்ச் செலவழிக்கிறாள் போலை கிடக்கு! மாதாமாதம் அப்படியே தரச் சொல்லு. வட்டிக்குக் கொடுத்தாலும் அவளுக்குத்தானே!'

தன் மனைவியிடம் கூறினார்.

'உங்களுக்கு எந்த நேரமும் வட்டி ஞாபகம்தானே! அவள் வங்கியிலை கணக்குத் திறந்திருக்கிறாள் மாசாமாசம் தன்பாட்டுக்குச் சேர்க்கிறாள். நீங்கள் அதிலை தலையிடாமல் பேசாமல் இருங்கோ!'

பூரணம் அவரை அடக்கி விட்டாள்.

என்றாலும் கனகசபை சமாதானம் அடையவில்லை. சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் வீட்டில் புறுபுறுத்தார்.

சரசுவுக்குத் தன் தமக்கை வாய்பேசா மடந்தையாக வீட்டில் அடங்கி இருந்கிறாளே, அவளின் கல்யாண விஷயங்களில் தன் தந்தை அசமந்தமாய் இருக்கின்றாரே, என்றெல்லாம் ஓரே ஆத்திரம்.

தன் ஆத்திரத்தைச் சொல்லிலும் காட்டத் தவறியதே இல்லை.

அக்கா மாதிரி இருக்கக் கூடாது தன் வாழ்க்கையைத் தானே அமைத்துக் கொள்ள வேண்டும் என்று தன் மனதில் அத்திவாரமொன்றைப் போட்டு விட்டாள்.

வேலையில் அவள் காட்டிய ஆர்வமும் உற்சாகமும் எல்லோரையும் கவர்ந்ததில் ஆச்சரியமில்லை.

SITHY VINAY… LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

# 3

வெளியே மழை பொழிந்து கொண்டிருந்தது.

மினிவான்களின் சத்தமும் மோட்டார்சைக்கிள்களின் சத்தமும் காதைப்பிளந்தன.

மேலே சுழலும் மின் விசிறியின் காற்று, மழையையும் மீறின புழுக்கத்துக்கு இதமாக இருந்தது.

ஒவ்வொரு தடுப்புகளாகப் பிரிக்கப்பட்டு எதிரெதிரே, பக்கவாட்டிலே, கண்ணாடி சுவர்களில் ஆயிரக்கணக்கான உருவங்கள் தெரிய, மேலே வர்ண விளக்குகள் கண் சிமிட்ட...

ஐஸ்கிரீம் கடைக்கு இவ்வளவு மிகையான அலங்காரங்கள் அவசியம் தானா என்ற கேள்வி மனதில் எழ, வசந்தன் உட்கார்ந்திருக்கிறான்.

எதிரே சரசு.

வெயிற்றர் வந்து இருவரையும் பார்க்கிறான்.

'என்ன கொண்டுவர?'

மேசையில் கண்ணாடிச் சட்டம் போட்ட 'மெனு'வை எடுத்து சரசு கண்ணோட்டம் விடுகிறாள்.

'புறுட்செலட் ஐஸ்கிரீம் இரண்டு'

வெயிற்றர் நகர்ந்தான்.

'வசந்தன், இப்படி எத்தனை நாளைக்குப் பயந்து பயந்து சந்திக்கிறது? இதுக்கு ஒரு முடிவு எடுக்கவேணும்!'

சரசு முழங்கையை மேசைக்கு முட்டுக் கொடுத்தபடி தன் கன்னத்தை அதில் பரவ விட்டாள்.

'சரசு இப்படிச் சந்திப்பதில்தான் உண்மையான சந்தோஷம்!,

'உங்களுக்கு எப்பவும் இதுதானே ...' அவள் சிணுங்கினாள்.

'சரசு, நீர் இப்படிச் சிணுங்கிக் கதைக்கும் போதுதான் உம்முடைய உண்மையான அழகு வெளிப்படுகிறது.'

வசந்தன் குழைந்தான்.

சரசு பேசாமல் இருந்தாள்.

'சரி சரி கோபிக்காதையும்! எல்லாம் உம்முடைய கையில் தான் இருக்கிறது! நீர் ரெடி என்று சொல்லும். நாளைக்கே அம்மாவைக் கூட்டிக் கொண்டு உம்முடைய வீட்டுக்கு வருகிறன்!'

'வசந்தன் நான் என்னுடைய வீட்டு நிலையை உங்களுக்கு நன்றாகச் சொல்லி வைச்சிருக்கிறன். அக்காவினுடைய கலியாணம் முடியாமல் நான் என்னுடைய விஷயத்தை வெளிப்படுத்த முடியாது.'



'அப்படியானால் நான் என்ன செய்யிறது? நீரே கேள்வியை கேட்கிறீர்! விடையையும் நீரே சொல்லிப் போட்டீர்!'

சரசு ஒன்றும் புரியாமல் மௌனமானாள்.

இதற்குள் ஐஸ்கிரீம் வந்து விடவே மௌனம் கலைந்தது.

சரசு பணியாற்றும் கிளையில்தான் வசந்தனும் பணியாற்றினான். இதில் ஒற்றுமை என்னவென்றால் இருவரும் ஒன்றாகத்தான் வேலைக்குச் சேர்ந்தார்கள்.

நேர்முகப் பரீட்சைக்கு வந்திருந்த சமயம்தான் இருவரும் முதன் முதல் சந்தித்துக் கொண்டனர்.

பக்கத்துப் பக்கத்து மேசை.

காரியாலயங்களில் பணியாற்றும் ஆண்களும் பெண்களும் இளசுகள் என்றால் அங்கே எப்பொழுதும் குறும்பும் குதூகலமும் சொல்லாமல் கொள்ளாமலே குடி வந்து விடும்.

வாழ்க்கையின் வசந்தமான ஏடுகளைப் புரட்டிப் பார்க்கத் துடிக்கும் வண்ணத்துப் பூச்சியாக பரிமளிப்புடன் நின்ற சரசு வசந்தனின் இதயத்தில் இடம் பெற்றாள்.

அந்தப் பிரிவில் கடமையாற்றிய சக ஊழியர்களும் இந்த தொடர்பை வெகு உற்சாகத்துடன் ஆதரித்தனர்.

வசந்தனைப் பொறுத்தவரையில் அவனது காதலில் ஒரு பிரச்சினையுமிருக்கவில்லை.

தந்தையை இழந்த அவன் தாயின் நிழலில் வளர்ந்தவன். தாய்க்கு ஒரே பிள்ளை. அவன்தான் நினைத்ததைச் செயலில் காட்டக் கூடியவனாயிருந்தான்.

தன்னுடன் வேலை செய்யும் பெண்ணைதான் விரும்புவதாகக் கூற, உன் விருப்பம்தான் என் விருப்பம் என்று அவனது தாய் கூறிவிட்டாள்.

நாளொரு வண்ணமாய் வளர்ந்த அவர்களது காதல் முற்றுப் பெறாமலே அப்படியே நிற்கின்றது.

சரசு, வீட்டில் தனது நிலையை எடுத்து யாரிடம் கூறுவது?

உருத்திரமூர்த்தியாய் பண ஆசை பிடித்த தந்தை, அவர் கூறுவதற்கு எதிர் வாதம் செய்யத் துணிவில்லாத தாய், எதுவந்தும் ஏற்றுக் கொள்ளும் சாந்த சொரூபியான திலகம், வயது வந்தும் விளையாட்டுப் பிள்ளையாகவே திரியும் சந்திரன் - இவர்களில் யாரிடம் தன் பிரச்சினையைக் கூறி விஷயத்தை அம்பலமாக்குவாள்?

அவளுக்கேபுரியவில்லை. மனக்குழப்பத்தில் ஆழ்ந்து சதா வேதனைப் பட்டாள்.

அன்று ஐப்பசி வெள்ளிக்கிழமை. கிராமத்தின் மையத்திலே அமைந்து அழகுக் கோலோச்சி, அந்தக் கிராமத்துக்கே முழுச் சோபையைக் கொடுத்துக் கொண்டிருந்தது முருகன் கோயில்.

மதியப் பூசைக்கு கிராமத்துப் பெண்கள் எல்லோரும் வந்து விடுவார்கள்.

கோயில் குருக்கள் சற்று வயதானவர். காரியங்கள் சற்று ஆறுதலாகவே நடக்கும். கோயிலை வலம் வந்து கும்பிடுகிறவர்கள் கும்பிட, மற்றவர்கள் முன் மண்டபத்தில் சாவகாசமாக உட்கார்ந்திருந்தார்கள்.

இப்படியான நேரங்களை கிராமத்துப் பெண்கள் முழுமையாக வரவேற்பார்கள் போலும்!

அங்கு ஊர்வம்புகள் தாராளமாக அடிபட்டுக் கொண்டிருந்தன.

கையில் அர்ச்சனைத் தட்டுடன் பூரணம் கோயிலுக்குள் நுழைந்தாள்.

பின்னால் பதுமைபோல் நடந்து வந்தாள் திலகம்.

அவள் கட்டியிருந்தது ஒரு சாதாரண வொயில் சேலைதான். ஆனால் சேலையின் கடும் சிவப்பு நிறம் அவளது மேனியின் சிவந்த நிறத்தைப் பளிச்சிடவைத்தது.

தோய்ந்திருந்தபடியால் கேசக் கற்றைகள் அவளது கழுத்தில் தோகையென பரவியிருந்தன. ஒற்றை மல்லிகைப்பூ ஒன்று தனித்திருந்து தன்னைத் துல்லியமாகக் காட்டியது.

எல்லோரது கண்களும் அவளையே மொய்த்தன.

கோயிலை ஒருமுறை வலம் வந்து விட்டு, ஓரமாக பூரணம் உட்கார்ந்தாள்.

திலகம் சற்றுத்தள்ளி ஒருக்களித்து உட்கார்ந்து கொண்டாள்.

கோயில் மணியத்தின் மாமியார் கற்பகம் நடுவில் உட்கார்ந்து கொண்டு எல்லா இடமும் தன் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தாள்.

வயது அறுபதுக்குமேல்.

பொதுவாகவே எந்த நேரமும் ஊர் வம்பளப்பதில் வெகு உற்சாகமாக ஈடுபடுவாள்.

கிராமத்துப் பெண்கள் அந்தக் கிழவியிடம் வாய் கொடுப்பதற்கு சற்று யோசிக்கத்தான் செய்வார்கள்.

ஆனால் அதற்காக கற்பகம் சும்மா இருந்து விட மாட்டாள். தானாகவே தேடிப் போய்க் கதைப்பாள்!

மெல்ல நகர்ந்து வந்து பூரணத்தின் அருகில் உட்கார்ந்தாள்.

'என்ன பூரணம் போன வெள்ளிக்கிழமை காணவில்லை?'



'போன கிழமையோ. திலகம் வெளியாலை, சின்னவளும் கந்தோருக்குப் போட்டாள். சமையல் என்னுடைய பொறுப்பாய் போச்சு... அது தான் நான் வரவில்லை!'

பூரணம் பதிலிறுத்தாள்.

'அதுசரி பூரணம், பெட்டையை இப்படியே வைச்சுக் கொண்டிருக்கப்போறியே? எங்கடை முருகேசுவின்ரை மகனுக்குப் பேசி எல்லாம் நல்ல பொருத்தமாம். ஆனால் உன்னுடைய மனுசன் தடுத்துப் போட்டாராம்! உவருக்கு என்ன கொழுப்பே?'

'அதுகளைப் பேசி இப்ப என்ன சுகம்? விடுங்கோ கதையை' பூரணம் கதையை முடிக்க விரும்பினாள்.

'இப்படிக் கதைக்காதை பூரணம்! வீட்டிலை ஒரு குமர் இருந்து பெருமூச்சு விடுகிறது வீட்டுக்குத்தான் கூடாது.'

'உங்களுக்கு என்ன இல்லை? காசு இல்லையோ? காணி இல்லையோ இவ்வளவும் வைச்சுக் கொண்டு முழுசிக் கொண்டு திரியிறியள்! அங்கை பார்க்க வில்லையே எங்கடை சண்முகத்தின்ரை பெட்டையும் உன்னுடைய மோள் திலகத்தின்ரை வயது தானே! கையிலை ஒரு சதமும் இல்லை! அவனும் ஓடி ஆடித் திரிஞ்சு மோளுக்கு ஒரு கலியாணம் செய்து போட்டான் தானே!'

ஆக உங்களுக்குத்தான்......'

கிழவி வார்த்தையை இழுத்தாள்.

இவ்வளவும் முழு நக்கலாகப்பட்டது பூரணத்துக்கு.

'நீங்கள் சொல்லுறது எல்லாம் சரியக்கா! நான் தனிக்கையாய் நின்று என்ன செய்ய முடியும்? மனுசன் கல்லு மாதிரி இருக்கிறார் இனி திலகத்தின்ரை தலைவிதி என்னவோ அப்படித்தான் நடக்கும்!'

பூரணம் பெருமூச்சுடன் கூறினாள்.

'சும்மா விதியெண்டு சொல்லிப்போட்டு பேசாமல்கிடவாதை! எங்கையாலும் கெதியில் செய்யப்பார்...இப்ப என்ன வயது அவளுக்கு?'

'இந்த கார்த்திகையோடு இருபத்தி ஏழு தொடங்குது'

'அப்ப இவள் என்ரை இரண்டாவது பேத்தி காந்தியின்ரை வயதுதான். அவள் இப்ப இரண்டு குழந்தைகளுக்கு தாயாய் போனாள்!'

இதற்குள் மணி அடிக்கவே அவர்களது பேச்சு முடிந்தது. பூசை மணிச்சத்தம் கேட்காவிடில், கற்பகம் பூரணத்தைலேசில் விட்டிருக்கமாட்டாள்.

பூசை முடிந்து அர்ச்சனை எல்லாம் முடிந்து ஒவ்வொருவராகக் கோயிலை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர். திலகம் ஆறுத

லாக பிரகாரத்தைச் சுற்றி வலம் வந்தாள். இரண்டாவது தரம் வலம் வந்து பிள்ளையார் சந்நிதியை சுற்றி கீழே குனிந்து வணங்கி விட்டு எழுந்தாள்.

'என்ன திலகம் உம்மைக் கண்டு கனகாலம் ...!' கேட்டது ஆண்குரல். திடுக்கிட்டு நிமிர்ந்தாள் அவள். சிவநேசன்-

அவளோடு ஒன்றாகப் படித்தவன்.

அனேக வருஷங்களுக்குப் பின்பு இன்று அவனைப் பார்க்கிறாள். அவன் எங்கேயோ எஸ்டேட் பக்கம் அப்போதிக்கரியாய் வேலை பார்க்கின்றான் என்று கேள்விப்பட்டிருக்கிறாள்.

பாடசாலையில் படிக்கும்போது சிவனேசன் மிகவும் ஒழுங்கான பையன் என்று பெயரெடுத்தவன். படிப்பிலும் விளையாட்டிலும் மிகக் கெட்டிக்காரனாய்த்திகழ்ந்தவன்.

திடீரென்று இன்று கண்டவுடன் திலகம் சற்றுத் திகைப்படைந்தாள்.

'என்ன பேசாமல் நிற்கிறீர்...?'

சிவனேசன் சிரித்தபடியே கேட்டான்.

அடேயப்பா! இப்படி ஒரு கம்பீரமா? நல்ல உயரமான தேகவாகு. அகன்ற நெற்றியில் விழுந்து உறவாடிக் கொண்டிருந்த சுருள் கேசமும், வரிசையாய் அமைந்து சிரிக்கும்போது பளிச்சிடும் பற்களும் அகன்ற மார்பும் மாறி மாறி திலகத்தினுடைய மனத்திரையில் மின்னலடித்தது.

'கனநாளைக்குப் பிறகு இன்டைக்கு உங்களைப் பார்க்கிறேன் ... நீங்கள் இப்ப எங்கே...லீவிலை வந்திருக்கிறியள் போலை கிடக்கு!'

'லீவோ... அவன்கள் எங்களை ஒரே நீண்ட லீவிலை அனுப்பி இருக்கிறான்கள்! நான் இப்ப மூன்று மாதமாக அனுராதபுரத்தில்தான்வேலை. தெரியும் தானே இப்ப அங்கை உள்ள நிலை! தப்பிப்பிழைத்து ஓடி வந்திருக்கிறம். இனி எப்ப போகிறது. என்று இன்னும் யோசிக்க வில்லை. கனநாளாய் முருகன் கோயிலுக்கும் வரவில்லை. இண்டைக்கு ஐப்பசி வெள்ளிதானே...'

'அது சரி எப்படிச் சுகமெல்லாம்? ஆள்நல்லாய் மாறிப்போனீங்க...'

'சுகமாய் இருக்கிறன்!' திலகம் பதிலிறுத்தாள்.

''ஏதாவது விசேஷம் நடந்தமாதிரித் தெரியயில்லை......?'' சிவனேசனது சிரிப்பில் குறும்பு தவழ்ந்தது.

'விசேஷமெண்டால்...?'

திலகம் புரியாமல் கேட்டாள்,

'இது விளங்காவிட்டால் நான் என்ன செய்யிறது? இப்பவும் தனி ஆள் மாதிரித்தான் தெரியுது...!

'தனி ஆள்தான்!'

திலகத்தின் பதில் சிரிப்புடன் இருந்தாலும் சுரத்தில்லாமல் இருந்தது.



'உங்களுக்கு எத்தனை குழந்தைகள்? எங்கை படிக்கினம்?' திலகம் கேட்டாள்.

'குழந்தைகளோ... எனக்கோ...' ஓகோ என்று பலமாக சிவனேசன் சிரித்து விட்டான்.

'நானும் தனியாள்தான்! எனக்கும் இன்னும் கல்யாணம் நடக்கயில்லை.!'

இப்படிச் சொல்லி விட்டு ஆவல் ததும்ப திலகத்தை எதிர் நோக்கினான்.

இந்தப்பதில் திலகத்தின் இதயத்துக்கு இதமாக இருந்ததோ? திலகம் தலையைக் குனிந்து கொண்டாள்.

'நீங்கள் ஒவ்வொரு வெள்ளியும் வாறதோ...' சிவனேசன் கேட்டான்.

'ஓமோம்! ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மத்தியானப் பூசைக்கு வாறனான். இது சுகம். பின்னேரப் பூசைக்கு வந்து போகிறது கஷ்டம்...'

'சரி நீங்கள் கும்பிடுங்கோ! நான் வாறன். ஆறுதலாய் சந்திப்பம்!'

சிரித்தபடியே கூறினான். பதிலுக்கு சிரித்தபடியே தலையாட்டி விட்டு திலகம் அவசரமாக அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

சிவனேசன் அவள் போவதையே ஆவலுடன் பார்த்துக் கொண்டு நின்றான்.

கோயிலிலிருந்து வீடு திரும்பும்வரை திலகம் ஒரே பிரமிப்பில் இருந்தாள். சிவனேசனின் பேச்சும் அந்த வசீகரமான சிரிப்பும் அவளைப் போட்டு அலைக்கழித்தன.

ஏதோ காலாதி காலமாய் சிவனேசனின் வரவுக்கும் அவனது சிரிப்புக்குமாய் அவள் ஏங்கி இருந்தாள் என்ற அர்த்தமில்லை. அது அவளுக்கே புரிந்தது.

ஆனாலும்-

இந்த மனம் இருக்கின்றதே!

அது வெட்கம், ரோசம் இல்லாதது!

நான் ஏன் அவரைப் பற்றி விசாரிக்க வேண்டும்? கேள்விக் கணைகள் அவளது நெஞ்சை மாறி மாறித் துளைத்தன. ஆனால் விடை காண முடியாமல் நின்றாள். சிவனேசனின் வீடும் அதே கிராமத்தில் தான் இருக்கிறது. நாலு தெருக்கள் கடந்து செல்கின்ற தூரம். ஆனால் இவ்வளவு காலமும் சிவனேசனைப் பற்றி தெரியாமலே இருந்து விட்டாளே.

அவள் தான் வீட்டுக்குள்ளேயேதன்னை மாய்த்துக் கொண்டவளாயிற்றே!

உலகத்து நடப்புகளைப் பற்றி கவலைப்படாமலே வாழப்பழகிக் கொண்டாளோ?

சிந்தை குழம்பியது.

# 4

ஆண் பெண் இருபாலாரும் கல்வி கற்ற அந்தப் பாடசாலை கிராமத்தின் மையத்தில் இருந்தது.

ஆரம்ப வகுப்பு முதல் கடைசிவரை சிவனேசனும் திலகமும் ஒன்றாகச் சேர்ந்தே படிக்கும் வாய்ப்பு இருந்தது.

சிவனேசன் மிக நன்றாகப் பாடுவான். நல்ல குரல் வளம்.

ஏழாம் வகுப்பில் என்று ஞாபகம். ஏதோ ஒரு தவணைப் பரீட்சை. சங்கீத ஆசிரியர் சந்திரசேகரம் ஒவ்வொருவரையும் அழைத்துப் பாடச் சொல்லி புள்ளிகள் போட்டுக்கொண்டிருக்கின்றார்.

சிவனேசனது முறை வருகிறது.

'சொப்பன வாழ்வில் மகிழ்ந்து...'

தியாகராஜ பாகவதரது பாடல் மிகக் கம்பீரமான ஒலியில் காற்றுடன் தவழ்கிறது.

அந்த வகுப்பே அமைதியாகிறது.

அந்த வகுப்பு மட்டுமா?

அடுத்த வகுப்பு மாணவ, மாணவிகள் சிலர் எட்டி நின்று பார்க்கின்றனர்.

பாட்டு முடிந்ததும் சந்திரசேகரம் ஆசிரியர் எழுந்தார் 'சிவனேசனை அப்படியே அவனது இரு தோள்களிலும் கையைப் போட்டு அணைக்கின்றார்.

'தம்பி! என்ன குரலடா உனக்கு...'

'சங்கீதத்தை ஒரு நாளும் கைவிட்டு விடாதை!'

அவரது குரல் தளதளத்தது உணர்ச்சியில், அவனுக்கு நூற்றுக்கு நூறு புள்ளிகள்!

வெள்ளிக்கிழமைகளில் காலை நேரப் பிரார்த்தனையில் சிவனேசன் பண்ணிசை பாடுவான்.

'காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி...'

இந்தத் தேவாரம் பாடும்போது கண்களை மூடிக்கொண்டு கேட்டுக் கொண்டிருப்பாள்.

அவளது கன்னக் கதுப்புகளில் மெல்லென வடியும் ஒரு கண்ணீர்த் துளி. யாரும் அறியாமல் அவளது கை அதை மெல்லத் துடைத்து எறியும்.

பின் ஏனோ தெரியாது, அவளையும் அறியாது ஒருவித நாணத்



துடன் சாம்பி நிற்பாள்.

இது அவளுக்கே புரிந்திருக்காத ஓர் உணர்ச்சிக் கலவை!

ஒருமுறை பாடசாலை ஸ்தாபகர் விழா விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

சங்கீத ஆசிரியர் சந்திரசேகரம் ஒரு புராண நாடகத்தை ஒழுங்கு செய்தார்.

சுந்தரமூர்த்தி நாயனார் கதையைத் தேர்ந்தெடுத்தார்.

நல்ல குரல் வளமும் முகப்பொலிவும் கொண்ட சிவனேசன் சுந்தரமூர்த்தி நாயனாராகவும் பாடசாலையில் வயது வந்த பிள்ளைகளிலேயே மிக அழகியான திலகம் பரவையாராகவும் நடிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதலில் திலகம் நடிப்பதற்கு மிகவும் கூச்சப்பட்டாள்.

'நீர் ஆகத்தான் கூச்சப்படுகிறீர்! பயப்படாமல் நடியும்!'

சிவனேசன் உற்சாக மூட்டினான்.

சந்திரசேகரம் ஆசிரியர் இவளது கூச்சத்தைப் போக்கடிக் பெரும் பாடுபட்டார்.

'எடி திலகம் வெருண்டடிக்காமல் நடிக்கப் பழகு!'

'நாடகத்தை குட்டிச் சுவராக்கி விடாதை!'

இப்படிக்கூறி வெகுகவனமாக நாடகத்தை இயக்கினார். நாடகம் எதிர்பார்த்ததைவிட மிகச் சிறப்பாக நடந்தேறியது. இருவரது நடிப்பையும் சகலரும் பாராட்டினர்.

அதற்குப் பின்பு இருவருக்கும் பாடசாலையில் மாணவ மாணவியர்களிடையில் நல்ல செல்வாக்கு.

'பரவை நாச்சியார் வாறா...'

மாணவர்களது கேலிக் குறிப்புகள் திலகத்தை வெட்கத்தினால் தலைகுனிய வைக்கும்.

அப்பாடசாலையில் இருந்தது மிகச் சிறிய நூலகம் ஒன்றுதான். திலகம் தன் பொழுதை அனேக புத்தகங்கள் வாசிப்பதிலேயே செலவழிப்பாள்.

ஒருநாள் அவள் ஏதோ ஒரு புத்தகத்தை தேடிக் கொண்டிருந்தாள்.

'நானும் கனநேரமாய் பார்க்கிறேன்! அப்படி என்ன தேடுகிறீர்?'' வலியப் பேச்சுக்கு இழுத்தான் சிவனேசன்.

திலகம் பேச்சை வளர்க்க விரும்புவதில்லை. சகமாணவர்களது கண்கள் தங்களையே மொய்ப்பதை அவள் உணர்ந்து கொண்டாள்.

சிரித்துவிட்டுபதிலிறுக்காது நின்றாள்.

'யாரும் கேட்டால் மறுமொழி சொல்லக்கூடாது என்று அப்பா அம்மா சொல்லி விட்டவையோ...?' சிவனேசன் குறும்பு தவழக் கேட்டான்.

'சீ ..! அப்படியில்லை...!' அவசரமாகக் கூறினாள் திலகம்.

'என்ன புத்தகம் தேடுகிறீர்?'

மீண்டும் சிவனேசன்.

'டாக்டர் மு. வ. வின் அகல் விளக்கு'

'அது இங்கு கிடையாது! நீர் இரண்டு நாள் பொறும். நான் கொண்டு வந்து தாறன்.'

'வேண்டாம் வேண்டாம்! நான் சும்மா... ஒருக்கா பார்க்கலாம் எண்டு...'

திலகம் அவசரமாக மறுத்தாள்

'பரவாயில்லை நானல்லோ கொண்டு வந்து தாறன் நீர் வாசியும்'

அதற்குள் பல ஒலிகள் அங்கு எழுந்தன.

'உஸ்! உஸ்! ஆ! ஆ!'

சில்லறை விஷமத்தோடு கூடிய சக மாணவர்களது சீட்டி ஒலிகள் மெதுவாக எழுந்தன.

'அங்கை என்ன சத்தம்...?'

லைபிரரியன் பொன்னம்பலம் ஒரு பழைய ஆள். சோடாப் புட்டி கண்ணாடிக்குள்ளால் இங்கு பார்வையைச் செலுத்தினார்.

திலகம் மிரண்டு விட்டாள்.

அவளுக்கு காதுகள் குப்பென்று அடைக்க அங்கிருந்து விரைவாக வெளியேறி தனது வகுப்புக்குச் சென்றுவிட்டாள்.

அது நடந்து இரண்டு நாட்களின் பின் பாடசாலை தொடங்கு முன் சிவனேசன் திலகம் தேடிய 'அகல் விளக்கு' புத்தகத்தை அவளிடம் நீட்டினான்.

'படிச்சுப்போட்டு ஒரு கிழமைக்குப் பின்பு தாரும்!'

திலகம் முதலில் அதை வேண்டவில்லை.

'இதென்ன வீண்வேலை! நான் தேடிப் பார்த்தனான்...... நீங்கள்......'

'பரவாயில்லை, இது பொது நூலகத்திலிருந்து எடுத்து வந்தனான். நீர் கொண்டுபோம்'

அவன் புத்தகத்தை நீட்டியபடியே நின்றிருந்தான்.

வேறு வழியின்றி திலகம் புத்தகத்தைப் பெற்றுக் கொண்டாள்.



ஆனால் இதைத் தொடர்ந்து, சிவனேசன் பலமுறை வெவ்வேறு புத்தகங்களை பொது நூலகத்திலிருந்து எடுத்து வந்து திலகத்திற்குக் கொடுத்தான்.

திலகம் மிரண்டடிக்கவில்லை.

சிவனேசனுக்கு இது மிகவும் விருப்பமானதொரு காரியமாய் இருந்தது.

ஒருநாள் புத்தகமொன்றைக் கொடுக்கும்போது அவனது செய்கையில் சிறிது தயக்கமாய் இருந்தது.

திலகத்துக்கு அது ஒரு புதுமாதிரியாய் இருந்தது.

'திலகம்... ஒரு கடிதம் இருக்கிறது படித்துப் பாரும்!'

சிவனேசன் சற்றுத் தயங்கியே இதைக் கூறினான்.

'கடிதமா?'

திலகம் விழித்தாள்.

'ஓமோம்! புத்தகத்துக்குள் இருக்கிறது. வீட்டை கொண்டு போய் படிச்சுப் பாரும்.''

அவன் இதைக் கூறிவிட்டு சடாரென்று அப்பால் போய் விட்டான்.

வகுப்புக்குச் சென்ற திலகம் முள்ளில் மேல் இருப்பதுபோல் அமர்ந்திருந்தாள்.

வீட்டுக்குச் சென்ற திலகம் இரகசியமாகக் கடிதத்தைப் படித்துப் பார்த்தாள்.

'திலகம், நான் உன்னை மனமார நேசிக்கின்றேன். படிப்பு முடிந்து எமக்கென்று ஒரு வாழ்க்கையை அமைக்கும்போது உன் நெஞ்சில் என்னை இடம்பெறச் செய்வாயா......'

இந்த ரீதியில் சிவனேசன் நீண்டதொரு காதல் கடிதம் எழுதியிருந்தான்.

அவளுக்கு ஒரே பிரமிப்பாய் இருந்தது அத்துடன் பயமாயும் இருந்தது.

அடுக்களைக்குச் சென்று யாருமறியாமல் அந்தக் கடிதத்தை எரித்து விட்டாள்.

அடுத்த நாள் பாடசாலை ஆரம்பமாகுமுன் சிவனேசன் அவளைக் கண்டுவிட்டான்.

'திலகம்'

அழைத்தபடியே ஆவலோடு அருகில் வந்தான்.

'கடிதம் படித்தீரா'

திலகம் மௌனமாய் நின்றாள்.

'கோபமா'

மிகவும் பரிதாபமாகக் கேட்டான்.

மீண்டும் திலகம் பதில் கூருமல் மௌனம் சாதித்தாள்.

'ஒன்றும் கதையாமல் நிற்கிறீரே! என்ன யோசனை......?'

சிவனேசன் ஆவலோடு கேட்டான்.

'தயவுசெய்து என்னைக் குழப்பாதீர்கள்! நான் இதுவரை அந்த விஷயங்களைப்பற்றி ஒன்றுமே யோசிக்கவில்லை. தயவுசெய்து இனி இப்படிக் கஷ்டம் தரவேண்டாம்! நான் படிக்கவேணும்...!'

திலகம் பதில் கூறிவிட்டு புத்தகங்களை தன் நெஞ்சோடு அணைத்தபடியே சென்றுவிட்டாள்.

பேயறைந்தவன்போல் சிவனேசன் திலகம் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டு நின்ருன்.

இச் சம்பவத்துக்குப் பிறகு சிவனேசன் புத்தகங்கள் கொடுப்பது நின்றுவிட்டது.

திலகமும் முன்புபோல் சிரிப்பது இல்லை. சிவனேசனது வழமையான உற்சாகம் மறைந்துவிட்டது.

திலகம் பாடசாலையைவிட்டு விலக முன்னரே சிவனேசன் வேறு பெரிய கல்லூரி ஒன்றுக்குக் கல்வி கற்கச்சென்றுவிட்டான்.

திலகம் இந்த நிகழ்ச்சியை மறக்க முயன்றும் பல நாட்கள் முடியவில்லை. சிவனேசனது சிரித்த முகமும், அவள் அளித்த பதிலை கண்ட அவனது முகம் கறுத்ததையும் அவளால் மறக்க முடியவில்லை.

அன்று அமாவாசை தினம்.

கனகசபை அமாவாசை விரதம் அனுட்டிக்கும் வழக்கமுடையவர். பூரணத்துக்கு உடம்பு சரியில்லை என்று அடுக்களையில் ஒரு மூலையில் முடங்கிக் கொண்டிருந்தாள்.

திலகம் ஒண்டியாகவே மதியச் சமையலுக்கான காரியங்களைச் செய்து கொண்டிருந்தாள். பூரணம், மகள் அவசரம் அவசரமாகச் சமைத்துக் கொண்டிருப்பதைக் கண்டவள் 'சரசு சரசு' என்று கூப்பிட்டாள்.

சரசு தன் அறையில் ஏதோ மும்மரமாகப் படித்துக் கொண்டிருந்தாள்.

அவள் அசையவில்லை.

'இவளுக்கு என்ன காது அடைச்சுப் போட்டுதோ! எடி சரசு...'



'நீங்கள் கொஞ்சம் கத்தாமல் சும்மா இருங்கோ' திலகம் கூறிஞள்.

'மற்ற நாட்களிலை கந்தோர் என்று திரிவாள். இண்டைக்கென்ருலும் இஞ்சை வந்து கூடமாட அலுவலைப் பார்த்தால் குறைஞ்சு விடுவாளே!'

'அவள் ஏதோ படிக்கிருள் போலை கிடக்கு! இஞ்சை வேலை எல்லாம் முடிஞ்சுது தானே'

திலகம் தங்கைக்காகப் பரிந்து வந்தாள்.

இதற்கிடையில் கேற் வாசலில் சைக்கிள் மணி கேட்டது. திலகம் எட்டிப் பார்த்தாள்.

பேப்பர்க்காரன் அன்றைய தினசரியை எறிந்துவிட்டு, சென்ற மாதக்காசுக்கான ரசீதை நீட்டிஞன்.

'நான் வாறன், அதுக்குள்ளை பேப்பரை எறிஞ்சு போட்டு நிற்கிருய் என்ன!'

திலகம் கூறிவிட்டு குனிந்து பேப்பரைக் கையில் எடுத்துக் கொண்டு அவனிடமிருந்து ரசீதைப் பெற்றுக் கொண்டாள்.

பேப்பர்க்காரப் பையன் சிரித்துக் கொண்டு நின்ருன்.

'சரசு பேப்பர் காசாம் எடுத்துக் கொடு!'

சொல்லிக் கொண்டே திலகம் சரசுவின் அறைக்குள் நுழைந்தாள்.

திலகத்தைக் கண்ட சரசு திடுக்கிட்டு எழுந்தாள்.

அவள் அவசரம் அவசரமாக ஏதோ ஒரு கடிதத்தை மேசையிலுள்ள புத்தகத்தினுள் மறைக்க முற்பட்டாள். சடாரென்று கடிதத்தினின்றும் இருந்து ஒரு போட்டோ கீழே வீழ்ந்தது.

'இது யாருடைய போட்டோ?'

கேட்டுக் கொண்டே திலகம் கீழே குனிந்து போட்டோவை எடுத்துப் பார்த்தாள்.

சரசு இதை எதிர்பார்க்கவில்லை.

அவளின் முகம் வெளிறிப் போய் விட்டது.

'அதை இஞ்சை கொண்டா!'

வெடுக்கென்று திலகத்தின் கைப்பிடியிலிருந்து போட்டோவைப் பறித்தெடுத்தாள்.

'இப்ப என்ன வேணும்? ஏன் கத்திருய்?'

சரசுவின் கேள்வி சம்பந்தமில்லாமல் இருந்தது.

'நான் கத்தவில்லை! பேப்பர்காரப் பெடியன் வந்திருக்கிருன், போன மாதக் காசாம் கொடு!'

சரசுவின் ஏற்பாடுதான் பேப்பர். கனகசபை பக்கத்தில் உள்ள கோயிலடி வாசிகசாலைக்குப் போய் பேப்பர் எல்லாம் படித்து விடுவார்.

சரசு தான் உத்தியோகம் பார்க்கத் தொடங்கியது முதல் மாதா மாதம் பேப்பருக்கான பணம் கொடுத்து வருகிறாள்.

ரசீதை மேசைமேல் வைத்துவிட்டு திலகம் மௌனமாக அறையைவிட்டு வெளியேறினாள்.

அவளுக்கு சரசுவின் செய்கை வியப்பைத் தந்தது.

ஏதோ கடிதத்தை மறைக்கிறாள்; கீழே விழுந்த போட்டோவை இழுத்துப் பறிக்கின்றாள்.

இதென்ன சங்கதி.........

திலகத்துக்குப் புரியவில்லை.

'சரி ஆறுதலாய் அவளைக் கேட்போம்' தனக்குள் சொல்லிக் கொண்டே மீண்டும் அடுக்களைக்குள் நுழைந்தாள்.

'அவள் என்னடி செய்கிறாள் அங்கை? நான் கூப்பிடக் கூப்பிட பேசாமல் இருக்கிறாள்!'

பூரணம் கோபமாய்க் கேட்டாள்.

பூரணத்துக்கு காலையிலிருந்தே ஒரே எரிச்சலும் ஆத்திரமும் காலையில் எழும்பும்போதே அவளுக்கு ஒரே அசதியாய் இருந்தது. இப்பொழுது கொஞ்ச நாட்களாய் அவளுக்கு உடம்பு சரியில்லை.

வயது ஏற ஏற இயற்கை ஏற்படுத்தும் பருவ மாற்றங்கள் அவளை அசதியுறச் செய்தன.

'என்ன காலமை தொடக்கம் அனுங்குறாய்!' - கனகசபை கேட்டார்.

இவருக்குக் காலையில் தேனீர் வழமையான நேரத்துக்குக் கொடுபடவில்லை.

ஸ்நானம் எல்லாம் முடிந்து திலகம் தேனிர் தயாரிக்க நேரமாகிவிட்டது. விரத நாட்களில் அதுதான் வழமை.

இது கனகசபைக்கு எரிச்சல்!

அவருக்குக் கோபம் திடீர் திடீரென்று வந்துவிடும்.

இப்பொழுது தன் மனைவி பூரணம் நின்ற நிலை அவருக்குப் பிடிக்கவில்லை.

'அது டாக்குத்தரிட்ட ஒருக்கா காட்டித்தான் மருந்து எடுக்க வேணும்'.

பூரணம் கூறினாள்.



'இப்ப எனக்கு செலவு வைக்கப் போறாய் போலை கிடக்கு!'

பேசாமல் இரண்டு பனடோலைப் போட்டுத் தண்ணியைக் குடி எல்லாம் சரியாய் போகும்'.

'இது பனடோல் போட்டுச் சரி வராது. டாக்குத்தரிட்டைத் தான் போகவேணும். இண்டைக்கு வேண்டாம். நாளைக்கு ஒருக்காப் போவம்.

'உனக்கு என்ன வியாதியெண்டு சொல்லனப்பா! தெரியாமல் தான் கேக்கிறன்!'

'அது உங்களுக்குச் சொன்னால் விளங்காது. நீங்கள் பேசாமல் போங்கோ!'

'நீ என்னவாகிலும் செய்!'

கனகசபை துவாயைத் தோளில் எடுத்துப் போட்டுக் கொண்டு அறையை விட்டு வெளியேறியவர் திரும்பி வந்தார்.

'அவள் திலகத்திட்டை சொல்லி கொஞ்ச தூதுவளம் இலை வைச்சு சம்பல் அரைக்கச் சொல்லப்பா! ராமுழுதும் ஒரே நெஞ்சுச் சளி!'

பூரணத்தைப் பார்த்துக் கூறினார்.

'ஓ! அது சரி! உங்களுக்கு நோய் நொடி வந்தால் தாங்கமாட்டியள்! நாங்கள் ஏதும் வைத்தியம் கேட்டால் தான் ஏறிப் பாயுங்கோ! இரக்கமில்லாத ஆம்பிளையள்...!'

பூரணம் முணுமுணுத்தாள்.

பதிலுக்கு அவர் ஏதோ இல்லாததெல்லாம் கூறிப் புறுபுறுத்தார்.

'தயவுசெய்து கொஞ்சம் பேசாமல் போங்கோ! போய் தோய்ஞ்சுகுளிச்சு விரதத்துக்கு சாப்பிடுகிற வழியைப் பாருங்கோ! போங்கோ மற்ற வீடுகளிலை ஆம்பிளையள் வயதுபோன நேரத்தில் கோயில் குளமெண்டு மாயுதுகள்! நீங்கள் வீட்டிலை இரும்பு பெட்டியை கட்டிப் பிடியுங்கோ...!'

பூரணத்துக்கு அழுகை கூட வந்தது.

இடைக்கிடை இப்படிப்பட்ட பிணக்குகள் தாராளமாக இடம்பெறும். பணச் செலவு வருகிற விஷயமென்றால் கனகசபைக்குப் பிடிக்காது.

சரசுவுக்கு தனது செயல் மிகுந்த வெட்கத்தையும் மனவருத்தத்தையும் அளித்தது.

திலகத்திடம் எரிந்து விழுந்தது ஒரு தேவையில்லாத செயல் என்று உணர்ந்தாள்.

தினமும் ஏதோ விதத்தில் சந்திக்கின்றனர். நேரம் போவது தெரியாமல் பேசிக்கொண்டு இருப்பார்கள். ஆனாலும் அவன் இடைக்கிடை கடிதம் எழுதி இவளிடம் கொடுப்பான்.

தனது காதல் விவகாரத்தைத் திலகத்திடம் கூற ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தாள்.

இன்று எதிர்பாராத விதமாக கடிதத்துள்ளிருந்து கீழே வீழ்ந்த போட்டோவை திலகம் பார்த்து விட்டாள்.

எப்படியாவது இது ஒரு நாளைக்கு வெளியே வரத்தானே போகின்றது.!

இந்த ஒரு அசட்டுத் துணிச்சலில் சரசு ஒரு மௌனநாடகம் தனக்குள்ளேயே ஆடிக்கொண்டிருந்தாள்.

மாலைப்பொழுது பால் எல்லாம் கறந்து முடித்தபின் மாட்டடியைத் துப்புரவாக்கிக் கொண்டிருந்தாள் திலகம். சரசு மெதுவாக வந்து திலகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது பார்வை சலனமற்றிருந்தது ''அக்கா என்னை மன்னிச்சுக்கொள் நான் காலைமை......'' சரசுக்கு குரல் தளதளத்தது. திலகம் மௌனமாய் நின்றாள்.

'அந்தப் போட்டோ......அவர்--- அவர் என்னுடன்தான் வேலை பார்க்கிறார்.'

சரசு தட்டுத் தடுமாறிக் கூறினாள்.

திலகம் அதற்கும் மௌனம் சாதித்தாள்.

'நான் உன்னிடம் இதைச் சொல்ல வேண்டுமென்றுதான் இருந்தேன். ஆனால் சந்தர்ப்பம் வரவில்லை'.

திலகத்திடம் மன்னிப்புக் கேட்பதுபோலிருந்தது சரசுவின் வார்த்தைகள்.

திலகம் ஆதுரத்துடன் தங்கையின் கைகளைப் பிடித்தாள்.

இருவரும் மாட்டுத்தொட்டி விளிம்பில் உட்கார்ந்தனர்.

சரசு தன்னுடைய காதல் விவகாரங்களை எல்லாம் விவரமாகக் கூறினாள்.

திலகம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு சரசுவைப் பார்க்க பாவமாய் இருந்தது.

'அக்கா, நீதான் அம்மாவிடம் மெல்ல இந்த விஷயத்தைச் சொல்ல வேண்டும்! எனக்கென்னவோ நானாய்ப் போய்ச் சொல்ல பயமாய் இருக்கிறது.!'

'சரசு என்னவாய் இருந்தாலும் நீ ஏமாந்து போகாதை! நான் அவ்வளவுதான் சொல்லுவேன்! உனக்கு இந்தக்கால ஆம்



பிளையளைப் பற்றித் தெரியாது!'

திலகம் சரசுவை எச்சரித்தாள்.

'இல்லை அக்கா! அவர் அப்படிப்பட்டவர் அல்ல! எனக்கு நல்லாய்த் தெரியும்!'

சரசுவின் முகம் இதைச் சொல்லும்போது ஒரு அசாதாரண நம்பிக்கையில் விகசித்தது.

'உனது நம்பிக்கையை சிதறடிக்க நான் விரும்பவில்லை சரசு.'

ஆனால் கவனமாய் இரு!'

இதைச் சொல்லிவிட்டு திலகம் எழுந்தாள்.

பூரணத்துக்கு நடப்பதுஎல்லாம் ஒரே குழப்பமாய் இருந்தது.

பண ஆசை ஏற்பட்டு அதிலேயே குறியாய் இருந்து வரும் கணவன்.

பொங்கும் இளமையெல்லாம் வீணாக, திருமணமாகாமல் பொறுமையின் இலக்கணமாக விளங்கும் மூத்த மகள் திலகம்.

வேலைபார்க்கிறேன் என்று சென்று, யாரோ எங்கேயோ, என்ன சாதி சனமோ என்று தெரியாமல் சோடி சேர்த்துக் கொண்டு இதோ எனது காதலன் என்று துணிவுடன் கூறத் தயாராய் இருக்கும் இரண்டாவது மகள் சரசு,

டெனிம் கால்சட்டையும், வட்டக் கழுத்து பெனியனுமாய் திரிந்து தன்னைப் பற்றி மர்மமாகக் காட்டிக் கொள்ளும் அடங்காப் பிடாரியாகத் திரியும் மகன் சந்திரன்!

இவளுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

திலகம் சரசுவின் காதல் விவகாரத்தை ஒருநாள் ஆறுதலாகப் பூரணத்திடம் கூறியபொழுது அவள் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்தாள்.

'சிறுக்கி வரட்டும் இண்டைக்கு! தலைமயிர் ஒட்ட அறுத்துவிடுகிறன். வீட்டுக்குள்ளை இருக்கட்டும்! மாப்பிள்ளை பிடிச்சுப்போட்டு துணிவோடு சொல்லியும் போட்டாள்...!'

என்ன கதைக்கிறியள் அம்மா! குடிகாரர் பாவிக்கிற பாஷையிலை கத்திறியள்!'

'உனக்குக் கனக்கத் தெரியும்! வாயை மூடு!'

'சரசு வேலை பார்க்கின்றவள். ஆம்பிளையளோடு பழக வேண்டிய சூழ்நிலை! ஏதோ நடந்து போச்சு! இனி நடக்க வேண்டிய அலுவலைப் பாருங்கோ... அவ்வளவு தான் நான் சொல்லுவன்!'

'ஓ! அவவுக்கு இப்ப கல்யாணம் இல்லாததுதான் குறை!'

'அம்மா...!'

திலகம் தன் தாயை நேருக்கு நேர் பார்த்தாள்.

'உண்மையைச் சொல்லப்போனல்... நீங்கள் இப்ப சொன்னீங்களே... அது உண்மை தான்! கல்யாணம் நடக்க வேண்டிய காலத்திலே நடக்க வேணும். பணம், சாதி எண்டு பார்த்துக் கொண்டேயிருந்தால் அவளும் என்னை மாதிரித்தான்சீவியம் முழுதும் இருக்கவேணும். அவள் எண்டாலும் வாழட்டும்...!'

திலத்துக்குக் குரல் தளதளத்தது.

அவள் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

பூரணம் தடி கொண்டு தலையில் அடித்தாற்போல் திடுக்கிட்டு நின்ருள்.

கசப்பானுலும் எவ்வளவு பெரிய உண்மையை உடைத்து விட்டாள்.

'திலகம்...'

அழுகை நெஞ்சை அடைக்க மகளின் முதுகைத் தன் கையால் அணைத்தாள்.

திலகம் தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள்.

'அம்மா நீங்கள் வீணுக யோசிக்கவேண்டாம். இனி நீங்களோ அப்பாவோ இதைத் தடுக்க முடியாத அளவுக்கு சரசு நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருக்கிருள். தடுத்து என்ன பிரயோசனம்?'

நான் குமராக இருக்க அவளுக்கு என்ன மாதிரி கல்யாணம் செய்து வைக்கிறதென்று நீங்கள் யோசிக்க வேண்டாம். ஊர் உலகத்திலே இப்ப இது சர்வசாதாரணம். உலகத்துக்குப் பயப்படாதேயுங்கோ...!' எல்லாம் எங்களுடைய மனம்தான்! நீங்கள் பக்குவமாய் அப்பாவுக்கு விஷயத்தைச் சொல்லுங்கோ...!'

# 5

இந்த ஏழு மாதங்களில் சிவனேசன் திலகத்தை ஐந்தாறு முறை சந்தித்துவிட்டான்.

இப்பொழுதெல்லாம் திலகம் வெள்ளிக்கிழமை எப்போது வரும் என்று காத்திருக்கத் தொடங்கிவிட்டாள். காலாதிகாலம் காத்திருந்து, செய்த மோனத் தவத்தினுல் இப்பொழுது தன் வாழ்வில் வசந்தம் வீச ஆரம்பித்துள்ளதோ என்று அவளுக்குள்ளேயே ஒரு பிரமை.

தானறியாமலே தன் மனம் சலனமுற்று சிவனேசன்பால் ஏன் செல்ல வேண்டும்? பாடசாலையிலும் சரி, அதைவிட்டு விலகிய பின்னும் சரி இன்றுவரை அவள் யாருக்கும் தன் மனதைப் பறி கொடுத்தவளல்ல. வீணை சபலங்களுக்கு ஆளாகியவளல்ல.

'திலகமோ! அது அடக்கமான பிள்ளை. தலை நிமிர்ந்து கதைக்காது!'

பொதுவாக கிராமத்தில் நிலவிய அபிப்பிராயம். அயல் வீடுகளில் எல்லாம் திலகத்துக்கு நல்ல பெயர்.

கனகசபையின் இல்லம் ஒளிவிடுவதே திலகம் அங்கு இருப்பதனுல்தான். காலை எழுந்தது முதல் இரவு படுக்கைக்குப் போகும்வரை திலகம் வீடு முழுவதும் பம்பரமாய்த் திரிவாள். ஒரு தூசு தும்பு காணவிடாள். வீடு வாசல் எல்லாம் பளிச் என்று இருக்க வேண்டும் அவளுக்கு. எதிலும் ஒரு ஒழுங்கு! எங்கும் அழகு!

தன்னைச்சுற்றி ஒரு உலகத்தை உருவாக்கிக் கொண்டு நின்ற திலகத்துக்கு அடக்கம் மேலோங்கி நின்றபடியால் பிற உலக தாக்கம் அவளில் படிய மறுத்தது.

சரசு எல்லோருடனும் சரி சமமாக வார்த்தையாடுவாள். ஆனுல் அதற்கு எதிர்மாருக அமைந்திருந்தது திலகத்தின் போக்கு.

பாடசாலையில் சிவனேசன் திலகத்தை விரும்பி, அவளிடம் கையளித்த கடிதம், அதில் அடங்கியிருந்த வார்த்தைகள் யாவும் அவள் அடி மனதில் படிந்திருந்தது என்னவோ உண்மைதான். ஆனுல் அவளை அவை ஒன்றும் செய்து விடவில்லை.

இப்பொழுது சிவனேசன் மறுபடி அவளது வாழவில் குறுக்கிட்டு விட்டான்.

'இப்படியே நெடுகலும் இருக்கப் போகிறீரோ...?' ஒருநாள்

இப்படிக் கேட்டான் சிவனேசன்.

ஒவ்வொரு சந்திப்பிலும் அவர்களது உரையாடல்கள் இலை மறை காய் மறைவாக இருந்தாலும் அவை ஆழமுள்ளதாய் அமைந்தன.

வீட்டுக்குள் வந்து தன் அறையில் இருக்கும்போது மனதைப் பாரமாக்கின, சிவனேசனது கதைகளும் நினைவுகளும்.

சிவனேசன் முதலில் சந்தித்தபோது தான் இன்றும் தனி ஆள்தான் என்று சூசகமாய் தெரிவித்த லாவகத்தை நினைச்சு நினைச்சு தனக்குள்ளே சிரிப்பாள். மகிழ்வாள். அவளுக்கு அப்பதில் திருப்தியாய் இருந்தது

தன் கல்யாணத்தைப் பற்றியே சிந்திக்காத தந்தையின் மேல் இவ்வளவு காலமும் ஏற்படாத கோபமெல்லாம் இப்பொழுது தான் ஏற்பட்டது.

ஏதாவது செய்ய வேண்டும் கட்டுப்பாடுகளை உடைத்தெறிய வேண்டும் தனக்கும் ஒரு வாழும் உரிமை உண்டு. அதை நிரூபிக்க வேண்டும் என்ற தாளாத வெறி உணர்வு ஒன்று இப்பொழுது திலகத்தை முற்றாக ஆக்கிரமித்துக் கொண்டது.

அடேயப்பா இவ்வளவு இலக்கிய அறிவா இவனுக்கு? திலகம் வியந்து போனாள். சிவனேசன் தன் இதய ஆசையை, திலகத்தின் மீது அவன் இன்றும் வைத்துள்ள மாறாத தன் மோகத்தை எண்ணற்ற கடிதங்களில் கொட்டித் தீர்த்து விட்டான். சாண்டில்யன் வர்ணனைகள் கொள்ளை போனது கடிதங்களில்! கடிதங்களைக் கோயிலடியில் வைத்து யாருமறியாமல் அவன்கொடுப்பான்.

முதலில் கடிதத்தை வேண்டத் தயங்கினாள். அவன் வற்புறுத்தினான்.

'நீர் வேண்டாவிட்டால் விடும்! நான் போஸ்ட் பண்ணி விடுகிறேன்.

'ஐயோ வேண்டாம்...!!'

திலகம் பதறினாள்.

'என்ன குழந்தைப் பிள்ளை மாதிரி பயப்படுகிறீர்! இவ்வளவு வயது வந்த பின்னரும் தாய் தகப்பனுக்குப் பயந்து நிற்கிறீர்'

'சரி நான் அனுப்பவில்லை. இதைப் பிடியும்!'

திலகம் வீட்டில் இருக்கும்போது இவைகளை எண்ணிச் சிரித்துக் கொள்வாள்.

ஆண்டாண்டு காலம் வரட்சியால் வெடித்து பாளங்களாக இருந்த நிலம் குளிர்ந்து பெய்த பெருமழையைத் தன்னுள் முழுமையாக ஏற்றுக் கொண்டது. பசுமை துளிர் விட்டது.



மீண்டும் யௌவனம் துளிர்விட ஆரம்பித்தது. மகிழ்ச்சியின் எல்லைக் கோடுகள் நீண்டன.

ஆனாலும் திலகம் அடக்கத்தின் வரம்பை மீறவில்லை. தன் நெஞ்சத்து ஆசைகளை எழுத்தில் வடித்தாள்.

தன்னை எங்கே மறுபடியும் நிராகரித்து விடுவாளோ என்று பயந்திருந்த சிவனேசன் அகமகிழ்ந்தான்.

ஆனால் பூனைக்கு யார் மணி கட்டுவது? இதுதான் பிரச்சனையாய் விசுவரூபம் எடுத்தது.

சிவனேசன் வீட்டுக்கு ஒரே பிள்ளை. காசிலிங்க ஆசிரியர் மிகவும் முற்போக்குச் சிந்தனைகள் உள்ளவர். தனது மகன் திருமணமே வேண்டாமென்று இருந்தவன் மீண்டும் திருமணம் என்று பேச்சுக்கால்கள் பல இடங்களில் இருந்து இப்பொழுது வர ஆரம்பித்ததும் முன்புபோல் சீறி எழவில்லை என்பதைப் புரிந்து கொண்டார்.

'அம்மா கொஞ்ச நாள் பொறுங்கோ, நான் சொல்லுறன்' சிரித்தபடி கூறினான் ஒருநாள்.

'கொஞ்ச நாள் என்றால்? நீ எங்கையாவது நினைச்சு வைச்சிருக்கிறியோ? அதையெண்டாலும் சொல்லன் தம்பி!'

சிவனேசன் சிறிது நேரம் மௌனம் சாதித்தான்.

'அம்மா எல்லாம் நீங்க சந்தோசப்படுகிற மாதிரி நடக்கும்! கொஞ்சநாள் பொறுத்துக் கொள்ளுங்கோ!' தாய்க்குச் சந்தோஷம் தான்.

'அரைக் கிழவன் வயதாகப் போகிறது, வாற கலியாணங்களை எல்வாம் தட்டிக் கழிக்கிறான்!. இனி எங்கை இவனுக்கு கலியாணம் பேச...?'

அவள் பாடும் பல்லவி சிறிது நாள் ஓய்ந்திருந்தது.

காசிலிங்க ஆசிரியர் தன் மனைவி சிவனேசனின் உள்ளக் கிடக்கையை எடுத்துக் கூறியதும் சிந்தனை வயப்பட்டார்.

சரி அவனுடைய ஆசைதான் எங்களுடைய ஆசையும். ஆனால் நாங்கள் முதலில் போய் அவர்களிடம் கேட்பது அழகில்லை. அது சிவனேசனுக்கு இளக்கமாகி விடும்!

அவர் தட்டிக் கழித்தார்.

'அவன் இவ்வளவு காலமும் கலியாணம் எண்டாலே பேய் பிசாசு பிடித்தமாதிரி பாஞ்சவன் இண்டைக்கு ஒரு வழிக்கு வந்திருக்கிறான். ஆறப் போடாமல் நடக்கிற வழியைப் பாருங்கோ'

'கொஞ்சம் பொறுமையாய் இரும்! நான் இரண்டு நாளாய்

இதைப் பற்றித்தான் யோசிக்கிறன். உமக்குத் தெரியுமோ என்னவோ, பெட்டையின்ரை தகப்பன் கனகசபை ஒரு சாதி ஆள்! மற்ற ஆட்களை இலேசிலை மதிக்கமாட்டார்'.

பழைய சம்பவம் ஒன்று அவருக்கு ஞாபகம் வந்தது. ஒரு முறை பெருமழை பெய்து கிராமத்தில் அரைவாசிப் பகுதி நீரில் மூழ்கிவிட்டது. வெள்ள வாய்க்கால் துப்பரவாக்கும் செலவை ஈடுகட்ட கிராமம் முழுவதும் திரிந்து பணம் சேர்த்தனர். கிராம முன்னேற்றச் சங்க அங்கத்தவர்களும் தொண்டர்களும் வீடு வீடாகச் சென்று பணம் சேர்த்தனர். காசிலிங்கமும் உடன் சென்றிருந்தார்.

கனகசபை வீட்டுக்கும் வந்திருந்தனர். வந்த நோக்கத்தைக் கூறினர்.

எல்லாவற்றையும் ஆறுதலாகக் கேட்டார் கனகசபை.

'வாய்க்கால் திருத்திற வேலை அரசாங்கம் செய்யும்தானே! நீங்கள் என் தலையிடுகிறீர்கள்? வேணுமெண்டால் சொல்லுங்கோ, எங்கடை பகுதி டிஆரோ எனக்குத் தெரிஞ்ச மனுசன்தான் நான் சிபாரிசு செய்து விடுகிறேன்!'

'எங்களுக்கு டிஆரோவைத் தெரியும்! நீங்கள் இப்ப உங்க பங்களிப்பைச் செய்யுங்கோ' வந்த தொண்டர்களில் இள வயதுக்காரன் ஒருவன் காரமாகக் கூறினான்.

'இப்ப சரியான கஷ்டம் பாருங்கோ! எதனைக் கொண்டு நாங்கள் கொடுக்கிறது?'

முணுமுணுத்துக் கொண்டு இரண்டு ரூபாய்த் தாளை எடுத்து நீட்டினார்.

வந்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அந்த இரண்டு ரூபாய்த் தாளைப் பெற்றுக் கொண்டு வெளியே வந்தனர்.

'கணக்கு வழக்கெல்லாம் சரியாய் எழுதி வையுங்கோ! ஊர்க்காசு கவனமாய் இருக்கவேணும்!' கனகசபையின் வார்த்தைகள் காற்றில் கலந்தன.

'மாஸ்டர் நான் வரும்போதே சொன்னனான் இவரிட்டை போய் மினக்கிடவேணுமென்று! பார்த்தீங்களே......' அந்த இள வயசுக்காரன் கூறினான்.

'தம்பி பொறுமையைக் கடைப்பிடியும்! இது பொது விஷயம், அவர்கள் மனமுவந்து தருவதைப் பெற்றுக் கொள்ள வேண்டும்!' விஷயம் அத்துடன் முடிந்தது.

ஆனால் வாய்க்கால் துப்புரவு வேலைகள் நடக்கும்போது



கனகசபையின் மகன்-சந்திரன் வந்து ஐம்பது ரூபாய்த் தாளை காசிலிங்க ஆசிரியரிடம் கொடுத்து இதைச் செலவுக்கு எடுங்கோ மாஸ்டர் என்று கூறினான்.

காசிலிங்க ஆசிரியர் சுற்றிநின்ற ஆட்களை அர்த்தமுடன் பார்த்துக் கொண்டார்.

ஆனால் கனகசபையின் வீட்டில் காசு ஐம்பது ரூபாவைக் காணவில்லை என்று ரகளை செய்து வீட்டை இரண்டாக்கிய சங்கதி அவர்களுக்கு தெரிய நியாயமிருக்கவில்லை.

'கனகசபை ஆட்களை எனக்கு நல்லாய்த் தெரியுமப்பா. தகப்பன் பணக்கார இரத்தினம் என்று அந்தக் காலத்திலை நல்ல செல்வாக்கோடு இருந்தவர். இந்த மனுசன் ஒரு கிறுக்குப் பிடிச்ச ஆள்! மற்றவை ஒருவரையும் மதிக்க மாட்டான்! அதுதான் எனக்கு யோசனையாய் இருக்கிறது.'

'எனக்குப் பெட்டையின்ரை தாயைத் தெரியும். நல்ல மனுசி. கோயிலுக்கு வந்துபோற வேளையில் கண்டிருக்கிறன். இனி பெட்டையும் நல்ல வடிவு. நல்ல சிவப்பு நிறம். தம்பியின்ரை உயரத்துக்கும் நிறத்துக்கும் நல்ல பொருத்தம்! நாங்கள் கோயில் மணியத்தின் மாமியார் கற்பகத்திட்டை சொல்லிக் கேட்டுப் பார்ப்போம்! மனுசி அவையோடை நல்ல வாரப்பாடு.'

'நீர் என்னவோ அவசரப்படுகிறமாதிரி தெரியிது எனக்கு. சரி கிழவியிட்டை விஷயத்தைச் சொல்லிக் கேட்டுப்பாரும்' காசிலிங்கம் மனைவியிடம் சம்மதம் தெரிவித்தாலும் அவருக்கு என்னவோ நம்பிக்கை எழவில்லை.

'பூரணம்! எடி பிள்ளை பூரணம்...' நீட்டி முழக்கி அழைத்துக் கொண்டே கற்பகம் வீட்டுக் கேற்றைத் திறந்து கொண்டு உள்ளேசி வந்தாள்.

'வாருங்கோ' பூரணம் கிழவியைக் கண்டுவிட்டு வெளியே வந்தாள்.

'இஞ்சை பாரன் திலகம் நல்ல பூக்கன்றுகள் எல்லாம் நட்டு வைச்சிருக்கிறாள்! சுப்புரமணியம் பார்க்குக்குப் போனமாதிரிக் கிடக்கு! எடி பிள்ளை திலகம் எனக்கும் இரண்டு தடி வெட்டித் தாவனடி ஆத்தை!'

சுற்றுப் புறமெல்லாம் ஒரே சீராக நடப்பட்டிருந்த குரோட்டன் செடிகளும் நல்லின ரோசாச் செடிகளும் கண்களைப் பறித்தன.

பூரணமும் கற்பகமும் நெடுநேரம் கதைத்தனர்.

'பொடியன் விரும்பி வாறான். திலகத்துக்கும் நல்ல விருப்

பம்போலை கிடக்கு! இந்தக் காலப் பிள்ளையளின்ரை விஷயங்கள் லேசிலை விளங்காது பூரணம். உன்னுடைய மனுசனிட்டைச் சொல்லி கெதியிலை முடிக்கப்பார்'

'நீங்கள் சொல்லிப் போட்டியள். இனி அவரோடை கதைச்சல்லோ மிச்சம்'

பூரணம் அவநம்பிக்கை தொனிக்கக் கூறினாள்.

'ஏன் இதைச் செய்யக் கசக்குதோ அவருக்கு? அப்ப பெட்டையை நெடுகலும் இப்பிடியே வைச்சிருக்கச் சொல்லு! என்னுடைய வாயிலை வரும் இப்ப... அங்காலை அவள் பெட்டை நிற்கிறாள்...ஓ!'

'அது சரியக்கா, பொடியன்ரை உத்தியோகம் என்ன மாதிரி?'

'ஏன் அவனுடைய உத்தியோகத்துக்கு என்ன குறை? அப்போதிக்கரி வேலை. நல்ல கை நிறையச் சம்பளம்.'

'இனி அங்காலைப் பக்கம் இவன்களுக்கு நல்ல வருமானம்! எங்கடை சனம் மாதிரியோ அதுகள் வைத்தியம் செய்வித்தால் என்னவெண்டாலும் குடுக்காமல் போகாதுகள்!'

'அது சரியக்கா, இப்ப பெடியன் வேலையை விட்டுட்டு வந்து நிற்கிறானே? நெடுகலும் கோயிலடியிலைதான் நிற்கிறான்!'

'இஞ்சை பூரணம் விசர்க்கதை கதையாதை. அனுராதபுரப் பக்கம் இப்ப கலவரமெண்டு வந்தவன். இப்ப அங்க போக ஏலாது. தான் இனிப் போகமாட்டன் எண்டு சொல்லிப் போட்டான். தகப்பனும் ஓ இனி நீ அங்கை போகாதை. இஞ்சை தோட்டம் கொத்தினாலும் மரியாதையாய்ப் பிழைக்கலாம் எண்டு சொல்லிப் போட்டாராம்!'

'பெடியனுக்கு வெளி நாட்டுக்குப் போற எண்ணமும் கிடக்குப் போலை தெரியுது. தாய்க்காறி சாடையாய் சொன்னவள். பேசாமல் சட்டுப் புட்டென்று ஒழுங்குகளைப் பாருங்கோ! உன்ரை மகளுக்கும் நல்ல பலன் இருந்தால் போகட்டுமன் புருஷனோடை வெளி நாட்டுக்கு!'

கிழவிக்கு மூச்சிரைத்தது.

பூரணம் நல்ல மன நிறைவோடு இருந்தாள்.

இதற்குள் திலகம் எவர்சில்வர் பேணியில் கோப்பி கொண்டு வந்து கொடுத்தாள்.

கிழவி மிடறு மிடறாய் ரசித்துக் குடித்தாள்.

'உங்களோடை மாட்டுப் பாலோ! கோப்பி நல்லாயிருக்கு தடி மோனை! இஞ்சை திலகம், இரண்டு ரோசாத்தடி வெட்டித்தா பிள்ளை'



திலகம் உள்ளே சென்று கத்தியை எடுத்து வந்து நல்லதாய் நாலு தடி வெட்டிக் கொடுத்தாள்.

'அந்த மரத்திலை ஒரு சின்னக் கொப்பு வெட்டினாலும் சத்தம் போடுவாள். இண்டைக்கு மனம் வந்து ஒன்றுக்கு நாலு தடி வெட்டித் தந்திருக்கிறாள்!'

பூரணம் கற்பகத்தைப் பார்த்துக் கூறினாள்.

திலகத்தின் உள்ளம் அன்றலர்ந்த ரோசா மலரென மலர்ந்திருந்தது.

பூரணத்தின் மனம் சந்தோஷத்தால் நிறைந்திருந்தது.

கிராமத்தில் திலகத்தின் ஒத்த வயதுடைய பெண்கள் பலர் திருமணமாகிக் குழந்தைகளுடன் வாழ, தன் மகளுக்கும் இப்படி ஒரு சந்தோஷமான வாழ்வு விரைவில் வராதா எனப் பலநாள் ஏங்கியதுண்டு. ஏதோ இப்போதாவது இறைவன் ஒரு வழியை வகுத்து விட்டானே என சந்தோஷப்பட்டாள்.

'நீ படிக்கிறபோது காசிலிங்க மாஸ்ரரின்ரை மகனும் உன்னோடை படிச்சவனே'

சமையல் நடந்து கொண்டிருந்தது.

பூரணம் மகளைப் பார்த்துக் கேட்டாள்.

'ஓ! அவர் என்னுடைய வகுப்புத்தானே...' முழுமையான பதில் ஒன்றைச் சொல்ல திலகத்தை சந்தோஷம் கலந்தவொரு நாணம் தடுத்தது.

'கற்பகக்கா சொல்லிப்போட்டுப் போறா... இனி சீதன பாதனம் என்ன மாதிரிக் கேட்பினமோ தெரியாது...'

தனக்குள் சொல்வது போலிருந்தாலும் அது திலகத்துக்கும் கேட்கும் எனப் பூரணத்துக்குத் தெரியும்

திலகம் ஒன்றும் பேசவில்லை.

'உம்முடைய அப்பாவின் பணம் எனக்குத் தேவையில்லை... நான் மனதார விரும்பும் திலகம்தான் எனக்குப் பெருநிதி...' சிவனேசனின் ஒரு கடிதத்து வாசகங்களை அவள் தன் மனதில் மீண்டும் அசை போடுகிறாள்.

'உதென்ன கீரைக்கு இரண்டாவது தரம் உப்புப் போடுகிறாய்?'

பூரணம் கேட்டாள்.

'ஏன் நீங்களும் போட்டனீங்களே...? நான்கவனிக்கவில்லை...?

திலகம் நெளிந்தாள்.

'எல்லாம் ஒழுங்காய் செய்யிற உனக்கு இண்டைக்கு என்ன வந்தது?' பூரணம் எழுந்து வந்தாள்.

'கொப்பருக்கு இது காணாமே கொழுவல் தொடுக்க! கீரையை வாயிலை வைச்சதும் சன்னதம் கொள்ளப் போகிறாரே!'

திலகம் வழக்கமாக இப்படி ஏதும் என்றால் பதறி ஓடியாடி ஏதாவது செய்வாள்.

கனகசபைக்கு சமையல் எல்லாம் வாய்க்கு வள்ளிசாய் இருக்க வேண்டும்.

உப்பு சற்றுத் தூக்கலாய் இருந்தாலும் ஓரேயடியாய்ச் சத்தம் போடுவார்.

'தாயும் மோளும் என்னப்பா செய்தனீங்கள்! உப்பு என்ன விளைஞ்சு கிடக்குதே இஞ்சை? மனுசன் வாயிலை வைக்க ஏலாமல் அள்ளிப் போட்டிருக்கு...' சொல்லிவிட்டு சாப்பாட்டுத் தட்டை ஒரு தள்ளாத் தள்ளுவார்! இதற்குப் பயந்து பூரணமோ திலகமோ சாப்பாட்டில் உப்புப் புளி விஷயத்தில் வெகு கவனமாய் இருப்பார்கள்.

ஆனால் திலகம் சிரித்துக் கொண்டு பேசாமல் நின்றாள்.

பூரணத்துக்கு இது அதிசயமாகப் படவில்லை. தாயறியாத சூல் உண்டோ?

'சரி சரி நீ வா இஞ்சாலை...'

திலகம் மெதுவாக நகர்ந்து விட்டாள்.

அவளின் மனம் ஒரே பரபரப்பாக இருந்தது. கற்பகம் தாயுடன் பேசிக்கொண்டிருந்ததெல்லாம் அவளும் கேட்டிருந்தாளே!

ஓடோடிச் சென்று தன் பெட்டியைத் திறந்தாள். ஒரே சீராக அடுக்கி வைக்கப்பட்டிருந்த சிவனேசனின் கடிதங்களின் மத்தியில் அவனது போட்டோ கிடந்தது. ஆசைதீர அதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

# 6

இந்தக் கிராமத்தில் மிகச் சமீபத்தில் எத்தனையோ துறைகளில் எவ்வளவோ மாற்றங்கள்.

புதியவர்களின் முகங்கள் அங்குமிங்கும் காணப்பட்டன. என்னவென்று தெரியாத ஒரு பரபரப்பு.

கிராமத்து இளைஞர்களின் திடீர் மறைவுகள், பின்னர் மீண்டும் அவர்களது கிராமத்துப் பிரவேசம்,

இரவு இரவாகக் கூட்டங்கள்; கலந்துரையாடல்கள்; வயது வந்தவர்களின் இனம் தெரியாத மிரட்சி இளசுகளின் பயம் அற்ற உற்சாகம் .....

அப்பப்பா!

இவ்வளவு உத்வேகமா?

தூங்கிக் கொண்டிருந்த கிராமங்களில் ஒரு புதிய விழிப்பு.

இவை ஒரு புறமிருக்க கிராமத்துச் சந்திகளிலெல்லாம் ஏட்டிக்குப் போட்டியாக ஊரையே அதிர வைக்கும் சப்த ஒலிகளுடன் அலங்காரமாக வீற்றிருக்கும் வீடியோக் கடைகள்.

முன்பின் சனங்கள் பார்த்திருக்காத கருவிகள்.

அவை எழுப்பும் இசை கலந்த அசுர ஒலிகள்; அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் எண்ணற்ற வீடியோ ரேப்புகள். முகத்தை முகத்துடன் தேய்த்துக் கொண்டே தம்மை மறந்த நிலையில் சிரித்துக் கொண்டே காட்சி அளிக்கும் 'லேட்டஸ்ட்' சினிமா நடிக நடிகைகளின் பெரிய வர்ணப்படங்கள்.

அரைகுறை ஆடைகளுடன், அவையும் கனக்குதே என்று ஏங்கி கண்களால் மோகக் கதை பேசும் சிலுக்குகளின் படங்கள்.

'வெட்டிவேரு வேசம், விடலைப் பிள்ளை நேசம்!'

'மானே தேனே கட்டிப்பிடி மச்சானை கழுத்திலே எட்டிப் பிடி!'

கொச்சையான பாட்டுக்கள்......!

பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள் புத்தகங்களைக் கையில் வைத்துக் கொண்டு, திறந்த வாய் மூடாமல் இவைகளைப் பார்த்தும் கேட்டும் ரசிக்கும் காட்சிகள்!

'நீ புதுக் கொப்பி எடுத்தியா......'

'நேற்று எடுத்த கொப்பி கொடுத்திட்டியா......'

இவைதான் பரவலான உரையாடல்கள். இளைஞர்கள் கடைகளை மொய்த்தனர்.

பெரியவர்களின் கவனங்களையும் இவைகள் ஈர்க்கத் தவற வில்லை. இதற்கு நாங்கள் சளைத்தவர்களல்ல எனச் சவால் விட்ட மாதிரி தெருவெங்கும் இயங்கும் மினித் தியேட்டர்கள்! வாசலில் தொங்கும் சினிமா அறிவித்தல்களும் அத்துடன் பிரத்தியேகமாக எழுதப்பட்டிருந்த கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும் என்ற வாசகங்களும் கண்களைப் பறித்தன.

அன்றாட அரசியல் அனைவரது வாழ்விலும் புயலை ஏற்படுத்தியது.

அடுத்தடுத்து வந்த சவால்களை கிராமங்கள் தம் நெஞ்சினுள் விழுத்திக் கொண்டன.

சகலரும் காலத்திற்கு ஏற்றவாறு வாழப்பழகிவிட்டனர். ஆங்காங்கு ஏற்பட்ட மாற்றங்கள் இளைஞர்களை சக்தி மிக்கவர்களாய் ஆக்கியது. படித்த படிப்புக்கு ஏற்றபலன் கிடையாமல் போனது, நாட்டில் சாதி பணம் என்ற போர்வையால் மூடப்பட்டு நடைபெற்று வருகின்ற போலிநாடகங்கள், மோசடிகள் அவர்களை விழிக்க வைத்தன. அநீதிகளைக் கண்டு குமுறிய இளம் நெஞ்சங்கள் புரட்சி புரட்சி என்ற தாகம் எடுத்துத் திரிந்தன.

கனகசபையின் வீட்டிலும் அவரது மகன் இதற்கு விதிவிலக்காக இருந்து விடவில்லை, அவன் வீட்டில் தினமும் புயலை ஏற்படுத்தினான்.

ஒருநாள் மாலை வீட்டைவிட்டு வெளியே சென்றிருந்த சந்திரன் வீடு திருமபவில்லை. புறப்படமுன் அவன் திலகத்தைத் தேடி வந்தான்.

'அக்கா இரா நான் வரச் செல்லும்! அம்மா கேட்டால் சொல்லு!'

'டேய் சந்திரன்! என்னடா நீ நினைச்ச பாட்டுக்கு வேலைகளைச் செய்து கொண்டு போறாய்! நான் கொஞ்சக் காலமாய்ப் பார்த்துக் கொண்டுதான் வாறன்! உண்மையைச் சொல்! எங்கை போகப் போகிறாய்?'

திலகம் அதட்டினாள்.

'இண்டைக்கு ஒரு முக்கிய கூட்டம்... இதக்கு மேல் கேள்வி கேட்டுத் துளைக்காதை! நான் போறன்...'

வெகு அலட்சியமாகப் பதில் வந்தது.

'நேற்றைக்கு அப்பா மங்களம் பூாடியது தெரியும்தானே!' 'வேளைக்கு வா!'

திலகத்தின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் சந்திரன் வெளியேறினான். முதல் நாள் பெரிய பூகம்மே வீட்டில் இடம்



பெற்றது. முதல்நாள் இரவு பத்து மணியாகியும் சந்திரன் வீட்டுக்குத் திரும்பவில்லை.

'என்னப்பா கேற்றுப் பூட்டவில்லையே?'

கனகசபை படுக்கப்போகு முன்னர் பூரணத்தைப் பார்த்துக் கேட்டார்.

தினமும் இப்படிக் கேட்பார்.

அது பூரணத்துக்குப் பழக்கமான கேள்வி.

'ஒருக்கா போய் பூட்டுங்கோவன்! எல்லாத்துக்கும் அவளைத் தான் போட்டுச் சிப்பிலியாட்டுங்கோ!'

பூரணம் எரிந்து விழுவாள்.

ஆனால் மனுஷன் இருக்கையைவிட்டு அசைந்தால் போதாதே!

'சரி விடுங்கோ! பத்து வீட்டுக்கு கேட்கத்தக்கதாய் ராவிலை கத்தாதேயுங்கோ! நான் பூட்டுவன்தானே!'

திலகம் தாயை அதட்டிவிட்டுப் போய் வெளிக்கேற்றை பூட்டிவிட்டு வருவாள்.

'ஏன் அவர் துரை, ஒருக்காப்போய் பூட்டினால் குறைஞ்சு போமோ?'

துரை என்பது கனகசபை தன் மகன் சந்திரனைப் பார்த்து அடிக்கடி நக்கலுடன் கூறும் வார்த்தை.

'இனி அவனோடையும் துவங்குங்கோ! போய்ப் படுங்கோ' பூரணம் மறுபடியும் முணுமுணுப்பாள்.

'லைற்றுகளை நூருங்கோ! லைற் பில் காசுக்கு ஒரு பிள்ளைக்கு சீதனம் குடுக்கலாம்! வரிசையாய் எரிய விட்டிருக்கினம்.'

புறுபுறுத்துக் கொண்டே தன் அறைக்குச் செல்வார்.

சந்திரன் வீட்டுக்கு வரும்போது இரவு பன்னிரண்டு மணியைத் தாண்டிவிட்டது.

நடுநிசியானபடியால் அவன் கேற்றைத் திறக்கும்படி ஒருவரையும் அழைக்கவில்லை. கேற்றால் ஏறிக் குதித்து வீட்டுக்குள் வந்து மெதுவாக ஹோல் கதவைத் தட்டினான்.

'திலகமக்கா,! திலகமக்கா!!'

குரல் சன்னமாக ஒலித்தாலும், திலகம் விழித்துக் கொண்டு வந்து கதவைத் திறந்தாள்.

'எங்கையடா போனனீ?' திலகம் கோபமாய்க் கேட்டாள்.

'ஒரு கூட்டத்துக்குப் போனனான். நேரம் சென்று போச்சு!'

திலகத்தின் கோபத்தைப் பொருட்படுத்தாமல் சந்திரன் உள்ளே வந்தான்.

இதற்குள் பூரணமும் எழுந்து வந்து விட்டாள்.

'இஞ்சைவா சந்திரன்! சாப்பிடாமல் எங்கையடா ராராவாய் திரியிருய்?'

'ஏன் இப்ப கத்திறியள்! நான் ஒரு கூட்டத்துக்குப் போன ஞன்!'

'துரை வந்திட்டாரே?'

கனகசபை எழுந்து வந்தார். வீட்டுக்குள் வந்ததும் எல்லோ ரும் மாறிமாறி கேள்விமேல் கேள்விகளாய் சந்திரனைத் திக்குமுக் காட வைத்தனர்.

கனகசபையை முழித்துப் பார்த்தான்.

'என்னடா முழுசிருய்? நாய் மாதிரி தெருத் தெருவாய் திரிஞ்சு போட்டு வாருய் என்ன! எங்கையடா போனனீ?'

'நாய் பேய் என்ற சொல்லை விடுங்கோ! மரியாதையாய் கதையுங்கோ!'

'என்னடா சொன்னனீ...' ஓடிவந்து சந்திரனை நெற்றி மயி ரில் எட்டிப் பிடித்தார். சந்திரன் இதை எதிர் பார்க்கவில்லை. இரண்டு கையாலும் பிடித்து அவரைத் தள்ளிவிட்டான்.

அவர் நிலைகுலைந்து சுவரில் போய் மோதி நின்ருர்.

'நாயே விட்டைவிட்டு இப்ப வெளிக்கிட வேணும்!' உச்சக் குரலில் கத்திஞர்'

'நீங்கள் என்ன கறுமத்துக்கு இப்ப எழும்பி வந்தனீங்கள்? தகப்பனும் மகனும் மல்லுக் கட்டுங்கோ! சந்திரன் போடா உள் ளுக்கை... சனியன் .. ராராவாய்த் திரிஞ்சு போட்டு வந்து மனி சற்ற சீவனை வாங்குகிருன்!'

பூரணம் கத்திஞள்.

'சந்திரன் உள்ளுக்குப் போ!'

திலகம் அதட்ட சந்திரன் சிலிர்த்துக் கொண்டு உள்ளுக்குச் சென்ருன்.

'நீதானடி எல்லாத்துக்கும் காரணம்! உன்னுடைய செல்லத் தாலைதான் எல்லாம் நாசம் வந்தது!'

கனகசபை ஆத்திரத்துடன் பூரணத்தைப் பார்த்துக் கத் திஞர்.

மனுசர் நித்திரை கொள்ளமுடியாது போலை கிடக்கு! எல்லா ரும் சேர்ந்து கத்தாதையுங்கோ!'

சரசு தன் அறையில் இருந்தே முணுமுணுத்தாள்.

அவளுக்குத் தன் சுகமான நித்திரை முறிந்து விட்டதே என்ற ஆத்திரம். இது முதல்நாள் நாடகம்.



பகல் பத்து மணிக்குத்தான் சந்திரன் வீட்டுக்கு வந்தான்.

திலகம் ஒன்றுமே பேசவில்லை. சந்திரனேடு பேசிப் பயனில்லை என்று அவள் உணர்ந்து கொண்டாளோ என்னவோ. ஏதோ ஒரு பொருளை பிரவுண் நிறக் கடுதாசியில் சுற்றிக் கொண்டு உடுப்புக்கள் வைத்திருந்த அலுமாரியில் புதைத்து வைத்தான்.

திலகம் மௌனமாகக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

பூரணம் குளித்துவிட்டு வந்தவள், சந்திரன் சாப்பாட்டு மேசையில் இருந்து இடியப்பம் சாப்பிடுவதைக் கண்டாள்.

உடுப்பை மாற்றிக் கொண்டு வந்து முன் கதிரையில் அமர்ந் தாள்.

'சந்திரன் எங்கையடா இராப்படுத்தனி? ஏன் வீட்டுக்கு வர வில்லை?'

சந்தி ன் ஒன்றும் பேசாமல் சாப்பிட்டுக் சொண்டிருந்தான்.

'தயவுசெய்து அம்மா, ஒன்றும் கேட்டுத் தொந்தரவு செ யாதேயுங்கோ! உங்களுக்கு இப்ப ஒன்றும் விளங்காது! நான் ஒன்றும் வம்புத்தனமான வேலை செய்யவில்லை.'

'நாங்கள் இப்பிடி நெடுகலும் இருக்கமுடியாது. அதுதான்.... விடுதலை வேணும் எங்களுக்கு......'

அவன் ஏதோ மெதுவாக முணுமுணுத்தான்.

'டேய் நீ என்னடா சொல்லுகிருய்? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை! வடிவாய்ச் சொல்லன்ரா!'

பூரணம் அவசரப்பட்டாள்.

'நீங்கள் பேசாமல் போங்கோ அங்காலை! என்னைக் கரைச் சல் படுத்தாதேயுங்கோ'

சந்திரன் எரிந்து விழுந்தான்.

'என்னவாலும் செய்'

புறுபுறுத்துக் கொண்டே கதிரையைவிட்டு எழுந்து சென்ருள்.

சந்திரன் மத்தியானம் வெளியே மறுபடி புறப்பட்டுச் சென் ருன்.

திலகம் ஆறுதலாகச் சென்று சந்திரனின் பெட்டியைத் திறந்து பார்த்தாள்.

உடுப்புகளின் அடியில் இருந்த பார்சலை குலைத்துப் பார்த் தாள்.

உள்ளே இருந்தது ஒரு சிறு கைத்துப்பாக்கி.

அவளுக்கு நெஞ்சு திடுக்கிட்டது.

மறுபடியும் அதை முன்பு இருந்த மாதிரியே கடுதாசியால்

சுற்றி வைத்தாள். ஒரு சிறு டயரியும், பாரதி பாடல்கள் என்ற புத்தகமும் அங்கு இருந்தன.

பாரதி பாடல் புத்தகத்தில் ஆங்காங்கே சில பக்கங்களில் அடையாளம் காண்பதற்காக சிறுகடதாசிகள் செருகி வைக்கப் பட்டிருந்தன.

திலகம் புரட்டிப் பார்த்தாள்.

'பெல்சியம் நாட்டுக்கு வாழ்த்து'

'புதிய ருஷியா'

'கரும்புத் தோட்டத்திலே'

'சுதந்திரப் பள்ளு'

இப்படியான பாடல்கள் தொடங்கும் பக்கங்களே அவை. அதை மூடிவைத்துவிட்டு, மெதுவாக டயறியைப் புரட்டினாள்.

வீட்டிலும் சிறை! நாட்டிலும் சிறை! வென்றிடுவோம் இதை!'

'அடிமைத் தளையை விரட்ட நான் என்னையே அர்ப்பணிக் கிறேன்!'

இப்படியே தொடர்பில்லாத பல வசனங்கள். மேலும் பல இடத்து விலாசங்கள்.

திலகத்துக்கு ஓரளவு சந்திரனின் நடவடிக்கைகள் புரிய ஆரம் பித்தன

கனக்கும் நெஞ்சுடன் அறையைவிட்டு வெளியே வந்தாள்.

திலகம் படித்தவள். அவளுக்கு நாட்டு நடப்பு நன்கு புரியும்.

வீட்டுக்குத் தினமும் தத்தமது கருத்துகள், உள்ளோட்டங் கள் யாவற்றையும் சுமந்து வரும் பத்திரிகைகள், சவர்க்காரம், அப்பளம் என்று விற்பனைக்கு சிறுவர்கள் கொண்டு வருவார்கள். சில சமயங்களில் இளவயதுக்காரர்களும் வருவார்கள்.

திலகம் மறுபேச்சு இல்லாமல் அவற்றை பணம் கொடுத்து வேண்டிவிடுவாள்.

இவற்றைத் தற்செயலாய் கனகசபை கண்டால் எரிந்து விழுவார்.

'தம்பி இஞ்சை இதுகளைக் கொண்டு வராதை! பேசாமல் கொண்டு போ!'

முகத்தில் அடித்தாற்போல் கூறுவார்.

'ஒரு இரண்டு காசுக்கு இப்படிக் கத்திறியள்! அதுகளும் எங் களுக்காகத்தானே பாடுபடுகுதுகள்! நாங்களும் உதவத்தானே வேணும்'



பூரணம் கூறுவாள்.

கிராமத்தில் பெண்கள் இப்படியான அலுவல்களுக்கு முன் னுக்கு நின்று தமது ஆதரவைத் தெரிவிக்கத் தவறவில்லை.

ஒருநாள் இளைஞன் ஒருவன் வந்து சில உணவுப் பார்சல்கள் கட்டித் தரும்படி கேட்டான்.

பூரணம் மறுபேச்சுப் பேசவில்லை. திலகம் சுறுசுறுப்புடன் சமைத்து பார்சல்களைக் கட்டிக் கொடுத்தாள்.

கனகசபை கண்டுவிட்டார்.

பூரணம்தான் எதிர்ப்பட்டாள்.

'உன்ரை கொப்பன் வீட்டுக்காசு எண்டு நினைச்சாயோ? பார் சல் கட்டிக் கொடுக்கிறுவாம் பார்சல்...'

அவர் கத்தினதுதான் மிச்சம். பூரணமோ திலகமோ அதைக் கவனத்துக்கு எடுக்கவில்லை.

சில நாட்களில் கிராமத்தில் 'மஞ்சள் புரட்சி' நடந்தது. இளைஞர்கள் வீடுகளை முற்றுகை இட்டனர். பெண்கள் ஒரு உத்வேகத்துடன் தங்கள் நகைகளைக் கழற்றிக் கொடுத்தனர். விஷயம் கேள்விப்பட்டு கனகசபை உள்ளுக்குள் பயந்தார். அடைவு பிடிக்கும் தொழில்தானே அவரின் ஜீவநாடி!

அவரின் வீட்டுக்கும் இளைஞர்கள் சிலர் வந்தனர். தங்கள் நோக்கங்களை விபரமாக எடுத்துக் கூறினார்கள்.

அவர்கள் கூறுவதை எல்லாம் வெகு நுணுக்கமாக் கேட்டுக் கொண்டிருந்த சரசு சடாரென்று தன் கழுத்துச் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்தாள்.

தனது அறையில் நின்று கதவு இடுக்கால் நடப்பனவற்றை எல்லாம் கனகசபை பார்த்துக் கொண்டு நின்றார்.

அவர்கள் வீட்டைவிட்டு வெளியே சென்றதும் சீறும் புலி யென பாய்ந்து அறையைவிட்டு வெளியேவந்தார்.

'என்ன துணிவிலை சங்கிலியைக் கொடுத்தனி?'

சரசுவைப் பார்த்துக் கேட்டார்.

'சங்கிலியைக் கொடுக்கத் துணிவு ஏன்?'

சரசுவின் வழக்கமான குறும்பு கலந்த சிரிப்பு.

'நீயும் பார்த்துக் கொண்டு நிண்டனியே? ஏதாவது சொல்லி அவங்களைக் கலைக்காமல், அவள் சங்கிலியைக் கழட்டிக் கொடுக்க நீயும் பேசாமல் நிற்கிறாய்... நானும் இஞ்சை நடக்கிறதெல்லாம் பார்த்துக் கொண்டுதான் நிண்டனான்!'

'ஏன் கத்திறியள் இப்ப! வெளியாலை வந்திருக்கலாமே?'

பூரணம் கூறினாள்.

'நான் உழைச்சு வேண்டின சங்கிலி! நான விரும்பித்தான் கொடுத்தேன். நீங்கள் ஒருவரும் சண்டை பிடிக்க வேண்டாம்!'

சரசு கூறிவிட்டு உள்ளுக்குச் சென்றாள்.

கனகசபை வழமைபோல் ஒருபாட்டம் கத்தித் தீர்த்துவிட்டு அந்த இடத்தைவிட்டு நகர்ந்தார்.

சந்திரன் வீட்டுக்கு வந்ததும் திலகம் நடந்தவற்றைக் கூறினாள். சரசுவின் அறைக்கு நேரே சென்றான் சந்திரன்.

'இஞ்சை கையைக்கொடு! நீதான் முறையான வேலை செய்திருக்கிறாய்!'

சங்கிலியைக் கொடுத்ததற்கு சந்திரன் சரசுவைப் பாராட்டினான்.

சமீபத்தில் இவையெல்லாம் சந்திரனின் நடவடிக்கைகளில் ஏற்பட்டிருந்த மாற்றங்கள்.

திலகம் சந்திரனின் போக்குகள்பற்றி ஒருநாள் பூரணத்திடம் விபரமாய்க் கூறினாள்.

'கடவுளே...!'

பூரணம் தலையில் கையை வைத்தாள்.

'கந்தசஷ்டி விரதம் இருந்து பெத்தபிள்ளை..., ஒருநாளைக்கு அவங்கள் வந்து கொண்டு போகப் போறான்களே!'

'எங்கடை முத்துத்தம்பியின்ரை பேரனைக் கொண்டுபோய் இப்ப ஒரு வருசமாகப் போகுது! இன்னும் விடவில்லை!'

'இவனுக்கு ஏன் புத்தி இப்பிடிப் போகிறது?'

தலையைப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

'அம்மா, இப்ப ஏன் கத்திமாயிறீங்கள்? இப்ப என்ன நடந்தது? சந்திரனைப்போல ஆயிரம் சந்திரன்கள் இப்ப ஒரு இலட்சியத்துக்காகப் போராடுகிறார்கள். நீங்கள் மறித்தாலும் அழுது புரண்டாலும் அவன் தன்னுடைய வழியில்தான் செல்வான்.

நாங்கள் ஒன்றும் செய்யமுடியாது! உங்களைப்போல எத்தனையோ தாய்மார் இன்று மௌனக் கண்ணீர் வடிக்கிறார்கள் தெரியுமோ? ஏதோ நடக்கட்டுமென்று பேசாமல் இருங்கோ!'

திலகம் கூறுவதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பூரணம் மலங்க மலங்க விழித்தாள்.

# 7

''உஸ், அப்பாடா, என்ன வெய்யில் இது! மனுசரைப் போட்டு வாட்டுது!'

நெற்றி வியர்வையை தன் கைக்குட்டையால் ஒற்றியபடியே வீட்டுக்குள் வந்த சரசு ஆயாச மேலீட்டால் தனது கைப்பையை முன் மேசையில் எறிந்துவிட்டு கதிரையில் பொத்தென்று அமர்ந்தாள்.

'என்னடியாத்தை மூன்று நாளாய் லீவுபோட்டுவிட்டு அப்பிடி என்ன பெரிய வேலை பார்க்கிறாய்?'

பூரணம் சரசுவைப் பார்த்துக் கேட்டாள்.

சரசு கடந்த மூன்று நாட்களாய் அலுவலகத்திற்குச் செல்லவில்லை. அவளின் பதவியை நிரந்தரமாக்குவதற்கான நேர்முகப் பரீட்சை ஒன்று கொழும்பில் நடைபெறப் போவதாகவும் அதற்குப் போகவேண்டுமென திலகத்திடம் சரசு ஏற்கனவே கூறியிருந்தாள்.

'அவள் கொழும்புக்குப் போகப் போகிறாளாம்! இன்ரவியூவாம்......' திலகம் சரசுவைப் பார்த்துச் சிரித்தபடியே கூறினாள்,

'கொழும்புக்கோ! இந்த நேரத்திலேயோ? ஆட்கள் சொல்லுற கதையளைக் கேட்கப் பயமாய்க் கிடக்கு! பேசாமல் கிட சரசு.'

'கண்டறியாத இன்ரவியூ...!... பெண்பிரசு எண்டு பாராமல் அவங்கள் செய்யிற வேலைகளைப் பார்க்க முடியாமல் கிடக்காம்!'

'நீங்கள் ஏன் அந்தரப்படுகிறியள்! அவள் துணிந்துதானே போகப் போறாள். அவளுடைய வேலையை அவள்தான் பார்க்க வேணும்'

திலகம் சரசுக்காகப் பரிந்து கூறினாள்.

'எனக்கு ஒரு நட்சாட்சிப் பத்திரம் வேணுமெண்டு எங்கடை கிராம சேவகரிடம் மூன்று நாளாய்த் திரியிறன். ஆளைக் கண்டாலல்லோ; இண்டைக்கு ஒரு மாதிரிக் காத்திருந்து வேண்டிப் போட்டன்! இனி ஏஜீஏ கந்தோருக்குப்போய் அவரிட்டையும் ஒரு கையெழுத்து வேண்டவேணும்!'

'எங்கடை பகுதி கிராம சேவகர் ஒரு புதுப் பொடியன் தானே...... காலமை இதாலை சயிக்கிலிலை போனமாதிரிக் கிடந்தது' பூரணம் கூறினாள்.

கிராமசேவகர் என்றால் அந்தந்தப் பகுதியில் உள்ள படிச்ச இளைஞர்களை நியமிக்க வேண்டும். இது என்னவென்றால் பத்துக்

கட்டைக்கு அங்காலை உள்ள ஆளைக் கொண்டு வந்து போட்டிருக்கு அந்த மனுசனுக்கு ஆட்களையும் வடிவாய்த் தெரியாது. அவர் இனி பஸ் பிடிச்சு இஞ்சைவாற நேரம் மட்டும் சனங்கள் காத்திருக்ககோணும்! அங்கைபோய் இப்ப பார்க்கவேணும் வெள்ளத்தாலை வீடு விழுந்துவிட்டது, பயிர் அழிந்துவிட்டது. என்று சொல்லி கனசனம் காத்து நிற்கினம்!'

சரசு சலித்துக் கொண்டாள்.

தனது கைப்பையை எடுத்து அந்த மஞ்சள் நிறப்பத்திரத்தை எடுத்துப் பார்த்தாள்.

'இதுதானே நற்சாட்சிப் பத்திரம்?'

திலகம் அதை வேண்டிப் பார்த்தாள்.

'என்ன சரசு, நீ பாஸ்போட் எடுக்கப் போறியே?'

திலகம் கேட்டாள்.

'இல்லை... ஏன்...'

'நற்சாட்சிப் பத்திரம் பெறும் நோக்கம் என்ற இடத்தில் பாஸ்போட் பெறுவதற்காக என்று எழுதி இருக்கு'

'அப்பிடியே! நான் கவனிக்கவில்லை. சரிசரி இஞ்சை கொண்டா அது ஏதோ மாறி எழுதிப் போட்டார் போலை கிடக்கு!'

அவசரம் அவசரமாக சரசு திலகத்திடமிருந்து அதைப் பறித்தெடுத்தாள்.

திலகம் சரசுவை வினோதமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

கொழும்புக்குப் புறப்படுவதற்கு முதல்நாள் இரவு சரசு தன் பெட்டியை அடுக்கிக் கொண்டு இருந்தாள்.

பூரணமும் திலகமும் பார்த்துக் கொண்டே இருந்தனர்.

'நீ எங்கைபோய் ஆரோடை நிற்கப் போறாய் சரசு? முந்தி எண்டாலும் எங்கடை ஆட்கள் எண்டு கனபேர் இருந்தினம் இப்ப ஒருத்தரும் இல்லையே...'

பூரணம் கேட்டாள்.

'நிற்கிறதுக்கே இடமில்லை! என்னோடை வேலை செய்யிற இரண்டு பிள்ளையளும் வருகினம்தானே! என்ன பயம்...'

'சரசு கவனமடி! நகையளைக் கண்டபடி போடாதை!'

'நான் ஏன் நகைகளைக் கொண்டு போறன்? என்னுடைய சின்னச் சங்கிலியை மட்டும் போட்டுக்கொண்டு போறன்?

சரசு சமீபத்தில் மெல்லியதாக ஒரு புதுச் சங்கிலி செய்திருந்தாள்.

'அக்கா அலுமாரியில் நல்ல சீலைகள் இருக்கு! ஐந்தாறு சீலைகள் நான் ஒருக்கா கட்டினபடி அப்பிடியே புதிசாய் கிடக்கு! நீ பாவிக்கலாம்!'



'நீ இப்ப எங்கை போகப் போறாய்? திரும்பிவாற நோக்கம் இல்லையோ?'

திலகம் சிரித்தபடியே கேட்டாள்.

'வராமல் எங்கை போறது? சும்மா கதைக்குச் சொன்னனான்' சரசு இடைமறித்தாள்.

தனது காதல் விவகாரத்துக்கு வீட்டிலிருந்து இப்படியான எதிர்ப்புக் கிளம்பும் என்று சரசு அறிந்ததுதான். ஆனாலும் அவள் வசந்தனது நேசத்தை உதறி எறியவோ தனது காதலைத் தியாகம் செய்யவோ தயாராய் இல்லை.

சின்ன வயது முதல் இன்றுவரை தான் நினைச்சதைச் செய்து முடிக்கும் இயல்பை முழுமையாகத் தன்னுள் வளர்த்துக் கொண்டவள் சரசு, வசந்தனைப் பொறுத்தவரை அவனுக்கு என்றுமே தன் எண்ணங்களைச் செயலாக்குவதில் தோல்வி கண்டதே இல்லை.

ஆனாலும் தாங்கள் வாழவேண்டியவர்கள். வீணாக அர்த்தமற்ற கட்டுக் கோப்புகளை உடைத்தெறிந்து தமது வாழ்வுப் பாதையை அமைத்தே ஆவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயற்பட்டனர்.

மணித்தியாலக் கணக்காய் உட்கார்ந்து பேசினர். தீர்க்கமான முடிவுகளை எடுத்தனர்.

ஆனால் கடைசி வரைக்கும் தமது எண்ணங்களை வெளியிடவே இல்லை.

சரசு பொங்கி வரும் கண்ணீரை அடக்கப் பெரும்பாடுபட்டாள்.

சுற்றிவர ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாய் பிரயாண ஆயத்தங்களுடன்...

மெல்லிய மேல்நாட்டு இசை அந்தப் பெரிய ஹோல் முழுவதும் பரவியிருந்தது.

ஆயிரம் மின்விளக்குகள் இரவைப் பகலாக்கின.

கடுமையான முகபாவத்தை சந்தை விரித்தபடியே விறைப்பாகத் திரியும் குட்டி அதிகாரிகள்;

சந்தேகப் பார்வை கொண்டு அலையும் பாதுகாப்புப் பிரிவினர்! அப்பப்பா! அவளை அறியாமலேயே ஓர் அன்னிய உணர்வு மேலோங்குகிறது.

'நீர் இந்த நேரம்வரை நல்ல தைரியமாய் இருந்துவிட்டு கடைசியில் புறப்படுகிற நேரத்தில் அழுகிறீரே! என்னத்துக்கு

இந்த அழுகை?'

வசந்தன் கேட்டான்.

இவர்களைப் போலவே பலர்.

சுதந்திரமான வாழ்வை நாடி பிறந்த மண்ணைவிட்டு நெடுந் தூரத்துக்கு அப்பால் பச்சையைத் தேடும் பறவைகளாய்...

நம்பிக்கைகள், அவநம்பிக்கைகள் கலவையாக அவர்களது முகங்களை ஆக்கிரமித்தன.

தாம் தேடும் அமைதியும் சுதந்திரமும் கிடைக்குமா கிடைக் காதா என்ற ஏக்கம்!

பிறந்த மண்ணே சிறையாக இருக்கும்போது அவர்கள் வேறு என்னதான் செய்யமுடியும்?

என்னதான் இருந்தாலும் சரசு ஒரு பெண்! இயல்பான பாச உணர்வுகள் நெஞ்சை முட்டிமோத...

கண்ணீர்தான் பொலபொலவெனக் கொட்டியது.

ஆனால் அவள்தான் எதற்கும் துணிந்து விட்டாளே!

'இண்டர்வியூ திகதி தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. இரண்டு வாரம் கழிந்துதான் வரமுடியும்!'

சரசுவின் சுருக்கமான கடிதம் வந்தது.

திலகம் கடிதத்தைப் படித்துவிட்டு தாயிடம் கொடுத்தாள்.

'இரண்டு கிழமை நிற்கப் போறாளோமோ? அங்கை பயமில் லையே?'

பூரணம் வெகுளித்தனமாய்க் கேட்டாள்.

'என்ன பயம்! உண்மையைச் சொல்லப்போனால் இப்ப அங்கை நிற்கிறதுதான் பெரிய பாதுகாப்பு!'

சிரித்தபடியே திலகம் கூறினாள்.

'சரசு வர இரண்டு கிழமை செல்லுமாம். கடிதம் போட்டி ருக்கிறாள்'

கடிதத்தைப் பூரணம் கனகசபையிடம் கொடுத்தாள்.

கனகசபை மௌனமாகக் கடிதத்தைப் படித்தார்.

'இரண்டு கிழமையும் கொழும்பிலை நிண்டு நல்லாச் செல வழிக்கப் போகிறாவோ! காசு கணக்கக் கொண்டு போயிருக்கிறா போலை கிடக்கு! காப்புச் சங்கிலி எல்லாம் போட்டுக் கொண்டே போனவள்?' பூரணத்தைப் பார்த்துக் கேட்டார்.

'உங்களுக்கு எந்த நேரம் பார்த்தாலும் காசு பணம் நகை நட்டுத்தானே சிந்தனை! வேறை ஒன்றும் ஞாபகம் வராது என்ன!'

பூரணத்தின் வார்த்தைகள் வெறுப்பைக் கக்கின.



இரண்டு வாரங்கள் கழிந்தன. ஒரு வெள்ளிக்கிழமை. திலக மும் பூரணமும் அலுவலாய் இருந்தனர்.

சைக்கிள் மணி கேட்டு திலகம் வெளியே வந்தாள்.

அவளின் பெயருக்கு ஒரு பதிவுத் தபால்.

அதுவும் வெளிநாட்டுக் கடிதம்.

அவளுக்கு ஆச்சரியம் மேலோங்க கடிதத்தைப் பெற்றுக் கொண்டு என்வலப்பை திருப்பித் திருப்பி பார்த்தாள்.

அனுப்பியவரின் பெயராக சரசுவின் பெயரும் மேற்கு ஜேர் மனியில் உள்ள ஏதோ ஒரு இடத்தின் பெயரும் காணப்பட்டது. சரசுவின் கையெழுத்து அவளுக்குப் புரியாதா?

நெஞ்சு படபடக்கக் கடிதத்தைப் பரபரவென்று கிழித்துப் படித்தாள்.

'அக்கா,

என்னை மன்னித்துவிடு. அர்த்தமில்லாத கட்டுப்பாடுகள் என்னை இந்த துரத்திவிட்டது. நான் வசந்தனுடன் இங்கு வாழத் தான் வந்துள்ளேன். உன்னிடம் சொல்லாமல் வந்ததற்காக என்னை அறிந்த நீ நிச்சயம் மன்னிப்பாய் என்பது எனக்குத் தெரியும். இதைவிட வேறுவழி எங்களுக்குத் தோன்றவில்லை. ஓடும் வெள்ளமாக இங்கு வந்துவிட்டோம். உனது வாழ்வை பாலைவனமாக்க அப்பாவுக்கு இடம் கொடாதே! உன் வாழ் வைப் பசுமையாக்குவது உன் கையில்தான் உண்டு. அம்மாவைத் தேற்றுவது உன் பொறுப்பு. சந்திரனைப் பார்த்துக் கொள். எல்லாவற்றையும் சீராக்கிக் கொண்டு விபரமாக எழுதுகிறேன். என்னை வாழ்த்துவாய்தானே!

உன் அன்பான தங்கை'

'ஆருடைய காயுதம் திலகம்!'

வெளியே வந்த பூரணம் திலகம் நின்ற நிலையைக்கண்டு பயந்துவிட்டாள்.

கண்ணீர் கன்னங்களில் வழிய, கடிதத்தைத் தாயிடம் நீட்டினாள் திலகம்.

'என்னடி...'

பதறியபடியே கடிதத்தை வேண்டினாள் பூரணம்.

'என்ரை கடவுளே...! இப்படிச் செய்து போட்டாளே!'

கடிதம் கையிலிருந்து கீழே நழுவியது.

'அம்மா இப்ப ஏன் கத்திறியள்?'

திலகம் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே தாயினரு கில் வந்தாள்.

'இப்ப கத்திக் குளறி ஊரைக் கூட்டப் போறீங்களே?'

அவளின் குரலில் தொனித்த கோபம் பூரணத்தின் அழுகையை நிறுத்தியது.

சத்தம் கேட்டு கனகசபை எழுந்து வெளியே வந்தார்.

'இஞ்சை பாருங்கோ சரசு செய்த வேலையை!'

பூரணம் அழுதபடியே கடிதத்தை எடுத்து கனகசபையிடம் நீட்டினாள்.

அவருக்கு ஒன்றுமே புரியவில்லை.

'சனியன்! சனியன் போய்த் துலையட்டும்! நகை நட்டு எல்லாம் கொண்டு போட்டாளோ தெரியாது! போய்ப்பார்! போ!'

பூரணத்தைப் பார்த்துக் கூறினார்.

'நீங்கள் ஒரு மனுசனே'

'அவள் அங்கை எந்த நிலையில் இருக்கிறாளோ அது கடவுளுக்குத்தானே தெரியும்! இஞ்சை என்ரை பெத்த வயிறு எரியுது! நீங்கள் இப்ப நகை நட்டைப் பற்றிக் கேக்கிறீங்கள்! போய் நீங்கள்தான் பெட்டியைத் திறந்து பாருங்கோ!'

வெறுப்பை உமிழ்ந்தாள் பூரணம்.

'அவள் ஒருத்தனை நம்பித்தானே போனவள்! அவன் பாப்பான்தானே. நீ ஏன் அந்தரப்படுகிறாய்! வீட்டைவிட்டுப் போன நாய் போகட்டுமன்?'

ஒரு பாட்டம் கத்திவிட்டு உள்ளே சென்றார் கனகசபை.

சரசுவின் கடிதம் வந்தநாள் முதல் கனகசபை வீடு தன் முழுச்சோபையையும் இழந்துவிட்டதெனலாம். ஒரு சனியன் விட்டது என்று தன் வாயாலேயே சொன்னது மாதிரியே அதைப் பற்றியே கவலைப்படாத மாதிரி கனகசபை நடந்து கொண்டார். தனது அறையில் உள்ள இரும்புப் பெட்டிக்கு அருகில் உள்ள சாய்மனக் கதிரையில் எப்பவும் படுத்திருப்பார். இல்லாவிடில் பேரேட்டை எடுத்து வைத்துக் கொண்டு ஏதாவது வட்டிக் கணக்குப் பார்த்துக் கொண்டு இருப்பார்.

கூடிய வட்டி கொடுத்தவர்கள் நேராகவும் மறைமுகமாகவும் கூறும் குத்தல் வார்த்தைகளையும் திட்டுகளையும் கேட்டுக்கேட்டு அவரின் காதுகள் - மனம் ஆகிய இரண்டு அவயவங்களும் மரத்துப் போனதோ!

பூரணம் நேரம் கிடைத்தபோதெல்லாம் அழுது தீர்ப்பாள்.

'இவள் இப்படிச் செய்து போட்டாளே!'

இவைதான் அவள் அடிக்கடி கூறும் வார்த்தைகள். ஆனால்



சில சமயங்களில் சரசு செய்ததுதான சரி என எண்ணத் தோன்றும்.

'இந்த மனுசன் உயிரோடு இருக்கும்வரை இதுகளை வாழ விடார்! தன்ரை வாழ்க்கையைத்தானே அமைத்துக் கொள்ளட்டும்!'

தனக்குள் சமாதானம் ஆகிக்கொள்ளுவாள்.

ஆனால் திலகமோ சரசு செய்தது முற்றிலும் சரி என்றே தன்னுள் எண்ணிக் கொண்டாள்.

அவள் படித்தவள். பொறுமையாகச் சிந்தித்தாள். அர்த்தமில்லாத கட்டுப்பாடுகளைத் தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டு தன்னையும் மிருகமாக்கி, நல்லதொரு வீட்டுச் சூழலையும் நரகமாக்கும் தந்தையின் போக்கில் எதுவித மாற்றமும் ஏற்படப் போவதில்லை என்பது வெளிப்படை. ஆகையால் சரசு தான் விரும்பியவாறு தன் வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொள்வதில் எதுவித தவறும் இல்லை என்பதை உணர்ந்தாள். அடிக்கடி சரசுவின் கடிதம் வரும். பதில் எழுதிப் போடுவாள். யாருமறியாமல் பூரணம் கடிதங்களைப் படிப்பாள். ஒருவருடனும் பேசாமல் உம்மென்று இருப்பாள். பின் ஒருபாட்டம் அழுது தீர்ப்பாள்.

# 8

பூரணம் இப்பொழுது முருகன் கோவிலுக்கோ அல்லது வேறு ஏதாவது விஷேசங்களுக்கோ போவதை நிறுத்திவிட்டாள்.

இளையமகள் சரசுவைப் பற்றிய செய்திகள் அனேகமாக கிராமத்தில் சகலருக்கும் தெரிந்த ஒரு விஷயமாகிவிட்டது. வாடகைக்கு கார் வைத்திருக்கும் சரவணமுத்துவின் மகன் ஜேர்மனியில் இருக்கின்ருன். அவன் தனது வீட்டாருக்குக் கடிதம் எழுதும்போது 'அடைவு கடை கனகசபையின் இளையமகள் சரசுவும் கலியாணம் முடிச்சுக் கொண்டு இஞ்சை வந்திருக்கினம். தற்செயலாய் கண்ட இடத்தில் ஊர்ப் புதினங்களை அறிந்து கொண்டேன்'— என்று எழுதியிருந்தான்.

அதிலிருந்து தொடங்கிய ஊரார்ரின் ஆவல் நிறைந்த விசாரணைகள், எல்லாவற்றையும் அம்பலத்துக்குக் கொண்டு வந்து விட்டன.

'இளைய மகளும் போட்டாளாம்! பொடியன் எப்பிடி?'

'என்ன பூரணம் சொல்லாமல் கொள்ளாமல் விஷயத்தை முடிச்சுப் பொம்பிளையையும் வெளியிலை அனுப்பிப் போட்டாய்!'

இப்படிச் சிலர் பூரணத்தை நேரில் கேட்டதிலிருந்து அவள் வெளியே போவதை நிறுத்தி விட்டாள்.

கனகசபைக்கு ஒரு கவலையுமில்லை. ஏனெனில் அவர் வீட்டை விட்டு வெளியே போவது மிகமிக அபூர்வம்!

'ஊருக்குப் பயந்து சாகிறியள்! பேசாமல் உங்கடை அலுவலைப் பாருங்கோ!'

திலகம் தாயின்மீது கோபிப்பாள்.

பூரணத்துக்கு வியப்பாக இருந்தது.

பொதுவாக திலகம்தான் தன் பேச்சு, செயல் யாவற்றிலும் ஒரு நிதானத்துடனும், சதா கூச்சப்பட்டும் இருந்தவள்!

இவள் இப்படி மாறிப் போனுளே என்று தன்னுள் எண்ணிக் கொண்டாள்.

இப்பொழுது எல்லாமே காலம், முறை என்று ஒரு நியதிகளை மறந்து செயல்பட ஆரம்பித்துள்ளன.

மனிதர்கள் நெஞ்சமெல்லாம் வஞ்சகமாய் முறை தவறி நடக்கும்போது இயற்கை மட்டும் என்ன சளைத்ததா?

கடந்த இருபது நாட்களாக சூரியன் எங்குபோய் ஒழித்துக் கொண்டானே தெரியாது! மப்பும் மந்தாரமுமாய் பேய் மழை



பெய்து ஊரே வெள்ளக் காடாய்க் காட்சி அளித்தது. தாழ்வான இடங்களிலிருந்து மக்கள் குடிபெயர்ந்து பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் என்று தற்காலிகமாகக் குடியேறினர். வெள்ள அகதிகளுக்கான நிவாரண வேலைகள் நடந்து கொண்டிருந்தன.

வீடு வீடாகப் பணம், உடுப்புகள் என்று இளைஞர்கள் சேகரித்தனர். அரசு இயந்திரம் செயல்ப்பட்டு அந்த உதவிகள் வர வாரக்கணக்கில் செல்லும்.

திலகம் வீட்டுக்கும் சில இளைஞர்கள் வந்தனர். சரசு வைத்து விட்டுச் சென்ற நல்ல சேலைகளையும் தனது இரண்டொரு சேலைகளையும் திலகம் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்தாள் பூரணம். அவர்கள் வெளியே சென்றதும் திலகத்தின்மேல் பாய்ந்தாள்.

'என்னடி திலகம், உனக்கு மூளை ஏதன் இருக்கே? இந்த நல்ல சேலைகளைக் கொண்டு வந்து கொடுத்தியே!'

'நல்ல சேலைகளைக் கொடுக்காமல் கிழிந்ததையே கொடுக்க? அதுகள் உடுக்கத்தானே வேண்டும்!'

'சரசு நீ கட்டுவாய் என்றுதானே அந்த நல்ல சேலைகளை வைச்சுப் போட்டுப் போனவள்! அதையும் கொடுத்துப்போட்டியே......?' பூரணம் அங்கலாய்த்தாள்.

'இஞ்சை உள்ளதையே கட்ட ஆள் இல்லாமல் கிடக்கு......' இப்படிச் சொல்லிக் கொண்டே திலகம் உள்ளே சென்ருள். பூரணம் ஏதோ முணுமுணுத்தபடியே திலகம் போவதைப் பார்த்துக் கொண்டு நின்ருள்.

அன்று வெள்ளிக்கிழமை. காலையிலிருந்தே பெய்த மழை மத்தியானம் சிறிது ஓய்ந்தது. அவசரம் அவசரமாகக் குளித்துவிட்டு திலகம் முருகன் கோயிலுக்குச் சென்ருள். சொல்லி வைத்தாற் போல கோயிலுக்கு வேறு ஒருவரும் வரவில்லை. வழக்கமாகப் பூசை செய்யும் குருக்கள் காணப்படவில்லை. அவரின் தந்தையார் தான் பூசைக் காரியங்களைக் கவனித்தார்.

அவருக்கு வயதாகிவிட்டபடியால், அலுவல்களை மிக ஆறுதலாகவே செய்து கொண்டிருந்தார்.

மழை மீண்டும் பெய்யத் தொடங்கியது. திலகம் திடுக்கிட்டாள். அவசரத்தில் குடையை எடுத்து வர மறந்துவிட்டாள்.

பழனி ஆண்டவர் சன்னதியில் பூசை நடந்து கொண்டிருந்த போது குடையும் கையுமாய் சிவனேசன் கோவிலுக்குள் நுழைந்தான்.

அவனைத் திலகம் பார்த்துவிட்டாள். அவளின் நெஞ்சு படக்

படக்கென்று அடித்தது. இனம் தெரியாத மகிழ்ச்சி உணர்வு ஒன்று. அவளின் உடலெங்கும் மின்சாரமாய் ஓடியது. சிவனேசன் திலகத்தைக் கண்டதும் முகம் மலரச் சிரித்தான். பதிலுக்கு திலகமும் அடக்கத்துடன் சிரித்துக் கொண்டாள்.

பூசை யாவும் முடிந்து குருக்கள் விபூதி பிரசாதம் வழங்கினார்.

'என்ன ஐயா! இன்றைக்கு ஆட்கள் ஒருவரையும் காணவில்லை?' சிவனேசன் குருக்களைப் பார்த்துக் கேட்டான்.

'ஏன் நான் நிற்பது இவரின் கண்களுக்குத் தெரியவில்லையோ?' திலகம் பொய்க்கோபத்துடன் தனக்குள் சொல்லிக்கொண்டே அவனை நோக்கினாள்.

சிவனேசன் குறும்பு ததும்ப ஓரக்கண்ணால் அவளைப் பார்த்துக் கொண்டான். 'என்ன செய்யிறது! மழை ஏதோ உலகத்தை அழிக்கிற மாதிரிப் பெய்கிறது! வழக்கமாக வாற ஆட்களும்கூட இண்டைக்கு வரவில்லை!'

குருக்கள் குறைபட்டுக்கொண்டே உள்ளே போய்விட்டடார்.

'என்ன திலகம் பேசாமல் நிற்கிறீர்?'

'என்ன மாதிரி வீட்டுக்குப் போவது என்றுதான் யோசிக்கிறன். குடையும் கொண்டு வரவில்லை...'

'அப்ப அதுமட்டுந்தான் யோசனையா?'

ஆவல் ததும்ப சிவனேசன் திலகத்தை நோக்கினான். திலகம் பேசாமல் நின்றாள். அவளின் இதழ்க்கடையில் ஒரு புன்னகை ஓடி மறைந்தது.

'திலகம், நான் இந்தக்கிழமை எப்பிடியாவது உம்மைக்கண்டு கதைக்க வேணுமென்று ஆசைப்பட்டேன். நல்ல காலமாய் இன்றைக்கு நேரம் கிடைத்துள்ளது. இதில கொஞ்சம் ஆறுதலாய் இருந்து கதைப்போம்! சொல்லி வைச்சாப்போல வேறு ஒருவரும் இடைஞ்சலாய் இல்லை! மழைக்கு நன்றி சொல்ல வேண்டும்...!'

வெகு உற்சாகமாய் அமைந்தது அவனின் குரல்.

ஆனால்,

திலகமோ, வெகு மௌனமாய் நின்றாள்.

'இந்த மௌனம்தான் எனக்குப் பிடிக்காத ஒன்று! இதில இரும்மன்!' சிவனேசன் கீழே இருந்துவிட்டான். இருந்ததுமட்டுமல்ல, சடாரென்று திலகத்தின் கையைப் பிடித்து இழுத்தும் விட்டான்!

'என்ன சிவா இது! யாரும் பார்த்தால்...' கோபத்துடன் ஒலித்தது திலகத்தின் குரல்.



உண்மையில் அவனுடைய ஸ்பரிசம் பட்டதும் திலகம் குதூகலம்தான் அடைந்தாள். ஆனால் பெண்களுக்கே இருக்கும் நாணமும் வெட்கமும் பயமும் முன்னுக்கு நின்றன.

திலகம் ஒன்றும் பேசாமல் கீழே அமர்ந்து கொண்டாள்.

இருவரும் முன்னர் இப்படிப் பிறர் அறியாமல் சந்தித்துக் கதைத்ததுண்டு. கடிதங்கள் பரிமாறியதுண்டு. ஆனாலும் இன்று மாதிரி சாவகாசமாக இருந்து கதைக்கும் சந்தர்ப்பம் முன்னர் ஏற்படவில்லை. உள்ளுக்குள் திலகம் இச்சந்தர்ப்பத்தை விரும்பினாலும் அதை வெளிக்காட்டாமல் இருந்தாள்

'அதுசரி, எங்களுடைய விஷயத்தைப்பற்றி அம்மா சொல்லிவிட்டவதானே! இதுவரை நீங்கள் ஒரு மறுமொழியும் சொல்லிவிடவில்லையே! இப்படி எத்தனை நாளைக்கு நாங்கள் மற்றவை கண்டும் காணாமலும்...'

பெரும் குறையுடன் ஒலித்தது சிவனேசனின் குரல்.

'உங்களுக்குத் தெரியும்தானே சிவா எங்களுடைய வீட்டு நிலைமை! சரசுவின் கலியாணத்துப் பிறகு வீட்டில் கொஞ்சம் நஞ்சமிருந்த சந்தோஷமும் இடம் தெரியாமல் போய்விட்டது! இந்த நிலையில்...'

'அது எனக்குப்புரியும் திலகம்! அதுதான் நாங்களும் கொஞ்ச நாள் போகட்டும் என்று பேசாமல் இருந்துவிட்டோம். ஆனால் இப்ப அது எல்லாம் நடந்து ஏழெட்டு மாதங்களுக்கு மேலாகி விட்டனவே! இனிப் பேச்சைத் தொடங்கலாம்தானே! உங்கடை அப்பா என்ன சொன்னவர்...?'

'அப்பாவோ... அப்பாவுக்கு இதுவரை ஒன்றும் தெரியாது! அம்மா இன்றுவரை அவரிடம் இதுபற்றி ஏதாவது சொன்னாவோ எனக்குத் தெரியாது! உங்களுக்குத் தெரியும்தானே அப்பாவின் குணம்!'

திலகத்தின் முகம இறுகியது.

'அதுசரி உம்முடைய தம்பி சந்திரன் இப்ப எங்கே? வீட்டுக்கு வாறவனே?'

சிவனேசன் பேச்சை மாற்றினான்.

'அம்மாவுக்கு அதுவேறு கவலை அம்மாவுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும்தான்! நாங்கள் என்ன செய்யமுடியும்? அவனும் அவனுடைய போக்கும்!'

திலகம் சலித்துக் கொண்டாள்.

'அவன்தான் மனுசன்! சுதந்திரமென்று சொல்லிக்கொண்டு என்ன துணிகரமான வேலை எல்லாம் செய்கிறான்! எங்களைப் போலவே? நாங்கள் உத்தியோகத்தையும் விட்டுப்போட்டு வீட்டுக்குள்ளை இருக்கிறம்!

'ஒவ்வொரு நாளும் பேப்பர் வாசித்துவிட்டு நாலு பேருடன் கதைச்சுப் போட்டுப்போய் சாப்பிட்டு நித்திரை கொள்கிறம்!'

'எல்லோரும் ஒரே மாதிரி இருக்க முடியாதே சிவா! அது ஒவ்வொருவருடைய மனப்போக்கு!'

'அப்பிடி இல்லை திலகம்! நான் இதைப்பற்றிக் கொஞ்ச நாட்களாய் யோசித்துக் கொண்டுதான் இருக்கிறன். நாங்கள் பொடியன்களை பலிக்கிடாக்களாய் முன்னுக்கு விட்டுப்போட்டு சும்மா இருக்கிறம்! ஏதோ நாங்களும் வயதுக்கு ஏற்ற மாதிரி செய்யக் கூடிய வேலைகளை என்றாலும் செய்யவேணும்!'

'வடிவாய் செய்யுங்கோ! நான் அதற்குத் தடையில்லை! வீணாய் போய் மோட்டுத்தனமாய் மாட்டுப்படாதேயுங்கோ ஒவ்வொருவரும் தங்களுடைய பங்களிப்பு என்னவென்று யோசித்து முடிவு எடுக்க வேண்டியதுதான்'

இதற்குள் குருக்கள் வெளியே வந்தார். ஒரு சிறிய இலையில் கொஞ்சம் சர்க்கரைப் பொங்கலை வைத்து சிவனேசனிடம் நீட்டினார்.

'கொஞ்சம் பிரசாதம் சாப்பிடுங்கோ'

'அதற்கென்ன ஐயா!'

சொல்லிக்கொண்டே இரு கைகளாலும் அதைப் பெற்றுக் கொண்டான் சிவனேசன்.

குருக்கள் மறுபடியும் உள்ளே போய்விட்டார்.

சிவனேசன் பிரசாதத்தை தானும் எடுத்துக் கொண்டு மீதியை இலையுடன் திலகத்திடம் நீட்டினான்.

திலகம் அதை வேண்டி கீழே வைத்து விட்டாள்.

'சாப்பிடுமன்!'

ஆனால் திலகம் பேசாமல் இருந்தாள்.

'ஏன் வெட்கப்படுகிறீர்...... நான் தீத்தி விடவே...?'

குறும்பாகச் சிரித்தான் சிவனேசன்.

'உங்களுக்கென்ன பைத்தியமே...?'

சொல்லிக் கொண்டே இலையில் இருந்த மிகுதிப் பிரசாதத்தை எடுத்து வாய்க்குள் போட்டுக் கொண்டாள். இல்லாவிடில் சொன்னமாதிரியே சிவனேசன் செய்து விடுவான் என்று அவளுக்குத் தெரியும்.

'இந்தாரும் இதைப்பிடியும்! இதுதான் நான்தாற கடைசிக் கடிதம்!'

சிவனேசன் ஒரு கடிதத்தை எடுத்து திலகத்திடம் கொடுத்தான்.



திலகம் துணுக்குற்றாள்.

'ஏன் சிவா, இப்படிக் கடைசிக் கடிதம் என்று சொல்கிறீர்கள்?' அவளுக்குக் கண்கள் கலங்கி விட்டன.

'பின் என்ன? நானும் கடிதம் கடிதமாய் எழுதிக் குவித்துக் கொண்டிருக்கிறன். வீட்டிலே கலியாணம் பேசி ஒரு நாளைக்கு நாலு புறோக்கர்மார் படை எடுக்கினம்! நான் எத்தனை நாளைக்குப் பொறுப்பது? நீரும் ஒருபிடி கொடுக்காமல் மௌனமாய் இருக்கிறீர்!'

'அம்மா வாறபோலை கிடக்கு...!'

சொல்லிக் கொண்டே திலகம் தான் இருந்த இடத்தைவிட்டு எழுந்து கடிதத்தை அவசரம் அவசரமாக நெஞ்சுச் சட்டைக்குள் செருகிக் கொண்டாள். மழைக்கு ஒரு குடையைப் பிடித்தபடி, கையில் ஒரு குடையுமாய் பூரணம் கோயில் வாசலுக்கு வந்தாள். அதற்குள் திலகமும் சிவனேசனும் வெளிவாசலுக்கு வந்துவிட்டனர். இருவரையும் ஒருங்கு சேரக் கண்ட பூரணத்தின் முகம் சட்டென்று கறுத்தது.

'ஏன் குடையை விட்டிட்டு வந்தனி?'

அதற்குத் திலகம் பதில் சொல்ல முற்பட்டாள்.

'சரி சரி வா!'

குடையைத் திலகத்திடம் நீட்டினாள் பூரணம்.

திலகம் குடையை வாங்கிக் கொண்டு பூரணத்தின் பின் சென்றாள். போகும்போது திரும்பிப் பார்த்தாள். சிவனேசன் கையை அசைத்தான்.

திலகம் புன்முறுவலுடன் தலையை ஆட்டிவிட்டு நடந்தாள்.

பூரணம் இதைக் கவனிக்கவில்லை.

ஆனால் அவளுடைய உள்மனதில் ஒரு பெரிய போராட்டம்!

'ஓ இப்படியோ சங்கதி! இதைவிட்டால் பெரிய பிழை! இண்டைக்கு அவரிட்டை விஷயத்தைச் சொல்லி இதுக்கு முடிவு எடுக்க வேணும்...!'

தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

வீடு திரும்பும் வரையும், திரும்பிய பின்னரும் பூரணம் திலகத்திடம் இதுபற்றி ஒன்றுமே கதைக்கவில்லை.

ஆனால் திலகத்துக்கோ மனம் என்றுமில்லாதவாறு பரபரப்புமாய் அங்கலாய்ப்புமாய் திரிந்தாள்.

இனம் புரியாத ஒரு உணர்வு ஒன்று அடி வயிற்றைப் பிசைந்தது. காரணம் இல்லாத அவஸ்தைக்கு ஆளாகித் தவித்தாள்

# 9

இரவு சாப்பிட்டுவிட்டு கனகசபை முன் வராந்தாவில் தனது பிரியமான ஈசிச் செயரில் வெகு ஆறுதலாகச் சாய்ந்திருந்தார். நல்ல பச்சைப் பெருமாள் கறுத்தப் பச்சை அரிசிமாப் புட்டும் உள்ளி நிறையப் போட்டு வைத்த வெந்தயக் குழம்பும் என்றால் அவர் வெகு உற்சாகமாய் நாக்கைச் சப்புக் கொட்டிச் சாப்பிடுவார். அவரின் ருசி அறிந்து செய்வதில் பூரணம் கெட்டிக்காரி. இன்றும் அதே வகையான சாப்பாடுதான். நல்ல உற்சாகமாய் இருந்தார்.

'எங்கையப்பா வெற்றிலைத் தட்டம்?'

உள்ளுக்குள் பார்த்துக் குரல் கொடுத்தார்.

'கொண்டு வாறன் பொறுங்கோ!'

சொல்லிக் கொண்டே பூரணம் வெற்றிலைத் தட்டுடன் வந்து அவருக்குப் பக்கத்தில் கீழே அமர்ந்தாள். பாக்கை எடுத்து மெல்லிய சீவலாகச் சீவி கையில் கொடுத்தாள்.

சீவல் கொஞ்சம் பெரிதாய் இருந்துவிட்டால் தொலைந்தாள் அவள்!

'என்னடி விறகுதடி மாதிரி வெட்டி வைச்சிருக்கிறாய்!' கனகசபை சொல்லுவதோடு மட்டுமல்லாமல் பூரணத்தின் முகத்தின்மீது வீசி எறிந்து விடுவார். அந்த துர்வாசக் குணத்துக்கு ஈடு கொடுக்கத்தான் பூரணம் நன்கு பழகிக் கொண்டாளே!

வெற்றிலையைச் சுண்ணும்பு பூசி மடித்துக் கொடுக்க, கனகசபை வெகு லாவகமாக வாய்க்குள் திணித்து, மென்று எழுந்து போய் ஒருதரம் உமிழ்ந்துவிட்டு மறுபடியும் அட்டணைக்கால் போட்டுக் கொண்டு அமர்ந்து வெற்றிலையை நன்கு ரசித்துச் சப்பினார்.

'அது சரியப்பா, நான் ஒரு விஷயம் சொல்லப் போறன். கொஞ்சம் ஆறுதலாய் கேளுங்கோ...'

பெரிய பீடிகையோடு பூரணம் கனகசபையைப் பார்த்தாள்.

'என்ன சங்கதி...?'

'இவள் திலகத்தை நெடுகலும் இப்பிடியே வைச்சிருக்கப் போறியளே? அவளுக்கு இப்ப எத்தனை வயதெண்டு கொஞ்சமெண்டாலும் யோசிச்சியளே?'

பூரணம் இவ்வளவும் கூறிவிட்டாள். ஆனாலும் உள்ளுக்குள் பயம். எங்கே கனகசபை எகிறிப் பாய்வாரோ என்று!



'அதுக்கு நான் என்ன செய்யிறது! அவை அவையின்ரை தலை எழுத்துப்படி நடக்கட்டும்!'

'இப்பிடிச் சொல்லாதேயுங்கோ! நான் ஒரு விஷயம் சொல்லப் போறன். அது அநேகமாய்ச் சரிவரும்! எங்கடை கோயிலடி வாத்தியார் காசிலிங்கத்தாற்றை மகன் சிவனேசன் திலகத்தை விரும்புகிறானும். அவனும் நல்ல உத்தியோகம். ஆளும் நல்ல பொடியன். முந்தி ஒருக்கா தாய்க்காரி எங்கடை கற்பகம் அக்கா விட்டை இதைச் சொல்லி அனுப்பி எங்கடை விருப்பத்தைக் கேட்டவ. நான் எங்கடை பிரச்சனையள் முடியட்டும் எண்டு பேசாமல் இருந்தனான். இவ்வளவு நாளும் உங்களிட்டைச் சொல்லவில்லை. இனி பொடியன் விரும்பி வாறதெண்டபடியால் சீதனப் பிரச்சினையும் அவ்வளவு இருக்காது. இனி இவள் திலகத்துக்கும் நல்ல விருப்பம்போலை தெரியுது!'

மூச்சுவிடாமல் சொல்லிக் கொண்டே கனகசபையின் முகத்தைப் பூரணம் நோக்கினாள்.

மிகவேகமாய் எழுந்துபோய் முற்றத்தில் மிகுதி வெற்றிலைச் சாறையும் பளிச்சென்று துப்பினார். கனகசபை எழுந்து வந்த வேகத்தில் திரும்பி வந்தார்.

'அடி செருப்பாலை எண்டானும்! அவையும் பொம்பிளை கேட்டு வந்திட்டினமோ! கோயிலடி வாத்தி ஆர் பகுதி எண்டு உனக்கு விளங்குமே? உனக்கு மூளை இருக்கே? எங்கடை பரம்பரையிலை அவங்கடை வீடுகளில் செம்பும் தண்ணியும் தூக்கி இருப்பினமே? அவையின்ரை பணமும் உத்தியோகமும்! என்னுடைய கால் தூசிக்கு வருமே? போயும் போயும் அங்கையே மாப்பிள்ளை பார்க்கிறாய்! மடைச்சி! மடைச்சி!'

அவர் தேகம் படபடத்தது.

'இப்ப ஏன் கத்திறியள்? அதுகளின்ரை சாதி சனத்துக்கு என்ன குறை? ஆகத்தான் நூல் பிடிச்சுக்கொண்டு நிற்கிறியள்! குலம் கோத்திரம் என்று கூத்தாடிக் கொண்டு உருப்படியான காரியங்களைச் செய்யத் தெரியாத உங்களிலும் பார்க்க அதுகள் நல்ல சனங்கள்! திலகமும் அவனைத்தானே விரும்புகிறாள்! உங்களுக்கென்ன கசக்குதே இதைச் செய்து வைக்க? இப்படியே வாழ்நாள் எல்லாம் சொல்லிக்கொண்டு அவளின்ரை சீவியத்தைப் பாழாக்குங்கோ!'

பூரணத்துக்கு அழுகை பீறிட்டது.

'பூரணம் மழைக்கால் இருட்டெண்டாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது! இந்தத் தில்லையற்றை கனகசபை கண்டநிண்ட இடத்திலை கைநனையான்! திலகம் குமராய் இருந்து செத்தாலும்

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST

பரவாயில்லை! ஆனால், கோயிலடி வாத்தியின்ரை பொடியனுக்குச் செய்யமாட்டன்! அதை மட்டும் ஞாபகத்தில் வைச்சுக்கொள்!'

நடந்தது, நடப்பது யாவும் தன்னை ஒன்றும் செய்யாது என்ற ரீதியில் சுகமான நித்திரையின் பிரதிபலிப்பாய் கனகசபையின் குறட்டை ஒலி முழுவீட்டையும் ஆக்கிரமித்தது. கோழித்தூக்கம் கொள்வதும் விழிப்பதுமாய் பூரணம் நெஞ்சு நிறைந்த பாரத்துடன் தலைக்கு கையை வைத்தபடியே தலைவாசலில் படுத்துக் கொண்டாள்.

ஆனால் திலகத்துக்கோ...

இரவு சிவராத்திரியானது. ஏமாற்றத்தின் எல்லைக்குத் தள்ளப்பட்ட திலகம் கண்ணீரினால் தலையணையைத் தெப்பமாக்கினாள்.

அவளால் வேறு என்ன செய்யமுடியும்? இயற்கையாய் அமைந்த அடக்கம் கூச்சம் காரணமாய் தனது உரிமைகளை தங்கை சரசு மாதிரி செய்து காட்டி, வெல்ல முடியாமல்போன இயலாமையை நினைத்து அழுதாள்.

சிவனேசனின் முகம் இரவு முழுவதும் விசுவரூபம் எடுத்து அவளைச் சாகடித்தது!

'திலகம் உனக்குத் துணிவில்லை! நீ காதலிக்க அருகதை அற்றவள்!' சிவனேசன் நேருக்கு நேர் நின்று பேசுவதுபோல் இருந்தது. எல்லாமே பிரமைதான்!

ஆனால் பெற்றோரை, சட்ட திட்டங்களை மீறி அவளால் ஒன்றுமே செய்யமுடியாத கோழை நெஞ்சைப் படைத்த இறைவனைத் தன்னுள் திட்டினாள். தங்கை சரசுவின் செய்கைகளை நியாயப்படுத்திய தன் மனத்துணிவும் தென்பும் தன் விஷயத்தில் ஏன் கைகொடுக்கவில்லை?

இயற்கையாய் பெண்களுக்கே அணிகலனாக அமைந்த தன்னடக்கம் முன்னால் நின்று அவளை வீழ்த்திவிட்டது.

# 10

உலகம் ஓய்ந்து விடவில்லை. வழமைபோல் முருகன் கோயில் மணி அடித்தது.

ஆனால் எதுவித பரபரப்புமின்றி மெதுவாக எழுந்துவந்தாள் திலகம். வழக்கமாக தன் உள்ளங்கையையோ கண்ணாடியையோ இன்று பார்க்கவில்லை. பார்க்க மனம் விழையவில்லை. இயந்திரம் மாதிரி நடந்தாள். படுக்கையறை லைற் மின்னலடித்தது. அதை அவள் பார்க்காமலேயே வெளியே சென்றாள்.

நடுஅறை லைற்றை எரியவிட்டு, அதன் வெளிச்சத்தில் கிணற்றடிக்குச் செல்லும் வெளிக்கதவைத் திறந்தாள். ஏதோ இனம் புரியாத சத்தங்கள் வெளியே கேட்டு அவளைத் திடுக்கிட வைத்தன. தூரத்தில் ஒரு வெடிச் சத்தம் கேட்டது. திலகத்தின் நெஞ்சு துணுக்குற்றது. பின்பக்க வீட்டுச் சுவரைத்தாண்டி யாரோ ஒரு உருவம் மாட்டுக் கொட்டிலடியை நோக்கி ஓடுவது அந்த மையிருட்டிலும் நன்கு தெரிந்தது. தொடர்ந்து துப்பாக்கி வேட்டுகள் சரமாரியாகக் கேட்டன. திலகம் ஓடிவந்து நடுஅறை லைற்றை அணைத்துவிட்டு சுவரோடு சுவராக நின்றாள். அவளின் மெல்லிய தேகம் நடுங்கியது. துப்பாக்கி வேட்டுக்களைத் தொடர்ந்து, காதைப் பிளக்கும் பேரிரைச்சலுடன் கனரக வாகனங்கள் வீதியால் தொடர்ந்து சென்றன. வீடே அதிர்ந்தமாதிரி இருந்தது.

வாகனங்கள் ஒவ்வொன்றாகச் சென்று சத்தங்கள் ஓய்ந்த பின்பும் திலகத்தின் நடுக்கம் குறையவில்லை. அவளது தம்பி சந்திரனின் முகம் அடிக்கடி தோன்றி மறைந்தது.

'கடவுளே எங்கை நிற்கிறானோ! என்ன செய்கிறானோ? முருகா அவனுக்கு ஒன்றும் வராமல் காப்பாற்று!'

திலகத்தின் கண்கள் கலங்கி குளமாகின.

மாட்டடியில் பசு குரல் கொடுத்தது. மடிசுரந்து நோ எடுத்ததோ என்னவோ? பால் கறக்கும் மணிக்கணக்கு அதற்கு அத்துப்படி.

அதற்கு அதன் கவலை. வாயில்லா ஜீவன் அது வேறென்ன செய்யும்!

ஆனால், திலகம் பயப்பிராந்தியால் ஒன்றும் செய்யத் தோன்றாமல் மறுபடியும்போய் படுக்கையில் சாய்ந்தாள்.

இனம்தெரியாத பயம் ஒன்று மெல்லமெல்ல எழுந்து அவளின் தேகம் எங்கும் வியாபித்தது.

முருகன் கோயில் பக்கம் பெரிய குண்டுச் சத்தங்களும்,

இடைக்கிடை சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுகளும் கேட்டன.

'கடவுளே! கடவுளே!'

இதைத்தவிர வேறொன்றும் திலகத்தால் சொல்லமுடியவில்லை.

காலை ஆறு மணியாகிவிட்டது. சத்தங்கள் ஓய்ந்ததும் திலகம் இயந்திரம் மாதிரி எழுந்து மெதுவாக வழமையான காரியங்களைக் கவனித்தாள்.

தேநீர் கசந்தது.

தேநீர் மட்டுமா?

இந்த உலகமே கசந்தது.

'எங்கையப்பா தேத்தண்ணி!'

கட்டைக்குரலில் கத்தினார் கனகசபை.

பூரணம் தேநீரை எடுத்துக் கொண்டுபோய் அவரிடம் கொடுக்க, அவர் மெதுவாக ரசித்துக் குடித்துக் கொண்டிருந்தார்.

'பூரணம்! எடி பூரணம்!'

கற்பகம் ஓட்டமும் நடையுமாய் வெளிக்கேற்றைத் திறந்து கொண்டு ஓடி வந்தாள்.

'எடி பூரணம் உனக்குச் சங்கதி தெரியுமே...?'

கிழவியின் முகம் பேயறைந்தது மாதிரி இருந்தது.

'என்ன அக்கா... என்ன நடந்தது?'

பூரணம் திடுக்கிட்டுக் கேட்டாள்.

இதற்குள் கற்பகத்தின் குரலைக் கேட்டுத் திலகமும் வெளியே வந்தாள்.

'ஐயோ, எங்கடை கோயிலடி வாத்தியாற்றை மகன் சிவனேசனை ஆமிக்காரர் சுட்டுப்போட்டினம்! பொடியன் வீட்டு வாசலில் செத்துப்போய்க் கிடக்கிறான். தாய் தகப்பன் கத்திக்கொண்டு நிற்கினம்! கண்கொண்டு அந்தப் பரிதாபத்தைப் பார்க்க ஏலாமல் தான் இஞ்சை ஓடி வந்தனான்!'

'ஐயோ கடவுளே...!'

பூரணம் தலையில் கை வைத்தாள்.

'என்ரை ஐயோ...!'

கத்திக்கொண்டே மரம் வீழ்ந்தமாதிரி திலகமும் கீழே வீழ்ந்தாள். அவள் கத்திய சத்தமும், கீழே வீழ்ந்த சத்தமும் கேட்டு, பூரணம் திரும்பிப் பார்த்தாள்.

மகள் வீழ்ந்து கிடந்த கோலத்தைக் கண்டதும் துடித்துப் பதைத்துக் கிட்ட ஓடி வந்தாள்.

'ஐயோ இஞ்சை ஒருக்கா ஓடி வாருங்கோ'

பூரணம் கனகசபை நின்ற இடத்தைப் பார்த்துக் கத்தினாள்.



'என்னப்பா கத்துகிறாய்'

கனகசபை ஆறுதலாய் நடந்து வந்தார்.

அடியற்ற மரம்போல திலகம் அலங்கோலமாக கீழே வீழ்ந்து கிடந்தாள். கண்கள் மேலே விழித்துப் பார்த்தபடி இருந்தன.

'கொஞ்சம் தண்ணி கொண்டாடி பூரணம்!'

கற்பகம் கூற, பூரணம் ஓடிப்போய் செம்பில் தண்ணீர் கொண்டு வந்தாள். அதைக் கற்பகம் வேண்டி திலகத்தின் முகத்தில் அடித்துத் தெளித்தாள்.

'திலகம்! எடி திலகம்! இஞ்சை பாரடி!'

பூரணம் கண்ணீர் சிந்தியபடியே திலகத்தின் முகத்தை தன் இரு கைகளால் இரண்டு பக்கமும் ஆட்டினாள்.

ஆனால்,

திலகம் இந்தக் கேடுகெட்ட உலகத்தை இனித் திரும்பிப் பார்க்கமாட்டாள்.

இந்த அர்த்தமில்லாத, வீணான கட்டுப்பாடுகள், நெருக்கடிகள் நிறைந்த இந்த உலகத்துச் சிறையிலிருந்து அவள் விடுபட்டு சுதந்திரப் பறவையாய் பறந்துபோய் பல கணங்களாகி விட்டனவே!

ஒருவேளை சிவனேசனின் ஆவியும் திலகத்தின் ஆவியும் சுதந்திரமான காற்றை நிச்சயமாக அனுபவிக்கத்தான் செய்யுமோ?

## லீலா பேக் ஹவுஸ்

ஸ்தாபனத்தாரின்

பிஸ்கட்டுகளைச் சுவைத்து மகிழுங்கள்

## ✱ லீலா பிஸ்கட்டுகள் ✱

ஒரு தமிழீழத் தயாரிப்பு

கைதேர்ந்த தொழில் நுட்ப வல்லுநர்களால்

நல்ல தரமாகத் தயாரிக்கப்பட்டவை

AUM

**LEELAA BAKE HOUSE**

**லீலா பேக் ஹவுஸ்**

எமது தாயாரிப்பிற்கு நீங்கள்

தரும் பேராதரவுக்கு

நன்றி!

மார்க்கட் சதுக்கம்,
சங்கானை.

---

ஊர் உலக செய்திகளை
உடனுக்குடன் வாசிக்க

## ✱ உதயன் ✱

(நாளிதழ்)

வாரம் முழுவதும் வைத்து வாசிக்க

## ★ சஞ்சீவி ★

(வாரஇதழ்)

அறிவு வளர்ச்சிக்கு அனைவரும் வாசிக்க

## அர்ச்சுனா

(திங்களிதழ்)

த நியூ உதயன் பப்ளிகேசன் பிறைவேட் லிமிட்டெட்
15, 2-ம் ஒழுங்கை
மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805
22073

★ பணத்தின் பெறுமதியை அதிகரிக்க

வைப்புச் சான்றிதழ்!

★ மாதாந்தம் நிரந்தர வருமானம் பெற

நிலையான முதலீடு!!

★ உழைக்கும் போதே சேமிக்க

முதலீட்டுச் சேமிப்பு!!!

இவை

நிதித்துறையில் நாணயம் மிக்க நண்பன்

✷ ஷப்ரு ✷

வழங்கும்

நிறைவான பணப் பெருக்கத் திட்டங்கள்

தொகை குறைவாக இருந்தாலும் முதலீடு செய்து உங்கள் நிதி நிலையை வளமாக்க நீங்கள் நாடவேண்டிய ஓரே இடம்

ஷப்ரு யுனிக்கோ நிதி நிறுவனம்

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4
தொலைபேசி: 589310,
500576

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 22073,
24805

SITHY
EE/31
RY
HY VI LAI WEST
EA NAKAM



திரு. து. வைத்திலிங்கம்

கலைஞர்கள் பிறக்கிறார்கள்; அவர்கள் உருவாக்கப்படுவதில்லை. சிலரை வேறு சிலர் உருவாக்குவதாகவும், சிலர் தம்மைத் தாமே உருவாக்குவதாகவும், சொல்லப்படுவது உண்டு. இயற்கையிலேயே ஒருவரிடம் கலை ஆற்றல் இல்லையெனின் அவன் எவ்வழியிலும் சிறந்த கலைஞனாக மிளிர முடியாது. எழுத்தாளர்களும் கலைஞர்களே.

திரு. து. வைத்திலிங்கம் ஒரு பிறவி எழுத்தாளர். கடந்த இரு தசாப்தங்களாக சிறுகதைகள், குறுநாவல்கள், நாவல்கள், கட்டுரைகள் என்று எழுதிச் 'செஞ்சரி' தாண்டியவர். ஆனால் தன்னடக்கம் மிகுந்தவர். தற்புகழ பேசி, பிரசாரம் நாடி தன்னை உயர்த்திக் காட்ட விரும்பாதவர். தமது மன உணர்வுகளை எழுத்தோவியங்கள் ஆக்குவதோடு ஆத்மதிருப்தி கொள்பவர்.

ஆனால் அவரது கற்பனை வளம் மிகுந்த ஆற்றலும், அலாதியான தமிழ்நடையும், அவர் ஓர் சிறந்த எழுத்தாளன் என்பதை இனங் காட்டிக்கொடுத்துவிட்டன.

1965 இல் சுதந்திரனில் இளம் எழுத்தாளராக முளை கொண்ட அவர், தமது படைப்பிலக்கியப் பணியைத் தொடர்ந்து, பண்பட்ட எழுத்தாளராகப் பரிணமித்த பெருமைக்கு உரியவர்.

ஆழமான கருத்துக்களைத் தெளிந்த சிந்தனையுடன் இலகு தமிழில் எழுதி மக்கள் மனதில் பதிப்பவர். அதனால் அவர் வாசகர்களினால் ஆதரவைப் பெற்றுப் பல சிறுகதை, குறுநாவல் போட்டிகளில் முதற் பரிசுகள் வாங்கியுள்ளார்.

'சிறைப் பறவைகள்' அவரது இரண்டாவது குறுநாவல் 'சஞ்சீவி' யில் வெளிவந்த முதலாவது குறுநாவல் என்ற சிறப்பைப் பெற்றது. வாசகர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டது.

இலங்கை நிர்வாக சேவையின் ஓர் உதவி அரசாங்க அதிபர் என்ற உயர் பதவியைவிட திரு. வைத்திலிங்கத்தை உயர்த்திக் காட்டுவது அவரது பண்பட்ட பவ்வியமான எழுத்துக்களே.

ம. வ. கானமயில்நாதன்,
பிரதம ஆசிரியர்,
உதயன்-சஞ்சீவி.